

ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
மார்கழி
2019
264ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்**
**ஆற்றல் புரிந்தார்க ணில்.**

பொருள் : வரம்பினுள் நிற்றல் என்னும் பெருமையை விரும்பினவரிடத்தில் களவு என்னும் மயக்கம் இருக்கமாட்டாது.

(287)

**அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்**
**களவறிந்தார் நெஞ்சிற் கரவு.**

பொருள் : களவிற் பழகினவரது மனத்தில் வஞ்சனை, உலக நடையின் தன்மைகளை ஆராய்ந்தறிந்தவரது நெஞ்சில் அறம் நிற்றல் போல நிலைபெற்றிருக்கும்.

(288)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே


இலங்கையானே




**கலிவிருத்தம்**

அம்மை யப்ப னரிய சகோதரர்
இம்மை யில்லிறை யென்றுநீ ரெண்ணியே
மும்மைக் காலத்தும் போற்றீ ரிலங்கையான்
செம்மை யானசொன் முத்தியிற் சேர்க்குமே 09

போன காலத்தை யெண்ணிப் புகையுநீர்
ஞான நாயகன் நற்பதம் போற்றுவீர்
ஈன மானவை யேகு மிலங்கையான்
மோன நல்கு மொழிதனை உள்ளுமின் 10


ஞானச்சுடர்
வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 264



2019 **பொருளடக்கம்** மார்கழி


| | | |
|---|---|---|
| பிரபஞ்சம்... | இ. சிவராசா | 01 – 05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 – 09 |
| உத்தமர் உள்ளம்... | கே.எஸ். சிவஞானராஜா | 10 – 14 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 15 – 17 |
| ஆன்மீக வாழ்வு | கு. சோமசுந்தரம் | 18 – 21 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 22 – 27 |
| மாதா பிதா குரு தெய்வம்... | பு. கதிரித்தம்பி | 28 – 29 |
| கந்தபுராணத்து வள்ளியம்மை... | மு. கௌரிகாந்தன் | 30 – 32 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 33 – 34 |
| திரு+ வாசகம்= திருவாசகம் | முருகவே பரமநாதன் | 35 – 37 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 38 – 39 |
| தீட்சையின் வகைகள் | திருமதி சி. சரோஜினிதேவி | 40 – 42 |
| மனிதனும் தெய்வமாகலாம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 43 – 44 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 45 – 48 |
| ஆருத்திரா தரிசனம் | ஆர்.வீ. கந்தசுவாமி | 49 – 50 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 51 – 54 |
| கதிர்காமம் கந்தவனம் நல்லூர் | வல்வையூர் அப்பாண்ணா | 55 – 60 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# கார்த்திகைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 263ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றுவதாக இருந்த இளைப்பாறிய அதிபர் திரு ச. நவரத்தினராசவேல் வருகைதர முடியாத நிலையில் ஆலய வழிபாட்டுக்கு வருகை புரிந்த இளைப்பாறிய அதிபர் பு. கதிரித்தம்பி அவர்கள் பேரவையினர் வேண்டுகோளை ஏற்று மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றினார்.

சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சகலவித சமய, சமூகப் பணிகளைப் பற்றியதாக அவரது ஆரம்ப உரை அமைந்திருந்தாலும் மலருக்குரிய வெளியீட்டுரையினை கனகச்சிதமாக ஆற்றி இருந்தார்கள். வடபுலத்தில் ஆன்மீகம் சார்ந்த மலர் பல வெளிவந்தாலும் ஞானச்சுடர் அவை எல்லாவற்றையும் தாண்டி யாவர்க்கும் முன்மாதிரியாக விளங்குவது சந்நிதி வேலவனது பெருங் கருணை என்றே கூறவேண்டும். வயது முதிர்ந்த காலத்திலும் தனது ஆக்கங்களும் மலரில் இடம்பெறுவதன் காரணமாக பலவிதமான ஆக்கங்களை எழுதுவதற்கு தூண்டுகோலாக இம் மலர் விளங்குகிறது. இம்மலர் தொடர்ந்தும் வெளிவர வேண்டும். தொடர்ந்து வெளிவரும் காலங்களில் அனுபவம் வாய்ந்தவர்களின் ஆக்கங்களுடன் இளம் எழுத்தாளர்களின் ஆக்கங்களும் கூடுதலாக இடம்பெற வேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**


ஞானச்சுடர் கார்த்திகை (263) மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடும், பேரவையோடும் நெருங்கிய ஈடுபாடுடைய சைவப்புலவரும், அதிபருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஒரு மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றுவதென்பது மிகவும் கடினம். அம் மலரைப்பற்றி பூரணமாக அறிந்த பின்பே மலருக்குரிய மதிப்பீட்டுரையை ஆற்றமுடியும். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தொடராக மாதாந்தம் வெளிவரும் இம்மலருக்குரிய வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையை பலவித ஆற்றல் உள்ளவர்களால் மாதாந்தம் தொடராக இடம் பெறுவதாலும், எனக்கும் இம்மலர் தொடர்ந்து வருகின்றமையாலும் அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கி இம்மலருக்குரிய மதிப்பீட்டுரையை ஆற்றுகின்றேன் என்று கூறியதோடு, மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக்கூறினார். மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் ஏதோ வகையில் ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகவும் அந்தந்த மாதங்களில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளையும் உள்ளடக்கி மலர் வெளிவருவதாலும் மலரது வெளியீடு ஒரு காத்திரமாக அமைகின்றது என்று கூறி மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்த காலம் சைவ உலகிற்கும் - தமிழ் மக்களுக்கும் ஒரு பொற்காலம் எனலாம்.

சந்நிதியான் ஆச்சிரமத்தோடு அவர் கொண்டிருந்த ஈடுபாடு அவரது பதவிக் காலத்திற்கு முந்தியது. அதனாலேயே நெருக்கடியான போர் சூழலில் வைத்திய சாலைகளுக்கு மருந்து வகைகளும், கோவில்களுக்கு எண்ணையும் ஆச்சிரமத்தினூடாக



வழங்கப்பட்ட அரிய பணியானது காலத்தால் மறையாதது. இவற்றைவிட, இவரது நிதிப் பங்களிப்பின்மூலம் புனரமைக்கப்பட்டுப் பொலிவடைந்த கோவில்கள் பலப்பல.

தியாகராசா மகேஸ்வரன் மறைந்து ஆண்டுகள் பதினொன்று ஆகிவிட்ட போதிலும், தம் பதவிக் காலத்தில் அன்னார் ஆற்றிய பணிகளும் - உதவிகளும் காலம்பூராகவும் நிலைத்திருக்கும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

மணம தின்று நாளை யெனமொ ழிந்து கேளு
        மனைக ளெங்கு மோடி யினிவி ரைந்து தேடு
வளையல் குழைபீலி காலாழி தண்டை
        மணிவ யிரவீடு மேலீடு செம்பொன்
வாளி பாடக மணிபிறை சங்கிலி
        பாளை சூடக மயில மிலம்பகம்
மவுலி நூபுர மயில்திரு வாசிகை
        சவடி தோள்வளை முகவளை மேல்வளை
மரகத குண்டலம் வெண்டய மேகலை
        யரசிலை கம்பி குறுங்குணி சாலகம்
வாரணி யுடைமணி யாரங் கிங்கிணி
        வாகுவ லயநெளி பீடங் கண்டிகை
மணிமக ரிகைவளி திகிரி பட்டிகை
        பணிகளி லழகிய பணிகள் கொக்கிகள்
வட்ட வம்பொ னோலை முத்தாவளி
        சுட்டி சந்து காறைகைக் காறைகள்
வடக முத்தோலை யரைவட முஞ்செறி
        கடகம் வித்தார மகர நெடுங்குழை
மாதரணி தாலி நூல்காஞ்சன
        மாலிகை மதாணி பீதாம்பரம்
மதிப்பரிய கைச்சரி சரப்பணி யிலைச்சினை
        பதக்க மிவையுட்பட வணிப்படல மிட்டுவை
மாடை பாட்டிபு தைத்த குடப்பண
        மோடு கூட்டியு ருக்கவி ருப்புடன்.

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. தபேசன்
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
மு. சுஸ்ருதன்
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
வே. சம்பந்தநாதன்
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
சி. முஜீபன்
(இணுவில்)
செல்வி க. பாமதி
(கொக்குவில்)
திருமதி திருச்செல்வம் விஜிதா
(கூவில், புலோலி தெற்கு)
செ. சின்னத்துரை
(ஆசிரியர், மகாத்மா வீதி, நெல்லியடி)
சி. வீரசிங்கம்
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
த. வயித்திலிங்கம்
(திருநெல்வேலி)
சி. சந்திரசேகரம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
சி. தில்லைமணி
(வட்டுக்கோட்டை)
வ. அப்புத்துரை
(வல்வெட்டித்துறை)
மா. மகாலிங்கம்
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
ச. தமிழ்ச்செல்வம்
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)
திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
(சுழிபுரம் மேற்கு)
S. சிவலிங்கராசா
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**வ. துரைராசலிங்கம்**
(சுண்ணாகம் கிழக்கு)
**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**T. நாகராஜா**
(கரந்தன், நீர்வேலி)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**பொ. சந்திரமோகன்**
(யாழ்ப்பாணம்)
**சி. நீலையினார்**
(இடைக்குறிச்சி, வரணி)
**இராஜேந்திரம் கஜீபன்**
(சண்டிலிப்பாய்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)
**தி. சிவபாதசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**சு. ஸ்ரீஸ்கந்தராசா**
(பலாலி வீதி, திருநெல்வேலி)
**நடராஜா சறோஜா**
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)

சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
சோம சூரியசிங்கம்
(கோண்டாவில்)
S.R. சரவணபவன்
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
க. வாமதேவன்
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
திருமதி ச. செல்வறஞ்சனா
(சுண்ணாகம் கிழக்கு)
S. மனோகரன்
(மாதா கோயிலடி, கோப்பாய்)
த. ஜெயவதனா
(அல்வாய்)
அன்புமலர் சிதம்பரநாதன்
(வட்டுக்கோட்டை)
த. சுகந்தன்
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
சி. சோமகுலசேகரம்
(கரவெட்டி)
சி. சரவணப்பெருமாள்
(மாணிக்கவளவு, கரணவாய்)
சிவலிங்கம் தேவமலர்
(அச்சுவேலி)
S. கணேசமூர்த்தி
(கெருடாவில், தொண்டைமானாறு)
S. சத்தியமூர்த்தி
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
சு. சிவலிங்கம்
(குகன்குடிசை, பொலிகண்டி)
பா. பாலச்சந்திரன்
(சண்முகபவனம், மயிலணி)
செ. அரியானந்தம்
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
N. குணரெட்ணம்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
V. சிவனேசன்
(கமலை, மானிப்பாய் வீதி)

க. முருகானந்தன்
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
செ. உலகநாதபிள்ளை
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
செ. இராசதுரை
(வட்டுக்கோட்டை)
இ. பாஸ்கரன்
(சுதுமலை வடக்கு)
சே. புலேந்திரன்
(நீர்வேலி)
இ. நடராசா
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
பொ. செல்வகிருஷ்ணன்
(புலோலி தெற்கு, புலோலி)
சி. சிவசுப்பிரமணியம்
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
அ. பரமநாதன்
(தெல்லிப்பழை)
திருமதி கமலா குணரெத்தினம்
(வட்டுக்கோட்டை)
திருமதி சத்தியவாணி நந்தகுமார்
(நவாலி, மானிப்பாய்)
கந்தையா செல்வக்குமார்
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
திருமதி அன்னலெட்சுமி
(சங்கானை)
சு. சண்முகரட்ணம்
(புத்தூர்)
சோமசுந்தரம் செல்வசுந்தரம்
(மீசாலை கிழக்கு)

ஞானச்சுடர் வாசகர்களுக்கு எமது இதயங்கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2020

# பிரபஞ்சம் - மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்

– திரு இ. சிவராசா அவர்கள் –

ஆதி மனிதன் வியப்புடன் நோக்கிய பிரபஞ்சத்தின் தோற்றம் நாகரீகமடைந்த தற்கால மனிதனுக்கு இன்னும் வியப்பாகவே விளங்குகின்றது. விஞ்ஞான ரீதியில் இப்பிரபஞ்சத்தின் அமைப்பு பற்றிய பூரண அறிவை நாம் இன்னும்தான் பெற்றுவிட முடியவில்லை. நம் கண்முன் தோன்றும் பிரபஞ்சத்துக்கப்பால் மறைந்திருக்கும் பேரதிசயங்கள் பல. ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்புக்கும் பின்னால் அற்புதங்கள் அதிகமாகிக்கொண்டே இருக்கின்றன. சுருங்கக் கூறின் மனிதனின் உடல் அமைப்பும் அதனுள் நிகழும் அதிநுட்பமான செயற்பாடுகளும் அளவுகடந்த வியப்பைத் தருவனவாக உள்ளன. விஞ்ஞானிகளும் தத்துவ ஞானிகளும் புரிந்துகொள்ளவேண்டியவை இன்னும் எவ்வளவோ மனிதனில் மறைந்து கிடக்கின்றன. உதாரணமாக மூலாதாரச்சக்கரம் முதல் சகஸ்ராரச் சக்கரம் வரையான ஏழு சக்கரங்களின் அமைப்பையும் செயற்பாட்டையும் முழுமையாக இதுவரை விஞ்ஞானத்தால் அறியமுடியவில்லை. ஆனால் குண்டலினி சக்தியானது மூலாதாரச் சக்கரத்திலிருந்து மேல்நோக்கி எழும்போது வெளிப்படுத்தும் மின்காந்த அலைகளை கண்டறிவதற்கான கருவிகளை மாத்திரம் உருவாக்க முடிந்துள்ளது.

இப் பிரபஞ்சத்தில் விளங்குகின்ற அசையும் அசையா சராசரங்கள் அனைத்துக்கும் காரியப்பொருளாக விளங்குவது பிரபஞ்ச சக்தி எனப்படும் அந்தப் பேருணர்வேயாகும். தானாகவே வியாபித்து எல்லாவற்றையும் கடந்து அழிவற்றதாக விளங்கும் அதிசூக்குமப் பொருளே கடவுள் என்பதாகும். இதையே "ஊழிமுதல் ஒன்றாய் நின்றவன்" எனத் திருவெம்பாவையும் "ஒன்றே எனின் ஒன்றேயாம் பலவென்றுரைக்கின் பலவேயாம்" எனும் கடவுள் வாழ்த்துத் தொடரில் கம்பரும் குறிப்பிடுகின்றார். கால தேசத்துக்கப்பாற்பட்டதான இப் பேருணர்வின் பரந்து விரிந்த தோற்றமே இப் பிரபஞ்சமாகும். காலதேசத் தொடர்பு விஞ்ஞானிகளால் சமீப காலத்தில் கண்டறியப்பட்டதொன்றாகும். சர்வ வியாபியான பேருணர்வானது எள்ளில் எண்ணெய் போலவும் பாலில் நெய்போலவும் உள்ளும் புறமும் சூக்குமமாக மறைந்து காணப்படுகிறது. எங்கும் பரவி நிற்கும் ஆதி அந்தம் இல்லாத எல்லையற்ற அந்தப் பேருணர்வுக்குள்ளேயே எல்லாம் நிகழ்வதால் அது என்றும் பூரணமாகவே நிலைத்து நிற்கின்றது.

ஆதியில் சக்திகளனைத்தும் ஒன்றாகச் சமைந்து ஒரு பரமாணுவாக இருந்ததென்றும் அதுவே அளவுகடந்த சப்தத்துடன் கணக்கிட முடியாதளவு உஷ்ணத்தை வெளிப்படுத்தி திடீரென வெடித்தது என்கின்றனர் விஞ்ஞானிகள். (Big Bank Theory) அப்போது அதனுள் ஒடுங்கியிருந்த சக்திகளனைத்தும் நாலாபுறமும் சிதறுண்டன. இந்த சக்தித்துகள்களின் வேகம் ஒலியின் வேகத்தை மிஞ்சியபோது அவை உஷ்ணம் குறைந்து ஒன்று சேர்ந்து வாயுவாகவும் திரவமாகவும் உறை பொருள்

ஆகவும் பரிமாணம் அடைந்தன. இவையே கோடிக்கணக்கான கோள்களாக நமக்குத் தோற்றமளிக்கின்றன என்றனர். இவ் வியப்பூட்டும் நிகழ்வை எமது சாஸ்திரங்கள் "அக்ஷர சம்பவம்" என்று குறிப்பிடுகின்றன. ஆதியில் வெளிவந்த ஓசையே "ஓம்" என்றும் ஓங்காரத்திலிருந்தே அனைத்தும் தோற்றம் பெற்றன என்றும் விளக்குகின்றன. சூரியன் சந்திரன் ஒன்றல்ல. பல உண்டென்பதை அண்மைக் காலத்தில்த்தான் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் நமது பழம்பெரும் கந்தபுராணத்தில் சூரபன்மன் வதைப்படலத்தில் அவனது ஆட்சிக்குட்பட்ட மற்றைய அண்டங்களிலிருந்து வந்த படைகள் திசை தொறும் பரவியபோது இருள் சூழ்ந்து கொண்டதை கண்ட சூரபன்மன் மற்றைய அண்டங்களிலுள்ள சூரியர்களை உதவிக்கு அழைத்தான் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அக்ஷர நிகழ்வின்போது ஐம் பூதங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வரிசையாகத் தோன்றியதை "வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும் நெருப்பிடை நீரும் நீரிடை புவியும்" என்று வடலூரார் வர்ணிக்கிறார். திருமூலரும் ஓங்காரத்துள்ளே ஐம்பூதங்கள், ஓங்காரத்துள்ளே உதித்த சராசரமென்றார். இதிலிருந்து விஞ்ஞானமும் வேதாந்தமும் ஓரளவு ஒத்துப் போவது விளங்கும். இந்த அக்ஷர சம்பவம் நிகழ்ந்த காலத்தை விஞ்ஞானிகள் உத்தேசமாகக் குறிப்பிட்டாலும் அது பூமியில் பயன்படுத்தப்படும் கால அளவை தழுவி நிர்ணயிக்கப்பட்டதாகும். எல்லாம் சூனியமாய் இருந்த அவ்வமயம் நமது கால அளவைக்கொண்டு அளந்தறிவது சரியானதாக இருக்கமுடியாது. ஆகையால் பேருணர்வான அந்தப் பரம்பொருள் சங்கல்பித்த உடனேயே பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் தோற்றம் பெற்றன என நமது சாஸ்திரங்கள் கூறுவது தவறாகாது. இதையே "எல்லா உலகமும் எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும் எண்ணரிய வல்லாளன் ஆதிபரமசிவனது சொல்லிலாகுமே" என இடைக்காடர் சித்தர் கூறினார். ஜடப் பொருள்கள் சக்தியாகவும் சக்திகள் உறைந்து ஜடப்பொருளாகவும் மாறிக்கொண்டேயிருக்கின்றன என்கிறது விஞ்ஞானம். ஆனால் நமது வேதாந்தம் மேலும் ஒருபடி தாண்டி ஜடப் பொருள்கள் சக்தியாக மாறி அதே பேருணர்வில் மறைந்துவிடுகின்றன என்று கூறுகின்றது. இவ்வாறு சாஸ்திரங்கள் தரும் விளக்கங்கள் மெஞ்ஞானிகளால் அனுபவபூர்வமாகக் கூறியவையாதலால் அவற்றை ஏற்கவோ மறுக்கவோ விஞ்ஞானிகளிடம் தகுந்த சாதனங்கள் இது வரை இல்லை.

சமீப காலத்தில் அணுவுக்குள்ளும் இயங்கும் சக்திகளை ஆராய்ந்தறிந்த விஞ்ஞானிகள் கூறும் சில நிகழ்வுகள் சாஸ்திரங்களின் கூற்றை உறுதிப்படுத்துகின்றன. ஆகாயம் ஒரு காலியான வெட்டவெளி அல்ல என்றும், மாறாக அதில் சர்வகாலமும் சக்தித் துகள்கள் கற்றை கற்றையாக கதிர்கள் போலத் தோன்றி கணநேரம் வேகமாகக் கூத்தாடி மறுபடியும் எங்கேயோ மறைந்து விடுகின்றன என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்தச் சக்தித்துகள்களின் அற்புத நடனத்தைப்பற்றி அறிந்திருந்த நம் முன்னோர்கள் அதனை சிவனின் ஆனந்தத் தாண்டவமாக சித்தரித்து விளக்கியுள்ளார்கள். இந்தச் சக்திக் கதிர்கள் எங்கிருந்து எவ்வாறு தோன்றி மறைகின்றன என விஞ்ஞானிகள் இதுவரை கண்டறிய முடியவில்லை. ஆனால் இந்தச் சக்திக்கதிர்கள் தோன்றும் இடங்களை சக்திக் கதிர் மண்டலம் எனப்பெயரிட்டு அது அழிக்கப் படமாட்டாதது என்றும் கூறுகிறார்கள். நமது

முன்னோர்கள் இதை ஏற்கனவே அறிந்திருந் தார்கள் என்பதற்குச் சான்றாக "மேருவினூடே விரிகதிர் மண்டலம்" என்று திருமூலர் பகர்ந் துள்ளார். சக்திக்கதிர் மண்டலத்தைப்பற்றி விஞ்ஞானிகளின் விளக்கத்தின் நோக்கில் ஜடப்பொருள்களுக்கும் பரந்த வெளிக்கும் இடையே காணப்படும் பேதங்களெல்லாம் மாயை என்பது தெளிவு. நம் சாஸ்திரங்களில் கூறப்படும் பஞ்சபூதங்களின் முதலாவதான ஆகாசம் சக்தி மண்டலத்தையே குறிப்பதாகத் தோன்றுகிறது. ஆதாரமாக தமிழகத்திலுள்ள சிதம்பரம் கோயிலில் சிவனை ஆகாசமாக வழிபடுகின்றனர் என்பதை அறிவோம். மூலவ ரான நடராஜமூர்த்தி பஞ்சலோகத்தில் வடிக் கப்பட்டு இதற்கருகில் வெள்ளியினால் புனைந்த வில்வமாலையிடப்பட்ட ஒரு வெற்றிடத்துக்கு அர்ச்சகர் தீபாராதனை செய்கின்றனர். இந்த சிதம்பர ரகசியமே கதிர்மண்டலம் என்றும் அதில் ஆனந்த நடனமிடும் சிவமே அந்த மூர்த்தி என்றும் தெளிவுறலாம். சதாசர்வ காலமும் தோன்றி நடமிட்டு மறையும் சக்திக் கதிர்களே எல்லா ஜீவராசிகட்கும் ஜடப் பொருள்களுக்கும் மூலம் என்பது தெளிவு.

அணுவைச் சார்ந்த பல சக்திகளும் புவியின் ஈர்ப்பு சக்தியும் ஒரு மூலத்திலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டுமென்று விஞ் ஞானிகள் சூசகமாக எண்ணினாலும் ஆதி காரணப்பொருள் எது என்பதை அவர்கள் இன்னும் கண்டறியவில்லை. மேற்கூறப்பட்ட அந்தப் பேருணர்வு பிரபஞ்சத்தில் இயங்கு வதை பாமர மக்களும் விளங்கும்படி அதனின்று தோன்றிச் செயற்படும் ஒவ்வொரு சக்திக்கும் ஒவ்வொரு ரூபமும் நாமமும் கொடுத்து உரு வகப்படுத்தினார்கள் நம் முன்னோர்கள். இத னால் இந்துக்கள் பல கடவுள்களை வணங்கு கிறார்கள் என்பது தவறாகும். பரம்பொருளில் இருந்து தோன்றும் அனைத்தும் தெய்வத்துவம் வாய்ந்தவை என்றும் எல்லா சக்திகளும் பரம் பொருளின் மறுக்கமுடியாத ஆணைக்கும் நீதிக்கும் உட்பட்டே இயங்கி அதிலேயே நிலைத்து நிற்கின்றன என்பதும் புலனாகின் றது. பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்தும் பரம்பொருளின் படைப்பல்ல. அதன் பரிமாணம் என்பதே உண்மை. "அண்ட பிண்டமெல்லாம் அணுவுக்கணுவாய் நீ கொண்ட வடிவின் குறிப்பறியேன்" என்கிறார் பட்டினத்தார். பேருணர்வான அப்பரம்பொருள் பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு மட்டுமன்றி அது நிலைத்து நிற்பதற்கும் மூலகாரணமாய் விளங்குகின்றது.

பிரம்மனின் விடியற்காலையில் பிர பஞ்சமெல்லாம் வெளிப்பட்டு பின்னர் பிரம் மனின் இரவில் அவனிடமே ஒடுங்கிவிடுகின்றன என்ற கருத்தை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது பிரம்மனின் பகற் பொழுது ஒரு யுககாலமாகும். இரவென்பது பிரளயகாலமாகும். இந்த அற்புத நிகழ்ச்சியை ஒரு சிலந்திப்பூச்சியானது தன்னுடைய வலையை தன்னிடமிருந்தே வெளிப்படுத்தி பின் தன்னுள்ளே இழுத்துக்கொள்வதுபோல என்று இராமகிருஷ்ணர் விளக்கம் கூறுவார். அவ்வாறே ஈசன் பிரபஞ்சத்தை தன் அகத் திலிருந்து தோற்றுவித்து அப்பிரபஞ்சத்திலேயே சூக்குமமாக வீற்றிருக்கின்றார். பிரபஞ்சத்துக்கு காரணப்பொருளாய் விளங்கும் பேருணர்வானது கோடிக்கணக்கான உருவங்கள்மூலம் இயங்கு வதால் உருவங்கள் தொடர்ந்து படைக்கப்பட் டும் அழிக்கப்பட்டும் வருகின்றன. சக்தியிலிருந்து தோன்றியவை உருக்குலைந்து மறுபடியும் சக்தியாக மாறி மறைவதே நியதி. நம்முள் ஆத்மன் இருக்கிறதென்பதைவிட நாமெல்லாம் ஆத்மனுக்குள் இருக்கிறோம் என்பதே உண்மை. கிருஷ்ணபரமாத்மா குருஷேத்திரத்தில்

*எழுதி வைக்காத கணக்கும் உழுது விதைக்காத நிலமும் ஒருபோதும் உருப்படாது.*

தனது விஸ்வரூபத்தை அர்ச்சுனனுக்குக் காட்டியபோது "என்னை எல்லாப் பொருள் களிலும் பார்" என்று கூறவில்லை. "அனைத் தையும் என்னுள்ளே பார்" என்றே காட்டினார். இவ்விளக்கங்களை ஆராய்ந்தால் பரம்பொரு ளான பேருணர்வு ஒன்றே எனினும் அது செயற்படும் விதத்துக்கேற்றவாறு பிரம்மா விஷ்ணு சிவன் என்று அழைக்கப்படுகின்றது. இந்நிலைகளில் செயற்படும் சக்தியை பெண் பாலாக உருவகப்படுத்தி முறையே சரஸ்வதி, லக்சுமி, பார்வதி என சக்தியை வகுத்துள் ளனர். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இம் மூன்று நிலைகளிலும் இச்சக்திகள் மறைந்தோ வெளிப்படையாகவோ இயங்கு கின்றன. அதாவது பிரம்மாவோ சரஸ்வதியை தமது நாவில் மறைத்து வைத்திருக்கின்றார். விஷ்ணு லக்சுமியை வெளிப்படையாகவே தமது மார்பில் வைத்துக்கொண்டுள்ளார். சிவன் தனது உருவத்தில் சரிபாதியை பார் வதிக்கு அளித்துள்ளார்.

தவிர, கர்மவினைத் தத்துவத்தின் அடிப்படையில் எமது சாஸ்திரங்களில் கூறப் பட்டுள்ள மறுபிறப்புக் கொள்கையை ஒரு சில சமயங்களைத் தவிர அநேகமான சமயங் கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அணுவைப் பிளந்து அதன் மூலக்கூறுகளை ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டறிந்தவற்கு மேலாக இறுதியாக ஒரு மூலக்கூற்றை அறிந்து அதற்கு கடவுள் துணிக்கை என்றும் பெயரிட்டுள்ளனர். ஆனால் எமது சாஸ்திரங் களின் நோக்கில் மேற்கூறப்பட்டவற்றைவிட, பலவிதமான சக்திகள் அதி சூக்குமமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன எனப் பகிர்கின் றன. உதாரணமாக ஆன்மீக சாதகர்களுக்கு மூலாதாரத்திலிருந்து மேலெழும் சுழுமுனை நாடியுள் சித்ராணி நாடியும் அதனுள் வைஜ்ரிணி நாடியும் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளதுடன் மிக வும் சக்திவாய்ந்த சாதகர் மாத்திரம் வைஜ் ரிணி நாடியுள் பிரம்ம நாடி இயங்குவதை உணர்வார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சக்திகள் அந்தந்த சாதகரின் பக்குவநிலையிற்கமைவாக ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படுமாம். மேலும், தானெடுத் துக்கொண்ட உடலைவிட்டுப் பிரியும் ஆன்மா ஏழு படிநிலைகளைக் கடக்கின்றதென்றும் ஒவ்வொரு படிநிலையிலும் அதி சூட்சுமம் அடைந்து அபாரசக்தியை பெறுகிறதென்றும் பகரப்பட்டுள்ளது. மணிவாசகரின் சிவபுராணத் தில் வரும் "பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய்" எனும் தொடரை உறுதிப்படுத்தும் விதத்தில் மனித உடற்கூறுகளை ஆராய்ந்த விஞ்ஞானிகள் எலி, குதிரை, மாடு போன்ற பிராணிகளின் மூலக்கூறுகள் இடையிடையே காணப்படு வதாகக் கண்டறிந்துள்ளனர்.

பின்வருவனவற்றுக்கான மூலகாரணத்தைக் கண்டறிவதற்கு இவ்விஞ்ஞான உலகம் இதுவரை முயற்சித்ததாக சான்றுகளில்லை.

01) மனிதப் பிறவி எடுத்த அனைவரினதும் பெருவிரல் அடையாளம் வேறு வேறு வடிவங்களில் அமைந்திருப்பது.

02) ஒருசிலருக்கிடையே இயற்கையாகக் காணப்படும் ஈர்ப்பு விசை அல்லது வெறுப்புணர்வு.

03) சில துறைகளில் சிலருக்கு இயற்கையாகவே காணப்படும் நாட்டம்.

04) ஒரே பெற்றோருக்குப் பிறந்து ஒரே சூழலில் வளர்த்தெடுக்கப்பட்ட பிள்ளைகட்கிடையில் காணப்படும் வேறுபட்ட நுண்ணறிவு மட்டம் மற்றும் குணாதிசயங்கள்.

இதற்கான மூலகாரணத்தை சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் எனும் கர்மவினைப் பயன்கள் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சாஸ்திரங்கள் விளக்கமளித்துள்ளன.

உடம்பை எடுத்த ஆன்மாவானது செவ்வனே இயங்குவதற்கு உசாத்துணையாக உள்ள உறுப்புக்களை மிகவும் நேர்த்தியாக அந்தந்த இடங்களில் அமைத்து அவை ஒருங்கிணைவுடன் செயற்படவும் வைத்திருப்பதானது ஒரு அபாரசக்தியால்த்தான் முடியும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

## என்ன பெயர் வைக்கலாம்

குழந்தை பிறந்ததும் அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று இப்பொழுது அதிகம் யோசிக்கிறார்கள். முன்பெல்லாம் கிடையாது. ஆண் குழந்தை பிறந்தால் தாத்தாவின் பெயரை வைப்பார்கள். பெண் குழந்தை பிறந்தால் பாட்டியின் பெயரை வைப்பார்கள். இரண்டும் சுவாமி பெயர்களாகத்தான் இருக்கும். இப்போதோ சுவாமிப் பெயரை விடுத்து வேறு என்ன நாகரிகமாகப் பெயர் வைக்கலாம் என்று மண்டையை உடைத்துக்கொள்கிறார்கள். மேல்நாட்டார் தங்களுக்கு கல் என்றோ மரம் என்றோ பச்சை என்றோ வெள்ளை என்றோ பெயர் வைத்துக்கொள்கிறார்கள். நாமும் அதுபோல மாறிக்கொண்டு வருகிறோம். இது மிகவும் தவறு.

குழந்தைகளுக்கு சுவாமி பெயர்கள் வைக்கவேண்டும் என்று நம் முன்னோர்கள் கொண்டிருந்த வழக்கத்திற்கு ஒரு அடிப்படைக் காரணம் இருந்தது. விநாயகரை வழிபடுவோர் விநாயகப் பெருமானின் பெயர்களையும் முருகனை வழிபடுவோர் முருகப்பெருமானின் பெயர்களையும் சிவனை வழிபடுவோர் சிவபெருமானின் பெயர்களையும் ஆண்களுக்கு முன்னோர் வைத்திருக்கின்றார்கள். பெண் தெய்வங்களின் பெயர்களை பெண்களுக்கு வைத்திருக்கிறார்கள். வயது ஆக ஆக நமக்குக் குடும்பத்தினர்மீதுள்ள பற்று குறைந்து ஆண்டவன்மீதுள்ள பற்று அதிகரிக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக இப்பொழுது வயது ஆக ஆக குடும்பத்தினர்மீதுள்ள பற்று அதிகரிக்கிறது. அதுவும் பேரன் பேத்திகள்மீது உள்ள ஆசை அதிகமாக உள்ளது. இந்தப் பாசத்தைப் பயன்படுத்தி நம் பெரியவர்கள் நம்மை ஆண்டவனை நினைக்க வைத்தனர். பேரன் பேத்திகளுக்கு சுவாமி பெயர்கள் வைத்தால் அந்தப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடும்போது அப்பொழுது ஆண்டவன் ஞாபகம் வரலாம். அப்படி வராவிட்டாலும் கடைசி காலத்தில் பகவான் பெயரைத் தெரிந்தோ தெரியாமலோ சொன்னாலும் முத்தி உண்டு என்கிறார்கள் பெரியவர்கள்.

பாகவதத்தில் வரும் அஜாமிளன் கதை இதைத்தான் நிருபிக்கிறது. அவன் பகவான் நாராயணனைக் கூப்பிடவில்லை. தன் கடைசி மகன் நாராயணனைத்தான் கூப்பிட்டான். இருந்தும் விஷ்ணு தூதர்கள் யமதூதர்களிடம் வாதிட்டு அவனை வைகுண்டம் அழைத்துச் செல்லுகின்றனர்.

தெரிந்தோ தெரியாமலோ நெருப்பில் கை வைத்தால் அது சுடும். அதுமாதிரித்தான் பகவான் நாமமும். தெரிந்து சொன்னாலும் பலன் கொடுக்கும்- தெரியாமல் சொன்னாலும் பலன் கொடுக்கும். கடைசி மூச்சின்போது அவன் நாமத்தைச் சொல்ல நமக்கு அப்பொழுது நம் பொறிகள் நம்வசம் இருக்காது. அதற்காக அப்போதைக்கு இப்போதே அவன் நாமத்தைச் சொல்லு என்று சொல்லிக்கொடுக்கிறார்கள் பெரியவர்கள்.

எனவே சிறுவயதில் இருந்து நல்ல சிந்தனைகளை உருவாக்க நமது முன்னைய பெரியவர்கள் காட்டிய நற்பாதைகளை கடைப்பிடித்து நல்லபெயர்களை வைத்து இறை சிந்தனையை வளர்ப்பதன்மூலம் நல்ல பயனை அடையலாம்.

-க. சிவசங்கரநாதன்-

*எளிமையும் கட்டுப்பாடும் நற்பண்பும் சேர்ந்தால் யாராலும் வெல்ல முடியாது.*

(தொடர்ச்சி...)

# திருச்சதகம்

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –

(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 10. ஆனந்தாதீதம்

97. பொருத்தம் இன்மையேன் பொய்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோஎன் எம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

**ப-ரை:**

கமல மலர் பாதனே- தாமரை மலர் போன்ற திருவடிகளையுடையவனே, அரத்த மேனியாய்- செந்நிறமான திருமேனியையுடையவனே, என் எம்பிரான்- என்னுடைய எம்பிரானே, பொருத்தம் இன்மையேன்- நின்னை உடனே அடைதற்குரிய தகுதியில்லாதேன், பொய்மை உண்மையேன்- பொய்யுலக வாழ்வில் இருக்கவேண்டிய நிலைமையை உடையேன், எனை போத என்று புரிந்து நோக்கவும்- அத்தகைய என்னை வருக என்று அழைத்து விரும்பி அருட்பார்வை நல்கவும், வருத்தம் இன்மையேன்- நின்னை விரைந்து அணுகும் முயற்சி யில்லாதேன், வஞ்சம் உண்மையேன்- மயக்கமுடையேன், மாண்டிலேன்- அவற்றால் இறந்தொழிந் திலேன், அருள்செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி- நின்னால் அருள் செய்யப்பட்ட மெய்யடியார்களும் நீயும் சிவபுரத்துக்கு எழுந்தருளி, எனை இங்கு இருத்தினாய்- சிறியேனைப் பொய்யுலக வாழ்வில் இருக்குமாறு பணித்தாய், முறையோ- இது உனக்குத் தகுதியோ? வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே- நிலையில்லாதேனாகிய எனது பிராரத்த வினைக்கு ஓர் அழிவில்லையோ?

கமல மலர்ப் பாதனே, அரத்த மேனியாய், என் எம்பிரான், நின்னை உடனே அடைதற்குத் தகுதியில்லாதேன், பொய்யுலக வாழ்க்கையில் இருக்கவேண்டிய நிலைமையையுடையேன், அத்தகைய எனை வருக என்று அழைத்து அருட்பார்வை நல்கவும், நின்னை விரைந்து அணுகுதற்கு முயற்சியில்லாதேன், வஞ்சமுண்மையேன், அவற்றால் இறந்தொழிந்திலேன், நின்னால் அருள் செய்யப்பட்ட நின் மெய்யடியார்களும் நீயும் சிவபுரத்துக்கு எழுந்தருளி

என்னை இப் பொய்யுலக வாழ்வில் இருக்குமாறு பணித்தாய், இது முறையோ? நிலையில்லா தேனாகிய எனது பிராரத்த வினைக்கு இறுதி இல்லையோ? அதனை அழித்துக் கதியருள வேண்டும் என்பதாம்.

பொருத்தம்- உடனே கதி அடைதற்குரிய தகுதி. பொருந்தற்குரியதான அத்துவிதக் காட்சி என்பாருமுளர். உண்மை- உள்ள தன்மை. பொய்மை யுண்மை பொருத்த மின்மைக்கு ஏதுவாகும். போத- போதுக; வருக. வருத்தம்- முயற்சி "ஆற்றின் வருந்தா வருத்தம்" (குறள் 68) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈண்டு வருத்தம்- நின்னை விரைந்து அணுகுதற்கேற்ற முயற்சியைக் குறித்தது. வருத்த மின்மைக்கு வஞ்சமுண்மை ஏதுவாகும்.

பொய்மையுண்மையும் பொருத்தமின்மையும் வஞ்சமுண்மையும் வருத்தமின்மையும் ஆகிய இக்குறைபாடுகளையுடையேன் அவற்றால் உடனே இறந்துபட்டிருக்கலாம். அதவும் செய்ய முடியாதவனாயினேன் என்பார், மாண்டிலேன் என்றார்.

அரத்தம்- ரத்தம் என்னும் வடமொழி. அகரத்தை முதலிற் பெற்று வந்தது. சிவப்பு என்பது பொருள். "அரத்த மேனியர் அடும்படை ஏந்துங் கரத்தர்" (கந்த. முதனாட் 82) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அங்கு என்றது சிவபுரத்தை. எழுந்தருளி என்றது புறப்பட்டுச் சென்றருளி என்றவாறு. இங்கு என்றது பொய்யுலக வாழ்வினை. இருத்தினாய்- இருக்கவென்று கட்டளையிட்டருளினாய்.

முறையோ என்றது ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின் கருணைக்கு என்னையும் உடன் அழைத்துச் சேறல் இயலாத தொன்றன்று. அங்ஙனமாகவும் அழைத்துச் செல்லாது இங்கு ஏனை இருத்தியது தகுமோ என அடிகள் இரங்கிக் கூறியவாறு. என் எம்பிரான் என்பது என்னுடைய தலைவனே என உரிமை தோன்றக் கூறியவாறு "நின் கழலினை யலாதிலேன் என் எம்பிரான்", "பொய்மையேன் என் எம்பிரான்" (சத 76,77) எனப் பிறாண்டுமருளியவாறு காண்க. வம்பு- நிலையின்மை. வினை- பிராரத்த வினை. இல்லையே என்புழி ஏகாரம் வினா. வினைக்கு இறுதியில்லையேயாயினும் அவ்வினையை அழிவு செய்தருள வேண்டும் என்பது குறிப்பு.

இதன்கண், அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி இங்கெனை இருத்தினாய் முறையோ? வினைக்கிறுதியில்லையே என்பவற்றால் ஆனந்தாதீத விருப்பம் மிகவுண்மை புலப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 93.

98. இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே.

**ப-ரை:**

மறுஇல் வானனே- குற்றமற்ற சிதாகாசத்திலுள்ளவனே, ஏலம் ஏலும் நல் குழலி பங்கனே- மயிர்ச் சாந்து பொருந்தும் நல்ல கூந்தலையுடைய உமையம்மையை இடப்பாகத்திலுடையவனே, நின் கழற்கு அன்பு அது என்கண் இல்லை- நின் திருவடிக்குரிய மெய்யன்பு என்னிடத்தில் இல்லை; அங்ஙனமாகவும், கல்லை மென் கனி ஆக்கும் விச்சை கொண்டு- மகா மேரு மலையை மென்மையான கனிபோல இழகச் செய்து வில்லாக வளைத்த வித்தையினாலே, என்னை நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்- கல்போன்ற மனமுடைய என்னை நின் திருவடிக்கு அன்புடையவனாகச் செய்தனை; எம்பிரான்- எம்பெருமானே, நின் கருணை எல்லை இல்லை- நின் திருவருளுக்கு ஓர் அளவு இல்லை; நான் ஏதுகொண்டு ஏது செய்யினும்- நான் எதனைக் கருவியாகக் கொண்டு எத்தீய செயல்களைச் செய்தாலும், எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்க வல்லையே- குறைவுடையேனாகிய எனக்கு மீண்டும் நின் திருவடியைக் காட்டியருளி இப்பொய்யுலக வாழ்வினின்றும் மீட்டருளவும் ஆற்றலுடையையல்லவா?

மறுவில் வானவனே, ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே, நின் திருவடிக்குரிய மெய்யன்பு என்னிடத்தில் இல்லை; அங்ஙனமாகவும் கல்லை மென் கனியாக்கும் வித்தையினாலே கல் போன்ற மனமுடைய என்னை நின் திருவடிக்கு அன்புடையவனாகச் செய்தனை; எம்பிரானே, நின் கருணைக்கு எல்லை இல்லை; நான் ஏது கொண்டு ஏது செய்தாலும் எனக்கு இன்னும் நின் திருவடியைக் காட்டியருளி இப்பொய்யுலக வாழ்வினின்றும் மீட்டருளவும் ஆற்றலுடையை யல்லவா? என்பதாம்.

அன்பது என்பதில் அது என்பது திருவடிக்குரிய மெய்யன்பைச் சுட்டியது. ஏலம்- மயிர்ச்சாந்து. "ஏலக் குழலி" (திருவெம்:5) "ஏலவார் குழலிமார் இருவர் தங்கணாயகனே" (அருட்3) என வருவன காண்க. இறைவியின் கூந்தல் இயல்பாகவே நறுமணமுடைத்ததாகவும் ஏலம் ஏலு நற் குழலி என்றது உபசார வழக்காகும்.

கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை நின் கழற் கன்பனாக்கினாய் என்றது மகாமேருமலையாகிய கல்லை மென்கனிபோல் இழகச் செய்து வில்லாக வளைத்த வித்தையினால் கற்போலும் நெஞ்சுடைய என்னை நெகிழச் செய்து நின் கழற்கு அன்பனாக்கினாய் என்றவாறு, "தெவ்வரை மெய்யெரிகாய் சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரை மேனியன்" (114) எனத் திருக்கோவையாரில் வருதலும், இப்பகுதிக்கு "பகைவரை மெய்யெரித்த வரையாகிய காய்சிலையைப் பணிகொண்டு பின் என்னை அடிமைகொண்ட செவ்வரை போலும் திருமேனியையுடையன்" என உரையும், வலியனவற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னை யாண்டானென்பது போதர "காய்சிலை யாண்டென்னை யாண்டு கொண்ட" வென்றார்; என்னைத் தனக்கடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறதொன்றின் மேலிட்டுக் கல்லை வளைத்தான்; என்னெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்று போலும் என்பது கருத்து. "கல்லை மென் கனியாக்கும் விச்சை கொண்டென்னை நின்கழற்கன்பனாக்கினாய்" என்பதுமது என விசேடவுரையும் பேராசிரியர் எழுதியிருத்தலும் ஈண்டு அறியற்பாலன. விச்சை- வித்தை. விச்சைகொண்டு- வித்தையால்.

*தோல்வி குற்றமாகாது, உயர்வற்ற இலட்சியமே குற்றமாகும்.*

எல்லை- அளவு. "நன்னா டலைவரு மெல்லை" கலி 39:31. இறைவன் திருவருளுக்கு எல்லையின்மையின் "எல்லை யில்லை நின் கருணை" என்றார். "எல்லையில் மாக்கருணைக் கடல் (திருப்படை 4) என வருதலுங் காண்க. எல்லையில்லை நின் கருணை என்பது அடிகள் பின்னர் வேண்டும் வேண்டுகோளுக்கு ஏதுவாக அமைந்துள்ளது.

ஏதுகொண்டு என்புழிக்கொண்டு என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. ஏது செய்யினும் என்புழி உம்மை, எவ்வித இழிவுடைய செயலைச் செய்யினும் என இழிவு சிறப்பு. வல்லையே என்புழி ஏகாரம் தேற்றம். இன்னும் என்றது முன்னுமல்லாமல் பின்னும் என்ற பொருளில் வந்தது. உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை. மீட்கவும் என்பதில் உம்மை, இங்கு எனை இருத்திப் பிரிக்கும் ஆற்றலுடைய நினக்கு என்னை அதனின்று மீட்கவும் ஆற்றலுண்டு என இறந்தது தழீஇய எச்சவும்மை. மறுவில் வான்- குற்றமில்லாத சிதாகாயம். பூதாகாயத்தை விலக்குதற்கு "மாறுவில்" என்னும் அடைகொடுக்கப்பட்டது.

இதன்கண், எனக்கு இன்னும் உன் கழல் காட்டி மீட்கவும் வல்லமையுடையை யல்லவா? என்றதனால் அங்ஙனம் அருள் செய்யவேண்டும் என்பது பெறப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 94. (தொடரும்...

## விக்கிரமாதித்தனின் கருணை

மன்னன் விக்கிரமாதித்தன் ஒருமுறை குதிரையில் பயணம் செய்துகொண்டிருந்தான். வழியில் ஒரு காடு. அவனுக்குத் திடீரென்று ஒரு பசுமாட்டின் அபயக்குரல் கேட்டது. குரல் வந்த திசைநோக்கிச் சென்ற மன்னன் சேற்றில் பசு சிக்கியிருப்பதைக் கண்டான். பசுவின்மீது மன்னனுக்குக் கருணை ஏற்பட்டது. பசுவை மீட்பதற்காக பெரும் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

அப்போது ஒரு சிங்கம் அங்கு வந்துவிட்டது. அது பசுவின்மீது பாய முயன்றது. உடனே விக்கிரமாதித்தன் தன் வாளை உருவினான். சிங்கத்தை எதிர்க்கத் துணிந்தான். அங்கு இருந்த ஒரு பெரிய ஆலமரத்தில் கிளி ஒன்று இருந்தது. அந்தக் கிளி, விக்கிரமாதித்தனைப் பார்த்து, "மன்னா! பசுவோ சேற்றில் உயிர்விடப்போவது உறுதி. அதை சிங்கத்திடமே விட்டுவிடு. அதைக் காப்பாற்றுவதாக எண்ணிக்கொண்டு உன் உயிரை ஏன் பணயம் வைக்கிறாய்? சிங்கம் உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?" என்று கேட்டது.

அதற்கு விக்கிரமாதித்தன், "கிளியே! அதர்ம வழியில் சிந்திக்காதே. வலிய மிருகம் எளிய மிருகத்தின் உயிரைப் பறிக்க நினைப்பது இயற்கையே! எனினும் பிறர் உயிரைக் காப்பாற்ற, தன் உயிரையும் அளிப்பவனே சிறந்தவன். மேலும், எளியோரைக் காப்பது அரச கடமை. மேலும் செயல்பட இயலாத நிலையில் சேற்றில் தவிக்கும் இந்தப் பசுவை அனாதையாகச் சாகவிடுவது மிகப் பெரிய பாவம். அதை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்!" என்று பதிலளித்தான். இதைச் சொன்னதும், பசு தர்ம தேவதையாகவும், சிங்கம் இந்திரனாகவும், கிளி பூமிதேவியாகவும் விக்கிரமாதித்தன் முன்பு தோன்றினர். விக்கிரமாதித்தன் அவர்களைத் தன் கரங்களைக் கூப்பியபடி மண்டியிட்டு வணங்கினான்.

உன் கொள்கையை மெச்சினோம். நீயே தர்மவான்! விக்கிரமாதித்தா... நீ அரச பதவிக்கு உகந்தவன். நீ நலமுடன் நீண்டநாள் வாழ்வாயாக!" என்று ஆசிகூறி மறைந்தனர்.

*உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி.*

# உத்தமர் உள்ளம் நடுங்குவதில்லை நமனுமங்கில்லை

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

மனிதனுடைய மனத்தாமரையில் இறைவன் அருட்பொலிவோடு வீற்றிருக்க வேண்டுமாயின், அகத்தினிலே அன்பு மிளிர வேண்டும். அங்கே அறுவகைக் குற்றங்களான காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகியன அறவே நீங்கிய நெஞ்சினைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் ஐம்புலன்களை அடக்கி ஆள்பவனாய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் மெய்ஞ்ஞானம் உடையவனாகத் திகழ வாய்ப்பும் வரமும் உண்டு. அப்போதுதான் உள்ளத் தாமரையிலும் புராதன வியாபகனாகிய புண்ணியன் வீற்றிருந்து பேறு அளிப்பான். அல்லாமலும் சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரம் ஆகிய நான்கும் கலந்த "அசபா" வடிவம் தோன்றும். இதனை நாம் பெற்று விட்டால் நாமும் ஞானியாகலாம். ஈசனும் நடுவிருப்பான்.

"நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
கெடுகின்றது எம்பெருமான்" என்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய, நீ போய்,
முடுகிய வையத்து முன்னிரு" என்றானே.

மந்திரம் என்பது நினைப்பவனையும், உச்சரிப்பவனையும் காப்பது. தந்திரம் என்பது அந்த மந்திரத்தை ஓதிப்பயன்படுத்தும் முறையை அறிவிக்கும் நூலைக் குறிப்பது. யந்திரம் என்பது சாதகனானவன் அம்மந்திரத்தை முறைப்படி ஓதியும் உணர்ந்தும் வழிபடும் முறையையும் அதனால் எய்தும் பயனையும் குறிப்பதாகும்.

உலகியலில் மருந்து எப்படி பிணியைத் தீர்க்கிறதோ அதேபோல மருந்தாகிய யந்திர வழிபாட்டு முறைகளும் உடற்பிணியைத் தீர்ப்பதோடு உயிர்ப்பிணியாகிய பிறவிப் பிணியையும் நீக்குகிறது. அவரவர் தாம் தாம் பெற்ற அனுபவவாயிலாகவும், அறிவுபூர்வமாக சிந்திப்பதனாலும், முன்னோர்கள் எழுதி வைத்த ஏடுகளாலும் பிறவிப்பிணியை நீக்க வழியும் உபாயமும் உணரப்படுகிறது.

"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்"
என்று அப்பர் சுவாமிகளும்,

கண்ணார் கோயில் கை தொழுவோர்கட்கு
இடர்பாவம் நண்ணாவாம்;
கேதீச்சரம் கைதொழக்கடுவினை யடையாவே;
கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே;
பெருந் தவத்தோர்களுக்கெல்லாம் ஆசை கெடுப்பது
தென்னன் உடலுற்ற தீப்பிணியாயின தீரச் சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவரே! என்று சம்பந்தரும்;

வழுக்கி வீழினும் உன்திருப்பெயரல்லால்
மற்று நானறியேன்
ஒழுக்க என் கண்ணுக்கு ஒரு மருந்துநீ
என்று சுந்தரரும்;
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய் கழல்கள் வெல்க,
பொய்யாயினவெல்லாம் போயகல
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்,
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லான்,
பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட அத்தன்,
வேண்டத்தக்கது அறிவோய்
வேண்ட முழுதும் தருவோய்
என்று மணிவாசகரும்
ஆசையறாய் பாசம் விடாய்
ஆன சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்!
என்று ஸ்ரீ குரு ஞான சம்பந்தரும் உளப்பேறு தருகின்றனர்.

மந்திரங்கட்கு எல்லாம் மூலமாகிய ஓம் என்னும் பிரணவத்தையும், மந்திர ராஜாவாகிய ஸ்ரீ பஞ்சாட்சர ஐந்தெழுத்தையும் யந்திரக் கோட்டுக்குள் அமைத்து, சந்தனம், குங்குமம் ஜவ்வாது முதலிய வாசனைப் பொருட்களும் சூட்டி மனதார வழிபட்டால் கருதிய யாவும் கைகூடும்.

திருமூலர் எனும் யோக பானு அசபா மந்திர யோகக் கருத்துக்களை தெட்டத் தெளிவாகத் தருகிறார்.

ஜெபம் (செபம்) என்றால் ஜெபிப்பது அல்லது செபிப்பது என்றும் கணிப்பது என்றும் பொருளாகும். அஜபா (அசபா) மந்திரம் என்றால் ஜெபிக்காமல், (செபிக்காமல்) கணிக்காமல் இயல்பாக எழுகின்ற மூச்சுக் காற்றில் இயங்குகின்ற மந்திரம் என்பது இதன் கருத்தாகும்.

ஊனில் உடம்பில் உயிர் இருக்க வேண்டுமானால், பிராணவாயு மூக்கின் வழியாக உட்சென்றும், அது வெளியில் வந்தும் இயங்க வேண்டும். இது இயல்பாக ஒவ்வோரிடத்திலும் நடைபெறுகின்ற நிகழ்வாகும். ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளில் 21,600 தடவை மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடுகின்றான். ஹம்ஸ மந்திரத்தை இயல்பாகவே செய்கின்றோம். சிதம்பரத்திலே வேயப்பட்டுள்ள பொன் ஓடுகள் தாங்கி நிற்பதற்கு அடிக்கப்பட்டுள்ள பொன் ஆணிகள் 21,600 ஆகும்.

மூச்சுக்கும் தில்லையில் ஆடும் திரு நடராஜனுக்கும், நீ அதுவாகின்றாய் என்ற தத்துவத்திற்கும் "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" எனப்படும் தெளிவுக்கும் உள்ளத்தைப் பெருங்கோயில் ஆக்கியிருக்கின்றார் திருமந்திர ஆசான் திருமூலர்.

*விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை.*

செபிக்காமல் மனத்தில் மந்திரவடிவான பரம்பொருளைத் தியானிப்பதேயாகும்.

"செம்பு பொன்னாகும் சிவாயநம என்னில்
செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்
செம்பு பொன்னாகும் சிரீயும் கிரீயும் எனச்
செம்பு பொன்னான திரு அம்பலமே"

செம்பு என்பது உயிர். அது "சிவாயநம" என்ற அஞ்செழுத்தை நினைத்த மாத்திரத்தில் செம்பு பொன்னாவது போல, இம்மந்திர பலத்தால் செம்பாகிய உயிர் பொன்னாகிய சிவமாகி விடும் என்கிறது திருமந்திரம்.

"நண்ணும் பிறதாரம் நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத்திய அனுசந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணும் செபமென்னும்
மன்னு மனுபவனத்தொடு வைகுமே"
(திருமந்திரம் 1007)

பிறருக்கு உயிராகிய மனைவியரை விரும்புதலை விட்டவர்களும், புலனடக்கம் உள்ளவர்களும் அர்ப்பணித்த நிவேதனம் தோத்திரம் வணக்கம் செபம் ஓமம் பதவி ஆகியன வழிபாட்டிற்கு உரியனவாம். திருமூலர் நாம் வாழும் சமூகத்தினை மையமாகக் கொண்டுதான் தூர நோக்கில் கூறினாரோ என்னவோ தற்காலத்திற்கு மிகவும் அவசியமாகவே உள்ளது.

நிலமிசை நீடு வாழ்பவர்.

நாற்பாதங்களில் திளைத்து, இருவினை ஒப்பு சத்திநிபாதம் கொண்டு, புறச் சமயதூடணமாகி, சிவநெறிச் சிறப்பினை உணர்த்தி சிவகுருதரிசனம் பெறுகின்றார். சிவன் குருவாகி வந்து திருவடிப்பேறு அடைகின்றார். உலகப் பற்றைத் தவிர்த்து மெய்ப்பொருள் கொண்டு தவமாகின்றார்.

"சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீ
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்த அப்பார்வை பசுமரத்தாணிபோல்
ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே"

மக்களுக்கு ஏற்படுகின்ற இன்ப துன்பங்கள் அவரவர் செய்யும் நற்செயல் தீச்செயல் களாலேயே ஏற்படுகின்றன.

"தினை விதைத்தவன் தினையறுப்பான்
வினை விதைத்தவன் வினையறுப்பான்"

ஒரு நாட்டிலே அரசன் நடுநிலைநின்று தீய செயல்கள் நிகழாதவாறு கண்ணுங் கருத்துமாக ஆட்சி புரிபவனாக இருப்பானாயின் துன்பமின்றி நாட்டிலே கடவுளும் தேவர்களும் குடிகொண்டிருப்பார்கள்.

எமது நாட்டிலே அரசியலிலும் ஆன்மீகத்திலும் கட்டிடங்களே ஆட்சிசெய்கின்றன. அடித்தள மக்களை எவருமே வெல்லவும் இல்லை. அவர்களின் வாயிலில் இவர்கள் இனிக்கவும் இல்லை. உயர் தவமல்லாத தவமும், உணர்வொடு கூடாது வேடமாத்திரமாம் போலித்

தவமும் ஒருபோதும் தவமாகாது. உலக மாயை தவத்தினை மறைத்திருக்கின்ற துர்ப்பாக்கியம் இல்லாத பட்சத்திலே தவம் சிவமாகும். தவம் வெளிப்படையானது. ஒளிவு மறைவற்றது. தவமாவது தவக்குறைவாக நிகழும் பட்சத்தில் மதம் எதிரிகளைச் சம்பாதிக்கும். எதிரிகளை உருவாக்கும். மதத் தலைவர்கள் சன்னதம் கொள்வதும், சண்டித்தனம் காட்டுவதும் ஆணவத்தின் உச்சமாகும். இவர்கள் கல்லையும் சீமந்தினையும் கடவுளாக்குவார்களேயொழிய, மனிதர்களை கடவுளாக்கவோ தேவர்களாக்கவோ முடியாதவர்களாக கதிரைக்கும் மேடைக்கும் பொறுப்பாகத் தம்மைச் சிருட்டித்துக் கொள்கிறார்கள்.

இந்நிலையிலே திருமந்திரம் எம்மைத் தெளிய வைக்கிறது.

திருமூலரின் திருமந்திரம்

“மூலனுரை செய்த மூவாயிரந் தமிழ்
மூலனுரை செய்த முந்நூறு மந்திரம்
மூலனுரை செய்த முப்பது உபதேசம்
மூலனுரை செய்த மூன்று மொன்றாமே”

“சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை”

திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்த நிலையில் ஆண்டுக்கொரு பாடலாக 3000 பாடல்கள் யாத்துள்ளார்.

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!”

யோக நிலையிலிருந்தபடியே மனித சாம்ராஜ்ஜியத்திற்குச் சிவப்பரம் பொருளைத் தவப்பேறாக்கியவர். சித்தருக்கெல்லாம் தலைவர். நான்குவிதமான பாடல்கள் முழுமையாக்குகின்றன. அவையாவன:-

தத்துவ உண்மைகளை இயம்புதல்
சொந்த அனுபவ இரகசியங்களைக் கூறுதல்
குருவின் துணையோடு கற்றல்
பாடிப்பாடி ஆனந்தப்படுதல்

மேலும்,

“யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே”

ஆம்!

“ஆசையறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய் வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே”

*ஒரே இடத்தில் சேரும் மாறுபட்ட பாதைகள்தான் சமயங்கள்.*

எந்த மதமாயினும் அது இதமாக மிளிரவேண்டும். மதவெறி கொள்ளலாகாது. ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் நன்றே நினைமின்
நமனில்லை இதை நாம் உணர்ந்துவிட்டால் அதுவே போதும்.

நற்குடிகள் நிலைபெற்று வாழும் சாத்தனூரில் ஆநிரை மேய்த்துவரும் ஆயன் பசுக்களுடன் வரும்போது திடீரென இறந்து விடவே, பசுக்கள் ஆயனின் பிரிவுகண்டு துவண்டன. கண்ணீர் சொரிந்தன. இத்துயரத்தினைக் கண்ணுற்ற சிவபக்தரான சிவயோகியார், இந்த ஆயன் உயிர்பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்களின் துயர் நீங்காதென்று தெளிந்தவராய், தமது உடம்பினை பாதுகாப்பாக ஓரிடத்தில் மறைத்துவிட்டுத் தாம் கூடுவிட்டுக் கூடுபாயும் என்ற பவன வழிமூலமாக தனது உயிரை ஆயனுடம்பினுள் புகுந்துகொண்டு எழுந்திடவே, சுற்றி நின்ற பசுக்களெல்லாம் தம் துயரம் நீங்கியதாய் ஆயனை நாத்தழும்ப நக்கி மோந்து துள்ளி விளையாடியவைகளாக பழையபடி புல்மேய்ந்தன. பொழுது சாயவே பசுக்கள் தத்தம் இடங்களைச் சென்றடைந்தன. சிவயோகியார் பழைய உடம்பினைத் தேடியபோது காணாத நிலையில் திருவாவடுதுறையடைந்து சிவயோகத்தில் அமர்ந்து திருமந்திரப் பாடல்களை ஆண்டுக்கொன்றாக 3000 பாடல்கள் அருளியவாறு பிறவித் துன்பத்திற்கு விடுதலை தந்தருளினார்.

யாழ் யோகா உலகம், திருமூல நாயனாரின் குருபூஜையை கம்பன் கோட்டத்திலே வெகு சிறப்பாக கொண்டாடி யோக நிலைக்கு வழிகாட்டியது.

## சிவத்தமிழ்ச் செல்வியின் அறக்கொடை விழா



சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 95ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் ஜனவரி 7ம் தேதி செவ்வாயன்று காலையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்னையின் பிறந்தநாள் விழாவானது அறக்கொடை விழாவாக வருடந்தோறும் நடந்தேறுவதைப் போன்று, இவ்வருடமும் யாழ் போதனா வைத்தியசாலை சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கும், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கும் பிறந்தநாள் அறக்கொடை வழங்கப் படவுள்ளது.

அத்துடன் உயர் தகைமையுடைய உதவி தேவைப்படும் நூறு மாணவர்களுக்குரிய நிதியுதவி மன்னார் மாவட்ட இந்து மகா சபையினூடாக வழங்கப் படவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வியின் அறக்கொடை விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வான "சிவத்தமிழ் விருது" எனும் உயரிய விருது இம்முறை ஐவருக்கு வழங்கப்படவுள்ளது.

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

கிருஷ்ணர் சிறைச்சாலைக்குச் சென்று தன் பெற்றோர்களை விடுவித்தார். பலராமரும், கிருஷ்ணரும் அவர்களை வணங்கினார்கள். தேவகியும் வசுதேவரும் வாத்சல்யத்தோடு அவர்களை அணைத்துக்கொண்டு வாழ்த்தினார்கள். இவர்களும் வாய் நிறைய "தாயே, தந்தையே" என்று அழைத்து அவர்களை மனங்குளிர வைத்தார்கள். அதன்பிறகு கிருஷ்ணர் கம்சனின் தந்தையான உக்ரசேனரை சிறையிலிருந்தும் விடுவித்து அவரை மன்னராக்கினார்.

வேடிக்கை பார்க்க என்றழைத்து, அழைத்தவன் முடிவை நிகழ்த்தி, அதனை அனைவரும் வேடிக்கை பார்க்குமாறு செய்துவிட்டு, புது அரசரையும் ஏற்படுத்திவிட்டு நந்தகோபரிடம் வந்தார். நந்தகோபருக்கு விஷயம் புரிந்துவிட்டது. கிருஷ்ணன் தன் மகனல்ல, யசோதை பெற்றவளல்ல. இரவல் பிள்ளை அவன். இதுநாள்வரை இதயத்தைக் களிக்கச் செய்தான். இனி என்ன செய்யப்போகிறான்? பெற்றவர்களிடம் பாசம் செலுத்தப் போகிறானா, தங்களை புறக்கணிக்கப்போகிறானா, என்ன செய்யப்போகிறான்? என்ன செய்தாலும் அது தன் புத்திரன் செயலுமல்ல, வசுதேவ புத்திரன் செயலுமல்ல. சாட்சாத் ஸ்ரீமத் நாராயணரின் செயல். கர்க்கர் முனிவர் சொன்னது உண்மைதானே. இதுவரை கிருஷ்ணன் பேச்சைக்கேட்டு அவர் நடந்தாரே தவிர, அவர் பேச்சைக்கேட்டு கிருஷ்ணன் நடந்தது எப்போது? நடக்கமுடியாத அற்புதங்களையெல்லாம் பார்த்துப் பார்த்து, அவைகூட இப்போதெல்லாம் சாதாரணமாகிவிட்டன. கிருஷ்ணன் சொல்வதைக் கேட்போம் என்று அமைதியை வரவழைத்துக் கொண்டிருந்தார்.

கிருஷ்ணர் நந்தகோபரை அணைத்துக்கொண்டார். "தந்தையே! இதுநாள்வரை தாங்களும் யசோதா அன்னையும் எங்களைச் சீராட்டி வளர்த்தீர்கள். இனி நீங்களெல்லாரும் கோகுலம் திரும்பிச் செல்லுங்கள். இங்கிருப்பவர்கள் இதுவரை எங்களைப் பிரிந்திருந்தார்கள். அவர்களுடன் சிறிது காலம் தங்கிவிட்டு வருகிறோம்" என்றார். நந்தகோபர் எதிர்பார்த்ததுதான். காலத்தை வெல்ல யாரால் முடியும்? பிள்ளைகள் இருவரையும் விட்டுவிட்டு, அவர்கள் கொடுத்த சன்மானங்களோடும் கோகுலத்துக்கு கிளம்பினார்.

## குருகுலவாசம்

வசுதேவர் கிருஷ்ணருக்கும், பலராமருக்கும் கர்க்காசாரியாரைக் கொண்டு உபநயனம் செய்தார். எல்லாம் அறிந்தவர்களான அவர்கள் உலக முறைக்காக சாந்தீபனி என்ற முனிவரைக் குருவாக அடைந்தார்கள். 64 கலைகளையும் 64 நாட்களில் கற்றார்கள். வேத வேதாந்தங்களையெல்லாம் அறிந்தார்கள். கல்வியை முடித்தபின்பு குருவை வணங்கி குரு தட்சணை என்ன வேண்டும் என்று கேட்டார்கள்.

*வெற்றியின் இரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதுதான்.*

குருவின் மகன் கடலில் குளிக்கும்போது ஒருநாள் சமுத்திரத்திலிருந்த பஞ்சஜன்யன் என்ற அரக்கன் விழுங்கிவிட்டான். அதனால் குருவும், அவர் மனைவியும் மிகவும் கவலையோடிருந்தனர். கிருஷ்ணரின் மகிமையை அறிந்த குரு இறந்துபோன தன் மகனை மீட்டுத் தரும்படி வேண்டினார். குருவின் கவலையைப் போக்க கிருஷ்ணர் ஆழ்கடலுள் மூழ்கி அரக்கனிடம் போர் புரிந்து, அவன் வயிற்றைக் கிழித்ததும் அவன் இறந்து போனான். அவன் அச்சிறுவனை யமதர்மராஜனிடம் ஒப்படைத்திருந்தான். அரக்கன் வயிற்றைக் கிழித்து சிறுவன் இருக்கின்றானா என்று தேடும்போது பெரிய சங்கு அவர் கையில் கிடைத்தது. பஞ்சஜன்யனிடமிருந்து கிடைத்த பாஞ்சஜன்னிய சங்கை எடுத்துச் சென்று யமதர்மன் வாசலில் நின்று ஊதினார். யமதர்மன் பயந்துகொண்டே வந்து அவர்களை உபசரித்து, குருவின் மகனைக் கேட்க, அவரும் சிறுவனை ஒப்படைத்தார். குருவிடம் மகனைக் கொண்டு வந்து குருதட்சணையாகக் கொடுத்து ஏற்கும்படியாக கிருஷ்ணர் கேட்டுக்கொண்டார். குரு தான் செய்த பாக்கியத்தை எண்ணி கண்ணீர் மல்க ஆசிகள் வழங்கி விடை கொடுத்தார். பலராம கிருஷ்ணர்கள் மதுராபுரியை அடைந்தனர். மக்கள் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர். இவ்வாறாக கிருஷ்ணரின் லீலைகள் விந்தையும், மர்மமும், மகிமையும், வீரதீரமும், பெருமையும் மிக்கவை.

## உத்தவர் வருகை

உத்தவர் என்ற மந்திரி ஒருவர் இருந்தார். அவர் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவராக இருந்தார். அவரைக் கோபியர்களிடம் போய் ஆறுதல் கூறுவதற்காக கிருஷ்ணர் அனுப்பி வைத்தார். கிருஷ்ணரிடம் பேரன்பு கொண்ட கோபியர்களைக் காண அவரும் வந்தார். கிருஷ்ணரைப் பற்றியே அவர்கள் பாடிக்கொண்டிருப்பதைக் கேட்டார். உத்தவரைப் பார்த்த அவர்கள், அவர் கிருஷ்ணரிடமிருந்துதான் வந்திருப்பார் எனப் புரிந்துகொண்டு, தங்களைப் பற்றிக் கிருஷ்ணன் நினைக்கவாவது செய்கிறானா, ஒருமுறையாவது வந்து பார்ப்பானா? என்றெல்லாம் கேட்டார்கள்.

கோபியர்கள் அப்படியென்றால், நந்தகோபரும், யசோதையும் அவரை வரவேற்று அழுதார்கள். உத்தவர் அவர்களைத் தேற்றினார். "கிருஷ்ணர் ஸ்ரீமத் நாராயணர். அவதரித்த பகவானை வளர்க்கும் பேறு தங்களுக்குக் கிடைத்தது. அந்தப் பாக்கியத்தை எண்ணிக் களிப்படையுங்கள். கிருஷ்ணர் உங்களைக் காண கண்டிப்பாக வருவார்" என்று ஆறுதல் கூறினார்.

ஆனால் யசோதையின் நிலைமை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஏழு வருடங்கள் கனவிலும், நனவிலும் கிருஷ்ணரைத் தன் மகனாக எண்ணி சேமத்தைக் கோரிக்கொண்டு, காலையில் வனத்துக்குப் போனவன் பத்திரமாகத் திரும்பி வரவேண்டுமே, இவனுக்குத்தானே எப்போதும் ஆபத்துக்கள் ஏற்படுகின்றனவே என பரிதவித்துக்கொண்டு, பிரார்த்தித்துக்கொண்டு, மாலையில் வனத்திலிருந்து வந்ததும், கட்டியணைத்து, நீராட்டி, அலங்கரித்து, உணவளித்து, தூங்கவைத்து, தான் விழித்திருந்து அழகு பார்த்த அன்னை அவள். கிருஷ்ணன் நலனைத் தவிர வேறு நினைப்பே அவளுக்குக் கிடையாது.

இப்போது நினைப்பை மட்டுமே உடைமையாக்கிவிட்டு அவன் போய்விட்டான். வேடிக்கை பார்க்கப் போகிறேன் என்று போனவன் திரும்பவே இல்லை. அன்னையின் அன்பும் அவனுக்கு ஒரு வேடிக்கையாகவே ஆகிவிட்டதா?

நந்தகோபர் ஆண்மகன். முதலிலேயே கிருஷ்ணர் பரமாத்மா என்று அறிந்தவர். அதனால் அவர் தன் துயரத்தை சமன்படுத்திக்கொள்ள முடிந்தது. ஆனால் யசோதை? கிருஷ்ணன் பரமனாக இருந்தால் என்ன, யாராக இருந்தால் என்ன? அவளுக்கு அவன் மகன் தான். மகன் மட்டும்தான். திடீரென்று ஒரு தாய்க்கு இத்தனை வருடங்களுக்குப் பிறகு அவன் உன் மகனல்ல என்று சொன்னால், அதைவிடக் கொடுமை வேறு ஏதாவது உண்டா? யசோதையின் பெருந்துயரத்திற்கு சமாதானம் காணமுடியவில்லை.

ஒருவகையில் தேவகி பாக்கியசாலி. சிறு பிராயத்தில் கண்ணனை வளர்க்கமுடியாது போனாலும், அதன்பிறகு கடைசிவரை தன் மகனோடுதான் இருந்தாள்.

யசோதையின் கண்ணீருக்குப் பதிலாக ஞானத்தை உபதேசித்தார் உத்தவர். துயரத்தில் அவள் உயிரே உருகிக்கொண்டிருக்கும்போது, இந்த உபதேசம் சாந்தியை ஏற்படுத்தவா போகிறது? மறுநாள் கோபியர்கள் உத்தவரிடம் வெட்கம் விட்டு கிருஷ்ணரைப்பற்றி விசாரித் தார்கள். தங்களை மறந்து விட்டானா என கண்ணீர் உகுத்தார்கள். வண்டிடம் சொல்வதுபோலப் பாடி, தங்கள் ஆசைகள் எல்லாம் சொன்னார்கள். இதுவே "பிரமர கீதம்" எனப்படும். அவர் களின் பக்தியைக் கண்ட உத்தவர் பரவசமடைந்தார். கிருஷ்ணரைப் பற்றிய ஞானத்தை அவர்களுக்குப் புகட்டி சமாதானப்படுத்தினார். "உங்கள் பாத தூளியே பரமபவித்திரம்" என்று அவர்களைப் போற்றினார். சில நாட்கள் அங்கிருந்துவிட்டு மதுராபுரிக்கு வந்தார்.

உன்னையே நினைக்கின்ற வரம் ஒன்றுதா கண்ணா
உன்பாதம் சேர இருக்கின்ற எனக்கு குறையொன்றுமில்லை கண்ணா
கண்ணா மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா"

(தொடரும்...

## எங்கு சென்றாலும் மீண்டு வரும் சக்தி வேல்

எத்தனை இடர்களைக் களைய வல்ல வேல்
என்றென்றும் எம் நெஞ்சில் குடி இருக்கும் வேல்
பக்தி கொள் மனமதை அறிந்து கொள்ளும் வேல்
பன்னிரு விழியானே வேலாகி நிற்கின்ற வேல்
முத்தி கொடுக்க நல்ல இனிய வல்ல வேல்
மூவுலகும் தொழும் குமர குருபரன் கைவேல்
எத்திசை சென்றிடினும் மீண்டுவரும் சக்தி வேல்
எதற்கும் இணையில்லாத ஸ்ரீ செல்வச்சந்நிதி வேல்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*பல அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞனாவாய்.*

# ஆன்மீக வாழ்வு

– **திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

இறையுணர்வு, அறநெறி வாழ்வு ஆகிய இரண்டையும், வாழ்க்கையில் பேணி வருபவர்களுக்கு ஒரு பொல்லாப்பும் இல்லை. வாழ்க்கையில் சாந்தி, அமைதி, மகிழ்ச்சி, ஒழுங்கு, நன்மை, இன்பம் என்பன உறுதி யாகிவிடும். ஆன்மீக வாழ்வு மலர்ச்சி பெற்று; "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்", "மண் ணில் நல்ல வண்ணம் வாழ்தல்" என்பன வாய்க்கப்பெற்று விடுவர். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்னும் உயர்நிலை எய்தப் பட்டு; வாழ்க்கையைச் சுவையுள்ளதாக அமைத் துக் கொள்வர்.

மனித வாழ்வு ஒரு சுமையல்ல; சுவையானது என்பதை உணர்த்துவது இறை உணர்வு, அறநெறி, ஒழுக்கம் ஆகியன சங்கமிக்கும் ஆன்மீக வாழ்வு என்பதனை நாம் கருத்தில் கொள்ளுதல் வாழ்வில் நடை முறைப்படுத்துதல் பெரிதும் வேண்டற்பாலது.

மனிதர்கள் அனைவரும் ஆன்மீக வளம்கொண்டவர்கள். ஆன்மீக வளத்தைப் பயன்படுத்த வேண்டியது ஒவ்வொருவரினதும் அடிப்படை மனித உரிமையாகும். ஆன்மீக வளத்தைப் பயன்படுத்தாமல், அகத்திலே, உறங்குநிலையில் வைத்திருத்தல்; அலட் சியம் செய்தல் அடிப்படை உரிமையை மீறும் செயல் ஆகும். செயலுக்கேற்ற விளைவு உண்டு என்பது மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் ஆகிய இரண்டினதும் நிலைப்பாடு ஆகும்.

இயற்கையை உற்றுநோக்கினால் நமக்கு அப்பால் மாபெரும் சக்தி ஒன்று; பேராற்றல், பேரறிவு, வற்றா இருப்பு என்பவற் றைக் கொண்டதாக; எங்கும் பரந்தும் செறிந் தும் இருப்பதை உணரமுடிகிறது. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பது இந்து சமயம் தரும் உண்மை.

நாம் வாழுகின்ற இப்பூமியில் பகல் இரவு உண்டாகின்றன. பருவ காலங்கள் மாறி மாறி வருகின்றன. மழை பெய்கிறது. தாவரங் கள் வளர்கின்றன; பயன் தருகின்றன. உயி ரினங்கள் வாழ்கின்றன. பிறப்பு இறப்பு நிகழ் கின்றன.

பூமி தன்னைத் தானே சுற்றுகிறது; சூரியனையும் சுற்றி வருகின்றது. பாதை தவறுவதில்லை. பயணம் தொடர்கிறது. ஏனைய கோள்களும் தத்தம் பாதைகளில் சூரியனைச் சுற்றி வலம் வருகின்றன. ஒன்று டன் ஒன்று முட்டி மோதுவதில்லை. பல யுகங்களாக இந்நிகழ்வு நடைபெற்று வரு கிறது. காலம் தவறுவதில்லை; ஒழுங்கு மீறு தல் இல்லை; தத்தம் பாதைகளைவிட்டு விலகுவதில்லை. ஒழுங்கு கட்டுப்பாடு மிக நுணுக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது; பேணப்பட்டும் வருகிறது.

இந்தச் சீரான செம்மையான நிரு வாகத்தை ஒரு மாபெரும் சக்தி; மகாசக்தி நடத்தி வருகிறது, என்பது முற்றிலும் உண்மை.

"பாரொடு விண்ணாய்ப் பரந்து" எங்கும் நிறைந்து, அனைத்தையும் இயக்கி ஓர் ஒழுங் கான நிருவாகத்தை நடத்திக்கொண்டிருக் கின்ற மகாசக்தி, பேராற்றல், இந்து சமயத் தில், ஆதிபராசக்தி என்று அழைக்கப்படுகிறது. "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்று

*நன்றாக உழைக்கின்ற எந்த மனிதனும் ஏழ்மையை அடைவதில்லை.*

திருவருட்பயன் என்னும் சைவசித்தாந்த நூல் கூறுகிறது. அதன்படி பரம்பொருள் ஆகிய சிவமும்; பராசக்தியும் இணைந்தே உள்ளமை தெளிவாகின்றது.

இருப்புநிலை, சிவம்; இயங்குநிலை சக்தி. இரண்டும் இணைந்து, பிரிவின்றி உள்ளமைபற்றி, சைவ சித்தாந்த நூல்கள் கூறும். "அவனின்றி ஓரணுவும் அசையாது" என்பர். "அவன்" என்பதில் "அவள்" என்பதும் தொக்கி நிற்கின்றது என்ற உண்மை உணரப் படவேண்டியது.

மெய்ஞ்ஞானம், பராசக்தி என்பதை; விஞ்ஞானம் ஈர்ப்புச்சக்தி, ஆகர்ணசக்தி, அணு சக்தி என்று கூறுகிறது.

பேரறிவும் (சிவம்); பேராற்றலும் (சக்தி) ஒன்றிணைந்த நிலையிலேயே; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களும் (ஐந்தொழில்கள்) நடைபெறுகின்றன.

அந்த மாபெரும் சக்தியாகிய இறை சக்தியே; இந்தப் பிரபஞ்சத்தில், உலகில்; நீதிபரிபாலனம் செய்து வருகிறது. மனிதர்கள் எந்தச் செயலைச் செய்தாலும், அந்தச் செயல் உடனே பதிவு செய்யப்பட்டு விடுகிறது. கண் காணிப்பு மிக நுட்பமானது. இறைநீதி எல்லோருக்கும் ஒன்றுதான். செய்த செயலுக் கேற்ற விளைவு, நிச்சயம் உண்டு. எவருக்கும், விதிவிலக்கு இல்லை.

"தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பது செயல். விளைவுத் தத்துவத்தை விளக்க எழுந்த கூற்று. நல்ல செயலைச் செய்; தீய செயலைச் செய்யாதே என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள். பொதுமக்களுக்கு அவற்றின் விளைவுகளைக் கூறி விளங்க வைப்பதற்காக; "சுவர்க்கம்", "நரகம்" என்னும் இரு வேறு உலகங்கள், பற்றிச் சமய நூல்களில் குறிப்பிட்டிருந்தனர். இவ்வுலகில் வாழும்போது; நல்லவற்றை நன்மை பயப்பனவற்றைச் செய்தால் (புண்ணியங்கள்) இறைவன் அத்தகையவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பான்; தீயவற்றை, தீமை பயப்பனவற்றைச் செய்தால் (பாவங்கள்) உரிய தண்டனைகள் வழங்குவான் என்று ஆசை காட்டியும், அச்சுறுத்தியும்; நல்ல செயல்களில் ஈடுபாடு கொள்ளவும் அதே வேளை, தீய செயல்களைச் செய்யாது தவிர்க்கவும்; வேண்டிய அளவிற்குச் சமய போதனைகள் செய்து வந்தார்கள். "செயலுக்கேற்ற விளைவு" நிச்சயம் உண்டு என்பதைச் சாதாரண மக்களுக்கு விளக்கவே இத்தகைய உத்திகளைக் கையாண்டனர்; இன்றும் கையாண்டு வருகின்றனர்.

## துன்பங்களுக்கு என்ன காரணம்:

துன்பங்களுக்குக் காரணம் அவரவர் செய்த தீவினைகள். தீவினைகள் என்றால், நாம் செய்கின்ற கெட்ட செயல்கள். மனம், மொழி, மெய் (உடல்) ஆகியவற்றினால் வினைகள் செய்யப்படுகின்றன. ஒவ்வொருவரும் செய்கின்ற வினைகளுக்கு விளைவுகள் உண்டு. நற்செயல்களைப் புரிந்தால்; நன்மைகள் விளைச்சலாகவே பெறப்படுகின்றன. "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்னும் உன்னதம், வாழ்வில் எய்தப்படுகிறது. மாறாக பஞ்சமா பாதகங்களைச் செய்தால், அவற்றின் விளைவாகத் துன்பங்களை வாழ்வில் சந்தித்தும், அநுபவித்தும்தான் ஆக வேண்டும். இறைநீதி வழங்கும் தீர்ப்பினை ஏற்று, அநுபவித்துத்தான் ஆகவேண்டும்.

"சொற்கேளாப் பிள்ளைகளால் குலத் துக்கீனம்" என்பது முதுமொழி. நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள். நாம் மனித குலத்தைச் சார்ந்தவர்கள். நாம் ஒவ்வொரு

செயலையும் செய்யும்போது, இறைவனை விசாரித்து, அறிந்து, ஒப்புதல் பெற்று, அதன் பின்னரே அச்செயலை ஆற்றவேண்டும். இறைவனின் சித்தத்தை உணர்ந்து ஒழுகாதவர்கள் துன்பங்கள், துயர்களை அநுபவித்தே ஆக வேண்டும். இறைவன் ஆறாவது அறிவு ஆகிய பகுத்தறிவை, நமக்குத் தந்தமை; நலம், தீது ஆராய்ந்து இறைவனின் ஒப்புதல் பெற்று, செயல்களைச் செய்வதற்காகவே என்பதை மனிதர்கள் உணரவேண்டும்.

எம்முடைய ஐந்து புலன்களும் எமக்கு அறிவூட்டும் கருவிகள். அவை அறிகருவிகள்; எமக்கு உதவுவதற்காகவே, இறைவனால் தரப்பட்டவை; எம்மைத் தமக்கு அடிமை கொள்வதற்கல்ல, என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். ஆனால் நடைமுறையில் பார்க்கும் போது மனம் மற்றும் புலன்கள் எம்மீது அதிகாரம் செலுத்துகின்றனவே தவிர, எமக்கு அடங்கி, எமக்கு ஊழியம் செய்வதாகத் தோன்றவில்லை. அதனாலேயே, உலகநீதி என்னும் நூல், எம்மைநோக்கி, "மனம் போன போக்கிலே போக வேண்டாம்" என்று அறிவுரை கூறுகிறது. "மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை" என்பது மற்றொரு மணிவாசகம்.

பஞ்சப் புலன்களையும், எமது அதிகாரத்தின்கீழ் கொண்டுவரும் ஆற்றலை நாம் இழக்காது; பலப்படுத்திக்கொண்டால் அவை நமக்கு நன்மையானவற்றையே செய்யும். ஆனால், நாம் சற்றுத் தளர்ந்து அவற்றிற்கு இடங்கொடுத்தால் மீளா அடிமையாக வேண்டி வரும். அப்பொழுது அவை எமக்கு வஞ்சனையைச் செய்யும். விளைவு; துன்பங்கள், துயர்கள், அல்லல்கள், தொல்லைகள்; வாழ்வில் நிரந்தரமாகத் தங்கிவிடும். எனவே வாழ்வில் வரும் துன்பங்களுக்கு நாமே காரண கர்த்தாக்கள். அவற்றை அனுபவித்தே தீர்க்க வேண்டும். கடவுளை நொந்து பயனில்லை. வினைக்கு ஏற்ற விளைவு நிச்சயம்; எவராலும் மாற்ற முடியாது.

இந்நிலையில் கடவுளை வழிபட்டு, விமோசனம் கேட்டால்; துன்பங்களை எதிர்கொண்டு, அநுபவிக்க வேண்டிய தைரியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். மீண்டும் கொடிய தீவினைகளைச் செய்வதில்லை என்ற உத்தரவாதத்தையும் வழங்கவேண்டும். மற்றும்படி செய்த தீவினைப் பயனை அநுபவித்தே தீர்க்கவேண்டும். அது இறை நீதியாகும். சைவ சித்தாந்தம் தரும் தீர்க்கமான கருத்தும் ஆகும்.

மாணிக்கவாசக சுவாமிகள், தாம் செய்த தவறுகளைப் பின்வரும் சிவபுராணப் பாடலடிகள்மூலம் இறைவனுக்கு எடுத்து இயம்புகிறார்.

"மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இல்லாத சிறியேன்"

தன் விலங்கு மனம், தன்னை ஆட்டிப்படைக்கும் கொடுமையை, மேற்படி பாடலடிகளில் விபரிக்கிறார்.

ஐம்புலன்களைத் தம் வசப்படுத்தாது, தாம் அப்பொறிகளில் அகப்பட்டிருந்தமையினால், தம்மை அவை வஞ்சித்துவிட்டன. அதன் விளைவு; தமது மனிதமனம், விலங்கு மனமாக மாற்றம் பெற்றமையேயாகும். வரண்ட பாலை நிலத்தில், புல், பூண்டுகள், செடி கொடிகள்

எதுவும் முளைக்கமாட்டாது. பசுமை என்பது காணக்கிடைக்காத பண்டமாகிவிடும். அவ் வாறே விலங்கு மனத்தில். அன்பு, அருள், கருணை, இரக்கம், நீதி, நியாயம், நல்லறிவு, நற்பண்புகள், பணிவு, அடக்கம், அமைதி எதுவுமே தோன்ற முடியாது. அத்தகைய நிலையில் மனித வாழ்வு, என்பது அதற்குரிய இலட்சணங்கள், பண்புகள், மனிதம் என்பவற் றுடன் அமையாமல்; விலங்கு வாழ்வாகவே அமையும். போர், வன்முறைகள், வன்செயல் கள் என்பனவே விலங்கு வாழ்வின் அவலட் சணங்கள். மனிதர்கள் ஆற, அமர இருந்து; இவற்றுள் எதுவேண்டும், என்பதை நன்கு சிந் தித்து தெளிவான முடிவை எடுக்கவேண்டிய காலம் தற்போது வந்துவிட்டது. மனித இயல் புக்கு மாறான விலங்கு மனம், மிண்டுமனம் என்பன மனித மனம், தொண்டுமனம் ஆக மாற்றம் பெறவேண்டும். அப்பொழுதுதான்; தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, தேசத்தின் அமைதி, உலக அமைதி என்பன சாத்தியமாகும். இவ் அரும்பெரும் நிலையை எய்துவதற்கு, மனிதனுக்கு இறை வனின் திருவருள் வேண்டும். மனிதன் திரி கரண சுத்தியோடு முயன்றால், மனிதனுக்கு முடியாததொன்றில்லை. "முயற்சி திருவினை யாக்கும்"- திருவள்ளுவரின் பொய்யாமொழி.

வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்.

## பணக்காரனின் கர்வம்

பல ஊர்களுக்கும் யாத்திரை சென்ற பட்டினத்தார் ஒரு ஊரில் தங்கினார். அவ்வூர் பணக்காரர் ஒருவர் பட்டினத்தாரை தன் வீட்டிற்கு விருந்து சாப்பிட அழைத்தார்.

இந்த ஊரிலேயே பெரிய பணக்காரன் நான்தான். நினைத்ததைச் சாதிக்கும் பலம் என்னிடம் இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் கேளுங்கள் என்று பெருமையுடன் தன்னை அறிமுகப்படுத்தினார்.

சற்று யோசித்த பட்டினத்தார் ரொம்ப நல்லது. அப்படியானால் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமே! என்று கேட்டார். என்ன சுவாமி... எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்லுங்கள். செய்யக் காத்திருக்கிறேன் என்றார் பணக்காரர்.

தன் பையில் இருந்து ஊசி ஒன்றை எடுத்த பட்டினத்தார், அதைப் பணக்காரரிடம் நீட்டினார். இந்தப் பழைய ஊசியைக் கொண்டு நான் என்ன செய்யவேண்டும் சுவாமி என்றார் பணக்காரர்.

இதைப் பத்திரமாக வைத்திருங்கள். நாம் இருவரும் இறந்தபிறகு மேலுலகத்தில் சந்திக்கும்போது திருப்பிக்கொடுத்தால் போதும், என்றார் பட்டினத்தார். இறந்தபிறகு இந்த ஊசியை எப்படிக் கொண்டுவர முடியும் என்று கேட்டார் பணக்காரர்.

அவரைப் பார்த்து சிரித்த பட்டினத்தார் இந்த உலகை விட்டுப்போனால் சிறு ஊசியைக்கூட கொண்டுபோக முடியாது என்று நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்கள். ஆனால், நினைத்ததைச் சாதிக்கும் வலிமை இருப்பதாக தற்பெருமை பேசுகிறீர்களே. ஒருவன் செய்த நன்மை, தீமை மட்டுமே இறந்த பிறகு கூட வரும். செல்வத்தால் யாரும் கர்வப்படத் தேவையில்லை. அதை இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். அதுதான் உண்மையான மகிழ்ச்சி தரும் என்று அறிவுரை கூறினார்.

வாழும் போதும் வாழ்க்கைக்குப் பிறகும் நம்முடன் வருவது நமது நற்செயல்களால் கிடைத்த புண்ணியங்கள் மட்டுமே. எனவே, இருப்பதை மற்றவருக்குக் கொடுத்து வாழுவோம்.

*அறிஞர்களின் கருவூலங்களாக விளங்குவது புத்தகங்கள்.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (நான்காவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

மலயத்துவச பாண்டியன் வடமொழி தமிழ் மொழி இரண்டினும் மிக வல்லவன். மனுநூல் வழி தவறாது செங்கோல் நடாத்து பவன்; முறை வேண்டினோருக்கும் குறை வேண்டினோருக்கும் காண்டற்கு எளியன்; கரு ணைக்கு உறையுள்; திரிகாலமும் நியாய மாகச் சிவதரிசனஞ் செய்பவன்; மிக்க அழகை உடையவன்; பதினாயிரம் மகளிரையுடை யவன்; சூரிய குலத்துப் பிறந்த சூரசேனன் என்னும் அரசனுடைய மகளாகிய காஞ்சன மாலையை விவாகஞ் செய்தான்.

அவன் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் வருத்தமுற்று, சிவ விரதங் களை அனுட்டித்து, பல தானங்கள் செய்து, பின்பு அசுவமேதஞ் செய்யத் தொடங்கி, தொண்ணூற்றொன்பது யாகம் செய்தான். அப்பொழுது தேவேந்திரன், "இப் பாண்டியன் நூறு யாகமும் முடிப்பின், என் பதம் நொடிப் பொழுதின் மாறி விடும்" என்று நினைந்து, பாண்டியன் இடத்துக்குச் சென்று, அசுவ மேதத்தை முடிக்காவண்ணம் தடுத்து, "நீ விரும்பியது புத்திர பாக்கியம்! அதற்கு இசை யப் புத்திர காமேட்டி செய்வையாயின், நீ புத்திரனைப் பெறுவாய்" என்று சொல்லிவிட்டுத் தன்னுலகத்தை அடைந்தான்.

மலையத்துவச பாண்டியன் தன் மனைவியோடு யாக சாலையிலே புகுந்து, புத்திர காமேட்டி செய்யத் தொடங்கினான். யாக குண்டத்திலே நெய், பொரி, சமித்து முதலியவற்றால் ஆகுதி செய்யும்போது அக்கினி சிகைவிட்டெழுந்தது. அப்பொழுது மலையரையனுடைய மனைவியாகிய மேனை நாண, மலையத்துவச பாண்டியனுடைய வலத் தோளும் அவன் மனைவியாகிய காஞ்சன மாலையினுடைய இடக்கண்ணும் துடிக்க, ஈரேழுலகமும் மகிழ்வெய்த, சைவசமயந் தழைத்தோங்க, பாவங் குன்ற, தருமம் வளர, வேதங்கள் ஒலிக்க, தேவ துந்துபிகள் எத் திக்கிலும் கலிக்க, தேவ மகளிர் நடிக்க, மதுரையினுள்ளாருடைய உள்ளத்திலே அவரையறியாது மகிழ்ச்சி பொங்க, பதினெண் பாடை நிலங்களுள் தமிழ்நாடே சிறக்க, தமிழ் நாட்டு மூவேந்தருள் பாண்டியரே பெருமை எய்த, உலக மாதாவாகிய உமாதேவி மூன்று முலைகளையுடைய ஒரு பெண்பிள்ளை வடிவ மாகி, மூன்று பிராயத்தோடு யாக குண்டத் தினின்றும் தோன்றி, வந்து, காஞ்சனமாலை யுடைய மடியில் இருந்தாள். உடனே காஞ்சன மாலை அப் பெண்பிள்ளையை எடுத்து, மார் போடு அணைத்துக்கொண்டு, உச்சிமோந்து, முத்தமிட்டு, பேரானந்தப் பெருஞ்செல்வம் உடையவளாயினாள்.

பரஞான வடிவமாகிய மீனாட்சியம் மையே தன்னன்பு மிகுதியினாலே வெளிவந்து தன் பிள்ளையாய் அவதரித்த பெருங்கருணை யையும், அதற்குக் காரணமாயுள்ள தன் மனைவியுடைய பெருந்தவத்தையும் அறி யாமல், மலயத்துவச பாண்டியன் வருத்த முற்று, "நான் புத்திர பாக்கியமின்றி நெடுங் காலம் வருந்தி, பெருந் தவங்கள் செய்தேன்

அதன் பின் இந்தப் புத்திர காமேட்டி செய்தேன்; இந்த யாகமோ ஒரு பெண் பிள்ளையைத் தந்தது, ஐயையோ! இந்தப் பெண் பிள்ளையும் என் பகைவர்கள் நகைக்கும் வண்ணம் மூன்று முலைகளையுடையதாய் வந்தது. இதற்கு நான் யாது செய்வேன்?" என்றான். அப்பொழுது, "அரசனே! உன் மகளுக்குப் புத்திரனுக்குப்போல தேவ விதிப்படி சடங்குகளெல்லாம் செய்து, தடாதகையெனப் பெயரிட்டு, முடி சூட்டக் கடவாய்; இப் பெண்ணுக்குக் கணவன் வரும்போது ஒரு தனம் மறையும்; நீ மனங் கலங்காதே" என்று சிவபிரானுடைய திருவருளினாலே ஆகாயத்தினின்றும் ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று. அது கேட்டவுடனே மலயத்துவச பாடிண்டியன் அன்பும் உவகையும் பெருக, கண்களினின்றும் சொரியா நின்ற ஆனந்தவருவி மார்பெங்கும் நிறைய, அடியார்க் கெளியவராகிய சோமசுந்தரக் கடவுளைத் துதித்து, யாகத்தை முடித்து, எழுந்து தன் மனைவியோடும் யாகசாலையை நீத்து, மாளிகையை அடைந்தான்.

அங்கே மண்டபத்தில் இருந்து, பிராமணருக்கும் பிறருக்கும் சுவர்ண தானஞ் செய்தான். சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயிலிலே விசேட பூசை திருவிழா முதலியன செய்வித்தான். "சிறையிலிருக்கின்றவர்களை விட்டு விடுங்கள்; சிறைச்சாலைகளை இடித்து விடுங்கள்; ஏழு வருடம் குடிகளிடத்து இறை வாங்காது விடுங்கள்; அயல் வேந்தரிடத்துத் திறை வாங்காது விடுங்கள்; ஆயத்துறையை நீக்கிவிடுங்கள்; ஆலயங்களையும் அறச்சாலைகளையும் விசேடமாக நடாத்துங்கள்" என்று முரசு அறைவித்தான். பகை மன்னரைக் கால் விலங்கை வெட்டுவித்து, யானை குதிரை தேர் அரசுரிமை முதலியவற்றை முன்னிருந்தபடியே கொடுத்து, அவரவர் தேசத்துக்குப் போக விடுத்தான். யாவரும் தத்தமக்கு வேண்டுவன எடுத்துக் கோடற் பொருட்டுப் பண்டாரத்தைத் திறப்பித்து விடுத்தான். புலவர்களுக்குப் பொன், வஸ்திரம், ஆபரணம், யானை, குதிரை, தேர் முதலியவற்றைக் கொடுத்தான். பாண்டிய நாட்டில் வசிப்பவர் யாவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

சிவபெருமான் அருளிச் செய்த வண்ணமே மலயத்துவச பாண்டியன் சாத கர்மம் முதலிய சடங்குகளைச் செய்து, தடாதகை எனப் பெயரிட்டு, அளவிறந்த பெருங்களிப்போடு வளர்க்கும் நாளிலே, தடாதகைப் பிராட்டி வேதம் முதலிய அறுபத்துநான்கு கலைகளையும் கற்றுணர்ந்து, யானை குதிரை தேர் செலுத்துந் திறத்தினும், வில், வாள் முதலிய படைத் தொழிலினும் மிக வல்லவளாயினாள். அதுகண்டு, தந்தையாகிய மலயத்துவச பாண்டியன் மனமகிழ்ந்து, அவளுக்கு முடிசூட்டத் துணிந்தான். அவனுடைய ஆணையினாலே மந்திரியாகிய சுமதி முடிசூட்டும் மங்கலதினம் வரையறுத்து, தேயங்கள்தோறும் ஓலை போக்கி, நகரமெங்கும் அலங்கரிப்பித்து, முனிவர் அரசர் முதலிய யாவரையும் வருவித்தான்.

மலயத்துவச பாண்டியன் யானையின் மேல் வருவிக்கப்பட்ட கங்கை முதலிய நவ தீர்த்தமும் பூரித்த சுவர்ண கும்பத்தைப் பூசித்து, அக்கினி காரியஞ் செய்து, இரத்தின சிங்காதனத்தைப் பூசை பண்ணினான். பின்பு திருமுடியை யானைமேல் வைத்து, நகர்வலஞ் செய்து, பூசித்து, தடாதகைப்பிராட்டியாரை அச் சிங்காதனத்தின் மேலே இரத்தினச் சுடிகையையுடைய பொன்வடிவாகிய ஐந்தலை நாகம் படம் பரப்பி மேலே கவிக்கும் வண்ணம் அதன்கீழ் எழுந்தருளப்பண்ணி, கும்ப தீர்த்தத்தினாலே அபிஷேகஞ் செய்து, தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிய, முனிவர்கள் ஆசி

கூற, தேவ மகளிர்கள் நடிக்க, இருடி பத்தினி கள் பல்லாண்டு பாட மங்கல வாத்தியம் முழங்க, வேதம் ஒலிக்க, அவளுக்கு முடி சூட்டித் தன்னரசைக் கொடுத்தான். அதன்பின் வெண்குடை நிழற்ற, வெண்சாமரம் வீச, தேவர்கள் பூமாரி பெய்ய, மங்கல தூரியம் முழங்க, வெள்ளை யானை மேலேற்றி, நகர் வலஞ் செய்வித்து, அசரீரி வாக்குத் தோன்றிய நாளினும் பேரானந்தப் பெருஞ் செல்வம் அடைந்தான்.

சில நாளாயின. பின், மலயத்துவச பாண்டியன் சுவர்க்கம் அடைந்தனன். அவனுக் குச் செயற்பாலனவாகிய உத்தரக்கிரியை களை மகளாகிய தடாதகைப் பிராட்டியார் விரதநெறி பூண்டு விதிப்படி செய்து முடித் தனள்.

பெண்ணரசியாகிய தடாதகைப் பிராட்டி யார் அறநூல்வழி அரசியற்றிய பெருமையைச் சிறிது சொல்வாம். சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உண்டென்னும் காலமாகிய பிராமீ முகூர்த்தத்திலே இனிய வாத்தியவொலி திருச் செவி மடுப்ப விழித்தெழுந்து, சிவத்தியானம் பண்ணி, ஸ்நானஞ் செய்து, சந்தியாவந்தனம் இயற்றி சோடச தானங் கொடுத்து, சிவபூசை முடித்துக்கொண்டு அந்தணர் அமைச்சர் முதலாயினோர் சூழ, திருக்கோயிலிற் சென்று, சோமசுந்தரக் கடவுளை விதிப்படி வலஞ் செய்து, வணங்கித் துதித்து, மாளிகைக்குத் திரும்புவாள்; திரும்பி அத்தாணி மண்டபத்தை அடைந்து அநிந்திதை, கமலினி என்னும் தோழியர் இருவரும் மானுட மகளிராகி அடைப்பையும் பொற்காளாஞ்சியும் ஏந்த, இலக்குமியும் சரசுவதியும் அவ்வாறே மானுட மகளிராகி இருபுறமும் வெண்சாமரை வீச, சோழ ராசனும் சேர ராசனும் தன்னுடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கித்தான் பணித்த ஏவல்களைச் செய்ய ஏவலாளர்கள், "எம்பெருமாட்டியார் எப்போது தமது திருவருட் கண் சாத்துவாரோ" என்று சிறிதும் இமையாது பார்த்துக்கொண்டு நின்று திருக்கண் சாத்திய வழி, "உய்ந்தோம், உய்ந்தோம்" என்று கைகூப்பி வாய் பொத்தித் தத்தமக்குரிய பணி கேட்டுய்ய, கஞ்சுகிமாக்கள், "இவன் மாரடதேச ராசன், இவன் கருணாடதேச ராசன், இவன் விராடதேச ராசன், இவன் குருதேச ராசன், இவன் சேரன், இவன் சோழன்" என்று இருபக்கத்திலும் தங்கள் கையிற் பிரம்பினாலே சுட்டிக்காட்ட, வடமொழியினும் தமிழ்மொழி யினும் வல்ல புலவர்களும் வேதம் முதலிய அறுபத்துநான்கு கலைகளையுணர்ந்தவர் களும் சமயநூல் ஆறினும் வல்லவர்களும் முனிவர்களும், சிவஞானிகளும் பஞ்சாங்கஞ் சொல்லும் அந்தணரும் சுமதி முதலிய மந்திரிகளும் சூழ, இரத்தின சிங்காசனத்தின் மேலே அமிர்தவடிவாகிய பிரதிமைபோல வீற் றிருந்தருளுவள். திருக்கோயிலிலே நடக்கும் நித்திய நைமித்தியங்களையும், பிராமணருக் குரிய விருத்திகளையும், தருமசாலையிலே நடக்கும் அன்னதானம் முதலியவற்றையும், குடிகளுக்கு நிகழ்வனவற்றையும், மந்திரி களால் அறிந்தும், தனித்தனியே ஒற்றரை விடுத்தறிந்தும், அவ்வவைகளிலே குறைவுண் டாயின் அக்குறை செய்தாரைத் தண்டித்து, அதனைத் தீர்ப்பாள். வாதிகள் தம்முள் வாதஞ் செய்யும் கோஷ்டியின் மேலே மகிழ்ச்சி கூர்வாள். நினைப்பினும், சொல்லினும், கேட்பினும் புத்தமிர்தத்தினும் தித்திக்கும் வண்ணம் புலவர்களாலே தொடுக்கப்பட்ட செய்யுள்களைத் திருச்செவிமடுப்பாள். பிரா மணரையும், சைவரையும், துறவிகளையும் அமுது செய்வித்து, அவர்கள் தங்கள் நாவி னாலே செய்யும் விருந்தை அமுது செய்வாள். பின்பகலிலே சிவ புராணங்களையும் மனு முதலிய தரும நூல்களையும் கேட்டுத்

திருவுள மகிழ்வாள். இல்வாழ்வார் செய்யும் தருமங்களை விருத்தி செய்யும் பொருட்டுத் திரவியங்களைக் கொடுப்பாள். யாகங்களை நடத்துவாள். கல்விப்பொருள், செல்வப்பொருள் என்னும் இரண்டையும் தன்னிரு கண்போலக் கொண்டு தழைத்தோங்கும்படி நாடோறும் வளர்ப்பாள். கன்னியாகிய தடாதகைப் பிராட்டி யினாலே இவ்வாறு அரசியற்றப்பட்டமையால், பாண்டிநாடு கன்னிநாடு எனப் பெயர் பெற்றது.

இவ்வாறே மீனாட்சியம்மையார் திரு அவதாரஞ் செய்த சரித்திரத்தை அகத்திய மாமுனிவர் திருவாய் மலர்ந்தருளியபோது, முனிவர்கள் அவரை வணங்கி, "தபோநிதியே! நான்கு வேதங்களாலும் உணரப்படாத பராசக்தி வடிவாயும், சர்வான்மாக்களையும் பெற்ற மாதாவாயும் உள்ள எம் பெருமாட்டியாகிய உமாதேவி தக்கனும் இமயமலையரையனும் நெடுங்காலம் வருந்தித் தவஞ்செய்தமையால் அவர்களுக்கு மகளாய்த் திருவவதாரஞ் செய்தனள். மனிதனாகிய பாண்டியனுக்கு மகளாய் வந்த காரணம் யாது?" என்று வினாவ, அகத்திய மகாமுனிவர் சொல்வாராயினார்:-

"முனிவர்களே! கேளுங்கள்:- விசுவாவசு என்னும் பெயரையுடைய ஒரு வித்தியாதரன் வித்தியாவதி என்னும் ஒரு பெண்ணைப் பெற்றான். அவள் உமாதேவியிடத்து மிக்க அன்புடையவளாகி, தன் பிதாவை வணங்கி, "ஐயா! அடியேன் உமாதேவியை வழிபட்டு உய்யவேண்டும்" என்றாள். விசுவாவசு உமாதேவியினுடைய மந்திரத்தை அவளுக்கு உபதேசித்தான். அவள் பிதாவை நோக்கி, "உமாதேவியை வழிபடுவதற்குச் சிறந்த புண்ணிய தலம் யாது?" என்று வினாவ, அவன் அவளை நோக்கி, "பூமியிலே மதுரையெனப் பெயர் கொண்ட ஒரு சிவதலம் உண்டு. அது பூலோக சிவலோகமெனப்படும். அதுவே துவாதசாந்தத் தலம். சத்திபீடம் அறுபத்து நான்கு அவற்றுள் முதற்பீடம் மதுரையே. அதுபோக மோட்சங்களையும் அவரவர் வேண்டிய சித்திகளையும் கொடுப்பதென்றறிந்து, தேவர்கள் அல்லும் பகலும் அங்கே போய் உமாதேவியைப் பூசிப்பார்கள். நம்மவர்களுள்ளே என் பிதாவுடனே ஐவர்கள் அங்கே சென்று, மீனாட்சியம்மையை வழிபட்டுப் பல வரங்களைப் பெற்றார்கள். உலக மாதாவாகிய மீனாட்சியம்மையாவரேயாயினும், தன்னை அன்போடு வழிபடுவோருக்குப் போக மோட்சங்களைக் கொடுத்துக் கொண்டு அங்கே பெருங்கருணையோடு வீற்றிருந்தருளுவள்" என்றான். உடனே வித்தியாவதி பிதாவை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, மதுரையை அடைந்து, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சொக்கலிங்க மூர்த்திக்கு வலப்பக்கத்திலே எழுந்தருளியிருக்கும் மீனாட்சியம்மையை வணங்கினாள். தை மாசம் முதலாகக் கொண்டு அம் மாசத்திலே மத்தியானத்திலே போசனஞ் செய்தும், மாசி மாசத்திலே இரவிலே போசனஞ் செய்தும், பங்குனி மாசத்திலே உதவப் பெற்றதைப் புசித்தும், சித்திரை மாசத்திலே இலை முதலியவற்றை உண்டும், வைகாசி மாசத்திலே எள்ளுப்பொடியை உண்டும், ஆனி மாசத்திலே சாந்திராயண விரதம் அனுட்டித்தும், ஆடி மாசத்திலே பஞ்சகவ்வியத்தை உண்டும், ஆவணி மாசத்திலே பாலை உண்டும், புரட்டாசி மாசத்திலே நீரை உண்டும், ஐப்பசி மாசத்திலே தருப்பை நுனி நீரை உண்டும், கார்த்திகை மாசத்திலே வாயுவை உண்டும், மார்கழி மாசத்திலே பட்டினியாயிருந்தும் இவ்வாறே பன்னிரண்டு மாசமும் பெருந் தவஞ் செய்தாள். மேல்வந்த தை மாசத்திலே சந்நிதியை அடைந்து, வணங்கி நின்று, மீனாட்சியம்மையை இருதய கமலத்திலே தியானித்து, யாழ் கைக்கொண்டு, நரம்போசை பின்செல்லப் பாடுவாளாயினாள்:-

ஒளியா லுலகின் றுயிரனைத்து
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்க
ண்ணே கன்னி யன்னமே
அளியா லிமவான் றிருமகளா
யாவி யன்ன மயில் பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட்ட யருஞ் செயலென்னே.

அண்டக் குவைவெண் மணற்சிறுசோ
றாக்கித் தனியே விளையாடுங்
கொண்டற் கோதாய் படியெழுத
லாகா வுருவக் கோகிலமே
கொண்டற் குடுமி யிமையவரை
யருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும்
விளையாட் டயரும் வனப்பென்னே.

வேத முடிமே லானந்த
வுருவாய் நிறைந்து விளையாடு
மாத ரரசே முத்தநகை
மானே யிமய மடமயிலே
மாத ரிமவான் றேவிமணி
வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து
விளையாட் டயரும் பரிசென்னே.

இப்படியே வித்தியாவதி பாடித் துதி செய்ய, அன்பு வலைப்படும் பெருங்கருணைப் பெருமாட்டியாகிய மீனாட்சியம்மை மூன்று பிராயத்தையுடைய ஒரு சிறு பெண் குழந்தை வடிவங்கொண்டு ஆலயத்தில் வந்து நின்றாள். வித்தியாவதி அவளை நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலிசெய்து கொண்டு நின்றாள், உலக மாதாவாகிய மீனாட்சியம்மை அவள் மேலே தமது திருவருட்கண்சாத்தி, "நீ யாது விரும்பினை!" என்று வினவியருள, விந்தியாவது அஞ்சலி செய்து,"தாயே! உன்னுடைய திருவடித் தாமரையிலே நிறைந்த பேரன்பு ஒருகாலும் நீங்காத பெரு வாழ்வைத் தந்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தாள். அதுகேட்ட மீனாட்சியம்மை, "இன்னும் வேண்டுவது யாது? சொல்" என்றருளிச் செய்ய, வித்தியாவதி, "இந்தப் பெண்ணுருவமாய் வந்து அடியாளிடத்து அருள் சுரந்திருக்கும்படி திருவுளம் கொண்டருளுக"

*செய்த வினையும், செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையாது.*

என்று பணிந்தாள். மீனாட்சியம்மை அதற்கியைந்து, "இந் நகரத்திலே மலயத்துவச பாண்டியன் என ஒருவன் பிறப்பான். நீ அவனுக்கு மனைவியாய் வருவாய். அப்பொழுது நான் உனக்குப் புத்திரியாய் வருவேன்" என்று திருவாய் மலர்ந்தருளினாள். மீனாட்சியம்மை பாண்டியனுக்குப் புத்திரியாய்த் திருவவதாரஞ் செய்த காரணம் இதுவே".

இவ்வாறு அகத்திய முனிவர் சொல்லக் கேட்டு, முனிவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். (தொடரும்...

## மனித நேயம் கொண்டவராய் வாழ்வீர்!

தேவ மைந்தன் யேசுபிரான் உயிர்த்தெழுந்த
திருநாள் ஆராதனையில் கலந்துகொள்ள,
ஆவலொடு ஆலயத்தில் வந்து நின்ற
அன்பர்களின் மீதுகுறி வைத்தே அன்று,
பாவச் செயல்களினைப் புரிந்தார்! மனிதப்
பண்புகளே இலர் குண்டை வெடிக்கவைத்து, பலர்
சாவதற்குக் காரணமாய் இருந்தார்! இன்னும்
சஞ்சலத்தில் பலர் வாழ வஞ்சனைகளே செய்தார்!

ஆராதனை செய்ய அதிகாலை வந்தவரும்,
ஆண்டவனைத் தொழுதுமன அமைதிபெற வந்தவரும்,
பேராபத்துக் குள்ளாகி பெருங்கவலை கொள்வதுவோ?
பிள்ளை, குட்டி, உறவுகளை இழந்து மனம் வருந்துவதோ?
தீராத நோய், பிணிக்கு முகங் கொடுத்தே மக்கள்
தினந்தினமும் துன்புறுதல் நன்றோ சொல்வீர்?
போராலே குருதி சிந்தி மாய்தல் நன்றோ? புனிதர்
போதனையைப் புறந்தள்ளி வாழ்தல் நன்றோ?

அல்லலுற்று நிற்கின்ற நேரமெல்லாம், மன
அமைதி தரும் இடமாய் ஆலயத்தை
எல்லோரும் நினைத்திருக்க ஏனோ அந்த
எழில் கொஞ்சும் ஆலயத்தை தகர்த்திட்டாரே!
கல்மனமே கொண்டவரின் செயலால், அங்கு
கதிகலங்கி நின்றோர் தாம் எத்தனை பேர்?
பொல்லாத் தனங்களுக்கு முடிவில்லையோ? எங்கள்
புனித மத ஸ்தலங்களுக்கு இதுதான் நிலையோ?

மதங்களெலாம் கூறுகின்ற நல்வழிகளை, இங்கு
மாற்ற வழிகாண்கின்றார்? மமதைகொண்டு
மதம்பிடித்து அலைகின்றார்! மனித வாழ்வை
மண்ணோடு மண்ணாக்க இவர் நினைப்பார்!
நிதமிங்கு இன, மத, மொழி பேதங் கொண்டு
நிம்மதியைக் கெடுத்திங்கு வாழ்தல் முறையோ? எந்த
மதமும் இதை ஏற்பதில்லை உணர்வீர்! என்றும்
மனித நேயம் கொண்டவராய் மண்ணில் வாழ்வீர்!

- கி. குலசேகரன்

தன்னிடம் தானே நம்பிக்கை இழப்பது இறைவனிடம் நம்பிக்கை இழப்பதாகும்.

# மாதா பிதா குரு தெய்வத்தை மறந்தமையே நாட்டின் குழப்பநிலைக்குக் காரணம்

**– திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

விஞ்ஞானம் தற்பொழுது எங்கும் எவையிலும் செறிந்து மண்ணையும் விண்ணையும் தாண்டிச் சென்றுவிட்டது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நாடொறும் புதுப்புது நவீன முறையில் விற்பனை ஆகின்றன. எல்லா வீடுகளிலும் விஞ்ஞான தொலைக் கருவிகள் பாவனைக்கு வந்துவிட்டன. ஐந்து வயதுக் குழந்தை கையிலும் கையடக்கத் தொலைபேசிகளும் - காட்சிப் பொருட்களும் தவழுகின்றன. காலை எழுந்தவுடன் மனிதன் கையில் தொலைக் கருவிகள் நடமாடத் தொடங்கிவிடும். நாளாந்த கூலி வேலை செய்யும் மனிதன் கையிலும் கையடக்கத் தொலைபேசி இருப்பதைக் காண்கிறோம். விஞ்ஞானம் மனிதன் வாழ்க்கையை மாற்றி எதையும் செய்யலாம் என்ற மனப்பாங்கை ஏற்படுத்தி விட்டது. விஞ்ஞானம் அதி உச்ச வளர்ச்சியடைந்ததை யாராலும் மறுக்க முடியாது. வாழ்க்கையே விஞ்ஞானமயமாக மாறிவிட்டது. இதனால் மனிதன் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பவற்றை மறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். இந்நிலையை உணர்ந்த முருகப் பெருமான் அருணகிரிமூலம் மெய்ஞ்ஞானத்தின் மேன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

விஞ்ஞான வாழ்க்கையில் செல்கின்ற மனிதனுக்கு கடவுள் என்ற பரம்பொருள் உண்டு என்பதையும், அவனே எம்மைப் படைத்தான் என்ற எண்ணத்தையும் மறக்கச் செய்துவிட்டது. உலகம் குழப்பநிலை அடையப்போகின்ற நிலையை உணர்ந்த முருகப் பெருமான், மலையிலிருந்து குதித்து இறக்க முற்பட்ட அருணகிரியைக் கையில் ஏந்தி, தன் புகழைப் பாட வைக்கவும், உடம்பிலிருந்து உயிரை எடுத்து, இறந்த கிளியின் உடலில் தனது உயிரைப் புகுத்தி, பூப்பறிக்கச் சென்று, பாரிசாதப் பூக்களுடன் கிளி உருவில் வந்த அருணகிரி தனது உடல் எரிக்கப்பட்டதை அறிந்து எல்லாம் வினையின் செயலென உணர்ந்து, கிளியாகவிருந்து கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி பாடினார் என்பது உண்மை நிகழ்வாகும். கலியுகக் கடவுளாக விளங்கும் முருகப்பெருமான் கோவில்களுக்கு சென்று, மனிதர் வழிபட்டுவர மெய்ஞ்ஞானம்தான் சிறப்புடையதென்பதை உணர்வார்களென்று எண்ணுகின்றார். கோவிலுக்குச் செல்லும் அடியார்கள் கூட்டுதல், சுவாமி காவுதல், ஆலவட்டம் பிடித்தல் போன்ற தொண்டுகளைச் செய்து, வினைப் பயனை நீக்கி இறைவனடி சேரலாம் என்ற உண்மையை உணர்வார்கள். இன்னும் கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளினின்றும் இறைவனை அடையலாம். சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் கிரியைத் தொண்டும் திருநாவுக்கரசர் சரியைத் தொண்டும் சுந்தரமூர்த்தி நாயனார் யோகத் தொண்டும், மாணிக்கவாசக சுவாமிகள் ஞானத் தொண்டும் செய்து தூல உடம்புடன் தில்லைச் சிவனுடன் இரண்டறக் கலந்தார் என்பதை சைவ சமயத்தவர்கள் நன்கு அறிவார்கள். இந்த நிலைகளை மக்கள் நன்கு

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*

உணர்வாராகில் மாதா, பிதா, குரு, தெய்வம் உண்டு என்னும் நிலைக்கு வந்துவிடுவார்கள். நாட்டில் குழப்பநிலையும் இல்லாது போய் விடும். நாட்டில் மக்கள் நிம்மதியாகவும் சந் தோஷமாகவும் வாழ்வார்களென்பது திண்ணம்.

விஞ்ஞான வளர்ச்சியால் எமது கலை கலாசாரங்கள் மாறிவிட்டன. ஒழுக்கக்கேடு ஏற் பட வழிதிறந்ததென்பது உண்மை. வீட்டிலும், பாடசாலையிலும், பிள்ளைகளுக்கு சமய நெறியை வளர்க்க பெற்றோர்களும், ஆசிரியர் களும் பாடுபட வேண்டும். காலை எழுந்த வுடன் பெற்றோர்கள் பிள்ளைகளை கை கால் முகம் கழுவச் செய்து, சுவாமி அறைக்குக் கூட்டிச்சென்று விபூதி அணியச் செய்து இறை வன் பாடல்களைப் பாட விடவேண்டும். அது போல் பாடசாலையிலும் காலை வழிபாட்டில் ஆசிரியர்கள், கடவுள் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல் லாம் வல்லவரென்ற இறைவனின் இயல்பை நாடொறும் பிரசங்கமூலம் எடுத்துரைக்க வேண்டும். பிள்ளைகள் கைகளில் தற்பொழுது நடமாடுகின்ற விஞ்ஞான கைத்தொலைப் பொருட்களின் பாவனையைக் குறைக்க புத்தி மதி கூறவேண்டும். பிள்ளைகள் முழுநேரமும் விஞ்ஞானத் தொலைக்காட்சிப் பொருள்களில் ஈடுபட விடாது, கல்வியின் முக்கியம் பற்றி எடுத்துரைக்க வேண்டும். எமது வாழ்க்கைக்கு கல்வி முக்கியமென்றும், கல்வி இல்லாத மனிதன் அரை மனிதனென்றும், கல்வி சென்ற இடமெல்லாம் சிறப்பெய்தும் என்றும் அறிய வைக்க அன்பாகப் பேசவேண்டும். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற முதுமொழிக் கிணங்க, சிறு குழந்தைகள் மனதில் பதிய வைத்தால், அது அழியாது இறக்கும்வரை இருக்குமென்பது உண்மை. இந்நெறிகளை பிள்ளைகள்மூலம் நெறிப்படுத்தி வர நாட்டில் குழப்பநிலை குறைந்து விடும். பிள்ளைகளின் மனநிலை மாற்றமடையும்போது கடவுள் நம் பிக்கை ஏற்படும். மாதா, பிதா, குரு மதிக்க வேண்டியவர்கள் என்ற உண்மையையும் உணர்வார்கள். சாந்தி சமாதானம் நிலவும்.

மனிதன் விஞ்ஞான வளர்ச்சியுடன் போட்டியிட முடியாவிட்டாலும், மக்களின் வாழ்க்கைக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் மிகவும் இன்றியமையாதவை என்ற உண் மையை அறிய வைக்கவேண்டும். மானிடப் பிறவி அரிய பிறவி எனும் உண்மையை உணர்ந்து மனிதன் மனிதனாக வாழ அறிவுறுத் தப்பட வேண்டும். வெளிநாட்டு மோகமும், விஞ்ஞானத்துடன் கலந்து மனிதனின் நிம்மதி யான வாழ்க்கையைக் கெடுக்கின்றது என்ற உண்மை யாவரும் அறிந்த உண்மையாகும்.

வினைப்பயனை ஒழித்து, இறைவனடி சேர வந்த மனிதனை நவீன கண்டுபிடிப்புக் கருவிகள் ஒரு பக்கம் இழுக்கவும், வெளி நாட்டு கலாசாரமோகம் இன்னொரு பக்கம் இழுக்கவும், வாழ்க்கையாகிய ஓடத்தைக் கொண்டு கரை சேர்க்க அவலப்படுகின்றான். இதனால் மனிதன் காற்றாகப் பறந்து உழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்நிலை மாறி நிம்மதியாக வாழவேண்டு மாயின் எந்நிதியையும் கொடுத்து நிம்மதியை யும் அளிக்கும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆலயம் சென்று வழிபட்டு வாருங் கள். வினைகள் நீக்கப்பெற்று இறைவனடி சேர்வீர்கள்.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 19 | தை 05 | ஞாயிறு | திருநீலகண்டர் |
| | | | | தாயுமானவ சுவாமிகள் |
| ஜனவரி | 23 | தை 09 | வியாழன் | நயினாதீவு முத்துக்குமாரசாமி |
| பெப்ரவரி | 12 | தை 29 | புதன் | சண்டேசுரர் |

*சத்தியம், தர்மம், உண்மை, அகிம்சை ஆகியவை உண்மை மனிதனின் நெறி.*

# கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல மூலமும் உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவரவர்கள் இயற்றிய உரையும் (மீள்பதிப்பு) நூல் வெளியீடு

– **தொகுப்பு, திரு மு. கௌரிகாந்தன்** அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்து சைவ சித்தாந்தத் துறையின் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்து சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி இணைப்பாளருமான கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல மூலமும் உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவரவர்கள் இயற்றிய உரையும் (மீள்பதிப்பு) நூல் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரமத்திலே 13.12.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திரு தங்கராசா அவர்களின் திருமுறை ஓதலுடன் ஆரம்பமானது.




ஓய்வுநிலை அதிபரும் ஞானபண்டித ஆன்மீக வித்தகரு மாகிய திரு ஆ. சிவநாதன் தலைமையில் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. இவர் தமது தலைமையுரையில் பசிப்பிணி போக்கும் நித்திய அன்னதானப் பணியுடன் கல்வி, வைத்தியம், சைவ சமய அறிவுப் பரப்புகை போன்ற விடயங்களிலும் தன்னாலான பங்களிப்பினை ஆற்றிவருகின்ற சந்நிதியான் ஆச்சிரமம் தற்போது சைவ அடியார்களது காலத்தின் தேவையான வள்ளியம்மை திருமணப்படல நூலினையும் மீள்பதிப்புச் செய்து வெளியிடுகின்றது. இதன் பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள்பீட சைவசித்தாந்தத் துறையின் தலைவர் முனைவர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் அவர்களையும் அனுசரணை யாளராக விளங்கிய கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் அவர்களையும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரையும் உளமாரப் பாராட்டுகின்றேன் என்றார்.

ஆசியுரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் கலைப்பீடாதிபதியும், தகைசார் பேராசிரியருமான கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெறுகின்ற நூல் வெளியீட்டில் கலந்துகொள்வதாகவும் இவ்வாச்சிரமத்தின் சமய, சமூக சேவைகளின் சிறப்புப் பற்றியும் பதிப்பாசிரியரின் சிறந்த முயற்சியின் பலனாய் இந் நூல்வெளியீடு இடம்பெறுகின்றது எனவும் இத்தகைய கைங்கரியங்கள் காலந்தோறும் தொடரப்பட வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே இந்துக் கற்கைகள்பீடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள இவ்வாண்டு இந்நிகழ்வு முதலாவதாக சந்நிதியானின் திருவருட்பேற்றினால் கைகூடியுள்ளமை சிறப்பானதெனவும் கூறினார்.

*கண்கள் உறங்கலாம், கனவுகள் உறங்கக்கூடாது.*

இந்துக் கற்கைகள் பீட சமஸ்கிருதத் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ எஸ். பத்மநாபன் அவர்கள் வாழ்த் துரையில் எமது இந்துப்பண்பாட்டு விருத்திக்கு காலத்தினால் செய்யப்பட்ட இச்செயல் மிக வும் போற்றுதற்குரியது; பாராட்டுதற்குரியது. இந்நிகழ்வுக்கு அருந்துணை நின்ற கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் பாராட்டுக்குரியவர் எனவும் ஆலயங்கள் சமுதாய மையங்கள் என்பதற்கிணங்க சந்நிதியான் ஆச்சிரமத்தினர் மேற்கொண்டுவரும் இதுபோன்ற பணிகள் தொடரப்படவேண்டுமெனவும் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன் மேலும் பல நூல் களையும் எழுதியும் பதிப்பித்தும் எமது சமூ கத்திற்கு சேவைபுரிய வேண்டுமெனவும் குறிப் பிட்டார்.

இந்துநாகரிகத்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் கலாநிதி மா. வேத நாதன் ஆசியுரையில் பதிப்பாசிரியர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன் மிகச் சிறந்த ஆய்வாளர். உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் பல ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர். நீண்டகாலம் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருபவர். பயன்மிக்க அவரது முயற்சிகள் மேன்மேலும் சிறக்கவேண்டுமென வும் வாழ்த்தினார்.

இந்துநாகரிகத்துறையின் பதில் தலை வர் திரு சயனொளிபவன் முகுந்தன் தமது கருத்துரையில், கந்தபுராணத்திற்கு ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர்கள் பலர் உரை செய் திருக்கிறார்கள். அவர்களுள் உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர் கந்தபுராணத்து வள்ளி அம்மை திருமணப்படலத்திற்கு எழுதிய உரை மிகவும் சிறப்பானது. இதனை ஏனையோரது உரைகளுடன் ஒப்பீடு செய்து பார்க்கின்ற போது தெரிந்துகொள்ள முடியும். புலவரவர் களின் உரை அனைவராலும் இலகுவில் விளங்கிக்கொள்ள முடிகின்றமையும் அதன் சிறப்பிற்கு முக்கியகாரணமாகும். இத்தகைய மகிமை பொருந்திய உரை நூலினை எமது ஆசிரியரும் சைவ சித்தாந்தத்துறையின் தலை வருமாகிய கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன் அவர்கள் மகிமைமிக்க சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆதரவுடன் பதிப்பித்துத் தந் தமை மிகவும் போற்றுதற்குரியது. கந்த புராணம் யாழ்ப்பாணத்தில் செழுமையடைந்து வருவதற்கு இது தக்க சான்றாகும் என்றார்.

நூலின் பதிப்பாசிரியர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன் தமது நன்றி உரையில், யாழ்ப்பாணத்துக் கலாசாரம் கந்த புராணக் கலாசாரம் என்பதற்கு ஏற்ப யாழ்ப் பாணத்தில் கந்தபுராணம் மிகவும் உன்னத மான நிலையில் விளங்குகின்றது. கந்த புராணம் இந்தியாவில் தோற்றம் பெற்றாலும் அதன் வளர்ச்சி இலங்கையிலும் மற்றும் உலக நாடுகளிலும் மிகச் சிறப்பாகப் பேணப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏட்டுச் சுவடியில் இருந்த கந்தபுராணத்தினை முதன் முதலில் அச்சில் பதிப்பித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்களாவார். இக் கந்தபுராணத்தினை வயது வேறுபாடு இல்லாது அனைவரும் பாரா யணம் பண்ணுகின்றனர். இதன் செல்வாக் கினால் கந்தசஷ்டி விரதம் முக்கியமான விரத மாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்றார்.

மேலும் அவர், இத்தகைய பயன் மிக்க செயற்பாடுகளுக்குத் துணைநிற்கும் ஒரு கைங்கரியத்தினை சந்நிதியான் ஆச்சிர மத்தில் அரங்கேற்றியும் வைப்பதற்கு கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் மிகவும் பக்க பலமாக நின்று செயற்கரிய செயலைச் செய்து உதவியிருக்கின்றார். இந்நூல் போன்று எதிர் காலத்திலும் பல நூல்களை வெளியிடுவதற்கு அவரது சேவை வேண்டப்படுவதொன்றாகும். மடங்கள், ஆச்சிரமங்கள், சமுதாய மையங் கள் என்பதற்கு ஏற்ப இப்பெரியாரும் இங்கு

*ஒரு பெண்ணின் முழு வாழ்க்கை அன்பை விளக்கும் சரித்திரமாக அமைகின்றது.*

சலியாது பணிபுரியும் மெய்த் தொண்டர்களும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும் ஆற்றிவரும் அருஞ் சேவைகள் அனைவராலும் மிக்க நன்றியுணர்வுடன் நினைவுகூரப்பட வேண்டியவை. இத்தகைய முயற்சிகளை இவர்கள் தொடர்ந்து முன்னெடுக்க எல்லாம் வல்ல சந்நிதிப் பெருமான் துணைபுரிய வேண்டும் என்று வேண்டி எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றார்.

நூலின் முதற்பிரதியினை யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின் சார்பாக ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் திரு செ. ஞானசபேசன் அவர்களும், சிறப்புப் பிரதிகளை திரு தேவராஜா தயான், திரு சிவசம்பு ஸ்ரீதரன் முதலானோரும் பெற்றுக்கொண்டனர்.

சைவ பண்பாட்டு அறிவுவிருத்திக்கும் சமய எழுச்சிக்கும் துணைபுரியக்கூடிய அரிய நிகழ்வாக கந்தபுராண நூல் வெளியீட்டுவிழா அமைந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

அதனைத் தொடர்ந்து வாராந்த வெள்ளி நிகழ்வின் வரிசையில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் அன்றைய நிகழ்வுகள் யாவும் நிறைவுக்கு வந்தது.

---

## சுயநலமும் பொதுநலமும்

குருநாதர் ஒருவரும் அவரது சீடனும் குளக்கரையில் அமர்ந்திருந்தனர். சீடனின் சந்தேகங்களுக்கு குரு உரிய பதில் அளித்துக்கொண்டிருந்தார். "குருதேவா! சுயநலத்துக்கும் சுயநலமின்மைக்கும் என்ன வித்தியாசம்?" எனக் கேட்டான். சுற்றும் முற்றும் பார்த்தார் குரு. ஓர் இளைஞன் தூண்டிலுடன் குளக்கரையில் அமர்ந்திருந்தான். குரு தன் சீடனுடன் அந்த இளைஞன் அருகே சென்றார். தூண்டில் வீசிக்கொண்டிருந்த இளைஞன் அருகில் ஒரு கூடை இருந்தது. அந்தக் கூடையில் மீன்கள் துடித்துக்கொண்டிருந்தன. இளைஞன் அருகில் சென்ற குரு பேச்சுக் கொடுத்தார்.

"தம்பி மீன் என்றால் உனக்கு ரொம்ப பிடிக்குமா?" என்று கேட்டார். "மீன் என்றால் எனக்கு உயிர். இப்போது நான் பிடிக்கும் அவ்வளவு மீன்களையும் இன்றிரவே சமைத்து சாப்பிடுவேன்! இந்தக் குளத்தின் மீன்கள் தனி ருசி!" என்றான் மீன் பிடித்துக்கொண்டிருந்த இளைஞன். சற்று நேரத்தில் அந்த இளைஞன் மீன் கூடையுடன் புறப்பட்டுப் போனான். "குருதேவா...! நான் கேட்ட கேள்விக்குத் தாங்கள் பதில் அளிக்கவே இல்லையே!" என்றான் சீடன் குருவைநோக்கி. குரு சீடனை நோக்கிப் புன்னகைத்தவாறே, "சற்று பொறுப்பாய் என் பிரிய சீடனே!" என்றார். சிறிது நேரம் சென்றது. அப்போது முதியவர் ஒருவர் கையில் பையுடன் வந்தார். குரு, அந்தப் பெரியவரிடம் "பையில் என்ன?" என்று கேட்டார். பெரியவர் குருவைப் பார்த்து சிரித்துக்கொண்டே, "ஓ... அதுவா...? அரிசிப் பொரி" என்றார். "எதற்கு?" என்று கேட்டார் குரு. "எனக்கு மீன்கள் என்றால் உயிர்! அவைகளை எனக்கு மிகவும் பிடிக்கும்! அவைகள் நீரில் நீந்தும் அழகே தனி! நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவற்றுக்கு இந்தப் பொரியை உணவாக அளிப்பேன்" என்றார் பெரியவர். பெரியவர் குளக்கரையை நெருங்கியவுடன் அவரது வருகையை எதிர்பார்ப்பதுபோல மீன்கள் கூட்டமாக வந்தன. அவரது கால்களைக் "குறுகுறு"வெனச் செல்லமாகக் கடித்தன. சிரித்துக்கொண்டே பெரியவர் பொரியைத் தண்ணீரில் தூவினார். மீன்கள் சந்தோஷமாக ஓடிவந்து பொரியைச் சாப்பிட்டன. சீடன் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். குரு தனது சீடனை நோக்கி, "பார்த்தாயா, இருவருக்கும் மீன் என்றால் உயிர்! ஆனால் இளைஞன் மீன்களின் ருசியில் உயிராக இருந்திருக்கிறான்! சுயநலத்துக்காக அவற்றைக் கொல்கிறான்! ஆனால் பெரியவரோ மீன்கள் நீந்துவதிலும், விளையாட்டிலும், அவைகளின் அன்பிலும் உயிராக இருந்திருக்கிறார்! உயிர்களின் மேலுள்ள அன்புக்காக உணவளிக்கிறார்.... இருவருக்கும் மீன் பிடிக்கும்! என்றாலும் நோக்கம் வேறு வேறு! "சுயநலமற்ற அன்பே உண்மையானது" என விளக்கினார் குரு.

*நன்றாகப் பேசுவது நல்லது, நன்றாகச் செயற்படுவது அதனிலும் நல்லது.*











# வழித்துணை 30

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 கதைகளுக்குக் கற்பனையே மூலதனம் ஆகும்
வாழ்க்கையில் கற்பனையே மூலவேரை அறுக்கும்
கற்பனை வாழ்க்கையும் கற்பனையில்லாக் கதைகளும்
ஏற்றதல்ல என்றுநீர் ஏற்றபடி வாழ்ந்திடுவீர்.

02 கன்னத்தில் கவர்ச்சியின்றிக் கடுகடுப்பாய் இருந்தாலும்
எண்ணத்தில் நல்லெண்ணம் இருந்திட்டால் போதும்
அன்னம்போல் நல்லெண்ணம் பிரித்தெடுத்து வாழ்வோரே
இன்பமெனத் துன்பத்தில் வீழாமல் வாழ்ந்திடுவர்.

03 மேடையில் பேசுதற்கோர் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால்
சபையோரை மட்டமாக எண்ணிவிடல் ஆகாது
சபையிலேயும் பேரறிஞர் பலரிருப்பர் என்றெண்ணி
ஆய்ந்தறிந்து பேசுதல் பேசுவோர்க்கு அழகாம்.

04 இறையன்பு உடையோராய் இருந்திட்டால் போதும்
அடியார்க்கு பணிசெய்ய ஆண்டவனே வருவான்
இறைவனே தானென்று இறுமாப்பு அடைவோரை
அடியாராய்க் கூடஅவன் கருதாமல் மறைவான்.

05 சந்தேகம் நம்பிக்கை இரண்டுமே வேறுவேறு
இறைவன்மேல் இரண்டுமொன்றாய் இருந்திடுதல் நன்றன்று
சந்தேகத் தோடிறைவன் சந்நிதியைத் தொழுவதிலும்
நம்பிக்கை யோடவனை நினைந்திடுதல் நன்றாம்.

06 கரத்தொலியும் சரத்தழகும் நிரந்தர மென்றாகாது
அரங்குவிட்டு இறங்கிவர அவையெல்லாம் மறைந்துவிடும்
பரம்பொருளைப் பற்றிநிற்கும் பக்குவம் ஒன்றே
நிரந்தரமாய் நின்றெமக்கு நீடுபுகழ் சேர்க்கும்.

*உண்மையாக தியாகம் செய்வதினால் மட்டுமே பிறரின் உள்ளங்களை நீ வெல்ல முடியும்.*

07 இறையோடு சக்தியுமே தந்தையொடு தாயுமெனில்
ஈரேழு பிறப்புமெங்கள் உடன்பிறப்பு ஆகுமன்றோ
ஆதலினால் இறைபடைப்பு அனைத்திலுமே அன்புசெய்வீர்
அதுவொன்றோ இறைவனுக்கு நாம் செய்யும் கடனாகும்.

08 விரக்தியே ஒருவனது வாழ்வுக்கு விஷமாகும்
முயற்சியே அவன்வாழ்வில் உயர்ச்சியைச் சேர்க்கும்
விரக்தியோடு இருந்திந்த வாழ்வுதனை அழிப்பதிலும்
முயற்சித்து வாழ்வுதனில் உயர்ச்சியுறல் நன்றாம்.

09 அறிஞர்க்காய் அவைகளிலே ஆழஉரை நிகழ்த்தலிலும்
அறியாற்காய் அறிந்தவற்றை உரைத்திடுதல் நன்று
அறிஞர்க்காய் உரைத்தெம்மை அவரறிந்து கொள்வதிலும்
அறியாற்காய் உரைத்தவரை அறிஞராக்கல் நன்றாம்.

04 ஆத்திரத்தைத் தூண்டுவது சிறுவிடயம் ஆனாலும்
காத்திரமாய் விளைவதுவோ பெருவிடயம் ஆதலினால்
பாத்திரத்தை உணர்ந்துநீர் பணிவோடு அணுகுமது
சூத்திரமாய் அமைந்துவிடும் சுமுகமாய் வாழ்வதற்கே.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

உங்களை அதிகமாக சிந்திக்க வைக்கும் புத்தகங்களே உங்களுக்கு உதவி புரிபவை.

# திரு + வாசகம் = திருவாசகம்

– **திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

"திரு" என்ற வார்த்தைப் பிரயோகம் ஒன்றின் சிறப்பை மேம்படுத்தும் அடைமொழி எனலாம். சால, உறு, தவ, நனி, கழி, கூர் என்பன உரிச்சொற்களாகிக் கருத்தைச் சிறப்பிக்கும் இலக்கணப் பாவனை எனலாம்.

உ+ம்:

சாலவும் நன்று- ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
கழி பேருவகை கொண்டான்
நனி நாகரிகர்

தாலியோடு திரு சேர்ந்து திருமாங்கல்யமாகும். திரு ஒரு மங்களகரமான வார்த்தைப் பிரயோகம் எனலாம். திருவாசகப் பெருநூலிலே பதிகங்கள் திருவோடிணைந்து காணப்படுகின்றன.

(கீர்த்தித்) திரு அகவல், திரு அண்டப்பகுதி, (போற்றித்) திரு அகவல், திருச்சதகம், திருவெம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, திருக்கழுக்குன்றப் பதிகம், திருஏசறவு, திருப்புலம்பல், திருவார்த்தை, திருப்படையெழுச்சி, திருவெண்பா என்பன நல்ல அகச் சான்றுகளாம்.

சைவத்திருமுறைகளும் இதற்குப் புறம்பானவையல்ல. திருப்பாட்டு (சுந்தரர்) திருவாசகம், திருக்கோவையார், திரு இசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், (பதினொன்றில்) திருமுகப் பாசுரம், அற்புதத் திருஅந்தாதி, திருமுருகாற்றுப்படை, திருவிரட்டை மணிமாலை, திருமும்மணி மாலை, திருத்தொண்டர் திருஅந்தாதி, திருக்கழுமலமும் மணிக்கோவை திருவேகம்பமுடையார் திருஅந்தாதி, திருத்தொண்டர் புராணம்.

இவ்வமைப்பிலே பன்னிரு ஆழ்வார் பாசுரங்களும் வரக் காணலாம். திரு அந்தாதி, திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருச்சந்தவிருத்தம், திருநெடுந்தாண்டகம், திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, திருமாலை, திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், திருவெழுகூற்றிருக்கை, நாச்சியார் திருமொழி, நான்முகன் திருஅந்தாதி, பெரிய திருமொழி, பெரிய திருஅந்தாதி, பெரியாழ்வார் திருமொழி, பெருமாள் திருமொழி, முதற்றிரு அந்தாதி, மூன்றாந் திருஅந்தாதி.

இவ்வரிசையிலே திருக்குறள், திருவருட்பயன் என்னும் நூல் வரிசையும், புலவர் பெயரில் திருவள்ளுவர், திருமூலரும் அடங்குவர். திரு அமைப்புள்ள இன்னும் பல இருக்கின்றன. சமையம் சார்பாயின, திருத்தலங்களின் பெயர், திருக்கோயில் அதனோடு தொடர்பான திருவீதி, திருமடம், திருவிழா, திருமண், திருநீறு, திருக்குளம், திருக்கோபுரம், திருமஞ்சனக் கிணறு போன்ற பல திருவின்றி இயங்கா. இவை தூய்மையை, பரிசுத்தத்தை, புனிதத்தைத் துலாம்பரப்படுத்துவன. இதற்கு மேலும் நோக்கின் நூற்பாக்களும் இவ்வண்ணம் அமையக் காணலாம்.

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும்

முத்தநாயனார் திருஇரட்டைமணிமாலை

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்

விருத்தாசல புராணம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்

திருவே என் செல்வமே தேனே

வானோர் செழுஞ் சுடரே

திருமணியைத் தித்திக்கும் தேனைப்பாலை

அப்பர் பெருமான்

திருவுடை மன்ன ரைக்கண்டால் திருமாலைக் கண்டாரே

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்

ஆழ்வார்கள்

சேராதன உளவோதிரு சேந்தார்க்கு

சடகோபர் அந்தாதி

திருவ ருள்தெய்வச் செல்லி மலைமகள்

தாயுமானவர்

இத் தரவுகளை ஒப்பிடுங்கால் "திரு" என்பதன் பொருளமைவு புலப்படும். எனினும் "திருவாசகம்" என்ற அமைப்பு சற்று வீச்சாகவே அமையக் காணலாம். பல்லாயிரக் கணக்கான பாடற் தொகுப்பிற் திருவாசகம் சிறப்பு வாய்ந்ததே. திருப்புகழும் தனித்துவமானதே.

திரு என்பதற்குத் திருமகள், செல்வம், கண்டோரால் விரும்பப்படும் அழகு. சிவபதம், மோட்சம், திருவருள் என்றெல்லாம் பொருள்தரினும், திருவாசகத்திரு, அழகான அருள் நிறைந்த வாசகம் எனப் பொருள்பட நிற்கிறது. அதியுயர்ந்த அருளிச் செயல்தான். இறைவன் திருவாக்கே திருவாசகம் என்று பொருள் கொள்ளல் பொருத்தமானதே.

இப் பெருநூற்கு கா. சுப்பிரமணியபிள்ளை, இராமநாதன், ஜி. வரதராஜன், சுவாமி சித்பவானந்தர், மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், நவநீதகிருஷ்ண பாரதியார், பண்டிதமணி அருளம்பலவனாரும் வேறு பலரும் உரையெழுதியுள்ளனர். மறைமலையடிகள் முதல் நான்கிற்கும் உரை கண்டவர். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை என்பவற்றிற்கு பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் கதிர்மணி விளக்கப் பேருரை கண்டார். திருவாசகமணி பாலசுப்பிரமணிய முதலியார், இராமசாமி ஐயர், திருக்கேதீசுவரம் திருவாசக சுவாமிகள் சபாரத்தினம் அடிகளார் என்போர் திருவாசகத்திற் தோய்ந்தெழுந்து இறைபதம் அடைந்த திருவாசகச் செம்மல்கள்.

மணிவாசகப் பெருமான் முப்பத்து இரண்டு வயதில் முத்தியடைந்தார் என்பதை அவர் பாடியருளிய சிவபுராணம் முப்பத்து இரண்டாவது அடியில் "மெய்யேயுன் பொன்னடிகள் கண்டிற்று வீடுற்றேன்" என்ற வரிகளாற் காணமுடிகிறது எனப் பெரியார் கூறுகிறார்கள். இந்த எண் 3+2=5 எனவரும். பாடலின் இறுதி 95இல் பூர்த்தியாகிறது. இதைக் கூட்டினால் 9+5=14, 1+4=5. ஆகவே ஐந்தெழுத்து வடிவமே சிவபுராணம் எனத் தீர்மானிக்கலாம். மொத்தம் 656

பாடல்கள். இதைக் கூட்டின் 6+5+6=17, 1+7=8. திருவாசகம் எட்டாந் திருமுறையாய் அமைவதும் சாலச்சிறப்பே.

பகவான் சத்தியபாபாவின் சொற்பொழிவைத் தாங்கிய சாயி அருளமுதம் (கோடை 1999) என்னும் வெளியீட்டில் மாணிக்கவாசகரின் பெருமையையும் திருவாசகச் சிறப்பையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். (பக்131)

"அவர் அனைத்தும் துறந்தவர். அவர் உலகனைத்துக்கும் உரிய புனிதமான ஆத்மீகக் கோட்பாடுகளைப் போதித்தார். அவர் இளைஞர்களுக்கு ஆத்மீகத்தின் அடிப்படையான புனிதக் கோட்பாடுகளைப் போதித்து, அவர்களைத் தெய்வீகப் பாதையில் செல்லும்படி செய்தார். அவர்தான் மாணிக்கவாசகர். (பக்கம் 134)

எனவே பகவான் அப்படியான புத்தகங்களைப் போற்றி அவை சொன்ன வழியில் நடக்கவேண்டுமென எமக்கு (அறிவு) புகட்டியுள்ளார்.

"பாகவதம், இராமாயணம் போன்ற புனித கிரந்தங்களைக் கண்ணில் ஒற்றிக்கொள்கிறோம். தலைமேல் வைத்துக்கொள்கிறோம். வெறும் பூஜை செய்வதற்காக அவைகள் எழுதப்பட்டன வில்லை. அவற்றில் உள்ளவற்றை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக அவை எழுதப்பட்டவை.

அவைகள் எழுதப்பட்ட காகிதத்தை கௌரவிக்கிறோமே தவிர, காகிதத்தில் எழுதப்பட்ட விஷயத்தைக் கௌரவிப்பதில்லை. எழுதப்பட்ட கருத்துக்களைக் கடைப்பிடிப்பதுதான் மிகவும் முக்கியம். அந்த நூல்களைக் கௌரவிப்பதால் ஒரு பயனும் இல்லை. அவற்றைத் தலையில் வைத்துக் கொள்வதால் ஒரு பயனுமில்லை. அவற்றை வழிபடுவதால் ஒரு பயனுமில்லை. அவற்றில் எழுதப்பட்டுள்ள ஒரு போதனையையாவது நாம் கடைப்பிடிக்க வேண்டும். (மேலது பக்கம் 143)

## இயற்கை வழிபாட்டிற்கு...

எண்ணத்தின் வாகனமாய் விளங்கும் மொழி
எடுத்தியம்பும் சாதனமாய்த் துலங்கும் கவி!
வண்ண மயில் வாகனமும் சேவலும் குறிஞ்சிப்
பூவும் குன்றின் குறியீடும் குமரனருளும்!
கண்ணன் மேய்த்த பசுவும் இயமதருமனின் எருதும்
முல்லைக் (சுடலை நிலம்) காட்டின் இயல்பு
பன்முகத்தன்மை காட்டும் மகாபாரதம் முல்லை
(தருமன்) மருதம் (அர்ச்சுனன்) நெய்தல் (பீமன்)
தொன்மையான இயற்கை வழிபாட்டிற்கு
தமிழ் இலக்கியங்கள் தரும் சான்றுகளுடன்
தன்னொளிபரப்பும் சந்நிதியான் அருளும்
எங்கள் பண்பாட்டின் ஒற்றுமையின் மேன்மை.

-இராம ஜெயபாலன்-

*கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு உனக்கு நீயே கொடுத்துக்கொள்ளும் தண்டனை.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| இ. சொக்கலிங்கம் | நாவற்குழி (சி.ப. அரிசி வகையில்) | 10000. 00 |
| பூ. இதயசூரி | பத்தமேனி | 7000. 00 |
| கௌரிநிஷா மயூரன் | நெல்லியடி | 5000. 00 |
| ந. ரவீந்திரன் | கோண்டாவில் | 5000. 00 |
| அ. கலைச்செல்வன் | கல்வியங்காடு | 1000. 00 |
| மேரி கனகரட்ணம் | லண்டன் (சிறுவர்களுக்காக) | 10000. 00 |
| வே. குணபாஸ்கரசிங்கம் | கரணவாய் வடக்கு | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுண்ணாகம் | 1000. 00 |
| ப. உமேஸ்குமார் | உடுவில் | 1000. 00 |
| சுப்பிரமணியம் மீனாட்சி | இணுவில் | 5000. 00 |
| P. இராசதுரை | தம்பிலுவில் | 1000. 00 |
| சி. கஜானன் | சுதுமலை | 2000. 00 |
| செ. சோமாஸ்கந்தன் | நல்லூர் மரக்கறி, 2மூடை அரிசி | 1000. 00 |
| S. குகதாசன் (கண் வைத்திய நிபுணர்) | கோண்டாவில் | 15000. 00 |
| க. சரஸ்வதி | இணுவில் | 7000. 00 |
| சிவனேசன் சாரங்கன் | லண்டன் | 10000. 00 |
| R. வரதராஜன் | சுவிஸ் | 5000. 00 |
| இ. முருகையா | சுழிபுரம் | 3000. 00 |
| சி. ஆருஜன் | சுழிபுரம் | 1000. 00 |
| V. அனுக்ஷன் | சுழிபுரம் | 1000. 00 |
| ந. ஆகாஷ் | சுழிபுரம் | 1000. 00 |
| செ. சின்னத்துரை | நெல்லியடி | 1500. 00 |
| திருமதி ப. இராஜேஸ்வரன் | கோண்டாவில் | 1000. 00 |
| K. கஜேந்திரன் | கொழும்பு | 10000. 00 |
| கி. சஞ்சீவன் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| க. சபாபதிப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 6000. 00 |
| S. சிவபாலன் | திருகோணமலை | 5000. 00 |
| மா. ஜெயந்தி | தாவடி | 15000. 00 |
| சி. சாந்தி | தெல்லிப்பழை | 1000. 00 |
| இராஜலெட்சுமி குடும்பம் | தெல்லிப்பழை | 500. 00 |
| மோ. ராஜபாமினி | கொக்குவில் | 5000. 00 |
| பா. புஷ்பராணி | கனடா | 1000. 00 |

நல்ல நட்பை இழப்பதைவிட கொஞ்சம் பணத்தை இழப்பது மேல்.

| | | |
|---|---|---|
| திரு தயாளன் | உடுவில் | 1மூடை அரிசி |
| சு. அரவிந்தக்ஷன் | உடுவில் | 5005. 00 |
| சிந்துபாமினி | உடுவில் | 1000. 00 |
| உ. கார்த்திகன் | ஜேர்மனி | 1000. 00 |
| ந. ஜெயநந்தன் | கொக்குவில் | 5000. 00 |
| திரு சந்திரதேவன் குடும்பம் | புன்னாலைக்கட்டுவன் | 2000. 00 |
| ம. நிலோஜன் உடுவில் | 25k பருப்பு, 1மூடை அரிசி | 10000. 00 |
| திரு ஞானசுந்தரம் | அச்சுவேலி | 5000. 00 |
| செ. சூரியகுமார் இன்பர்சிட்டி | பருத்தித்துறை | 10000. 00 |
| மணியம் இன்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கெங்கைக்கரசி | மயிலிட்டி | 10000. 00 |
| S. விதுஷனசர்மா | நாகர்கோயில் | 6000. 00 |
| வே. கணேசன் | திருநெல்வேலி | 2000. 00 |
| பல்கலைக்கழகம் | கொழும்பு | 2000. 00 |
| A. பிரதீபன் | புன்னாலைக்கட்டுவன் | 6500. 00 |
| யோ. கஜேந்திரன் | கம்பர்மலை | 2000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி | 10000. 00 |
| மு. லோகநாதன் | கிளிநொச்சி | 2000. 00 |
| கு. ரஞ்சித் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| குவேந்தன் பகல் பராமரிப்பு நிலையம் | சாவகச்சேரி | 15000. 00 |
| க. சுரேஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கருணாகரன் சாரங்கன் | பிரான்ஸ் | 10000. 00 |
| திரு கோபாலகிருஸ்ணன் குடும்பம் | கொக்குவில் கிழக்கு 1மூடை அரிசி | 5000. 00 |
| க. விதுஷாயினி | நீர்வேலி | 1000. 00 |
| ந. சிவமலர் | மயிலங்காடு | 10000. 00 |
| ஸ்ரீ புருஷோத்தமன் இராசநாயகி | புத்தூர் | 2000. 00 |
| பாஸ்கரன் சோபனா | கரணவாய் தெற்கு | 1மூடை அரிசி |
| வ. தர்ஷனா | வட்டுக்கோட்டை (வயோதிபர்களுக்காக) | 10000. 00 |
| மோ. சற்குணதேவி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| தீ. ரஜிதா | தம்பாலை | 5000. 00 |
| சியாமினி சிவபாலா | கரவெட்டி | 1000. 00 |
| செ. செந்தூரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| நா. தேவராணி | புன்னாலைக்கட்டுவன் | 2000. 00 |
| பே. குமரதேவன் | அராலி | 1500. 00 |

த. கணேசமூர்த்தி யாழ்ப்பாணம் (மனைவியின் நினைவாக பிரதி வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் 63 நாயன்மார்கள் குருபூசைக்காக) 60000. 00

(தொடரும்...

*தோல்வி அடையக்கூடாது என்று போராடு. உலகம் உன் கையில்.*

(தொடர்ச்சி...

# தீட்சையின் வகைகள்

– **திருமதி சறோஜினிதேவி சிவஞானம்** அவர்கள் –

சைவமக்கள் ஆசாரங்களை அனுட்டிப்பதற்குத் தகுதியளிப்பது சிவதீட்சையாகும் சிவதீட்சை கொடுக்கின்ற "குரு சைவ ஆசாரியார்" அல்லது சிவாசாரியார் என்னும் பட்டத்தினைப் பெற்றிருப்பார். இதைப் பெற்றுக்கொள்வதற்கான படிமுறைகள் சிவாகமங்களில் வகுக்கப்பட்டுள்ளன. அவையே சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரிய அபிடேகம் என்பவை. இவையே படிமுறைகள் என்று கூறப்படுபவையாகும். சமய தீட்சை பெற்றவர்கள் "சிவாயநம" என்ற சூக்கும பஞ்சாட்சரத்தை ஓதலாம். சமயதீட்சை பெறாதோர் "நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்னும் சிவபுராணத்தில் கூறப்பட்டதுபோன்று நமச்சிவாய என்னும் தூலபஞ்சாட்சரத்தையும் பிரணவம் கூட்டாமல் செபிக்கலாம் என்பதே விதிமுறையாகும்.

சமய தீட்சைக்கு அடுத்தது விசேட தீட்சை. விசேட தீட்சை பெற்றவர்கள் சிவலிங்கப்பூசை செய்யும் தகுதி உடையவர்களாவார்கள். மாணாக்கனை சிவபுத்திரனாகச் செய்யும் கிரியை இதில் செய்யப்படுகின்றது. விசேட தீட்சை பெற்றவன் நித்திய அனுட்டானங்களுடன் ஆன்மார்த்த சிவபூசையினைச் செய்வதற்கும், யோகநெறியில் நிற்பதற்கும் உரிமை பெறுகின்றான். விசேட தீட்சை சிவாகமத்தை தானே ஓதுவதற்கு அதிகாரம் அளிப்பதாகும்.

## சமயதீட்சை:

சமயதீட்சை மண்டலபூசை செய்து மாணாக்கனை வழிபடுவித்தல், இந்த முதன்நிலை "சமயதீட்சைக்குரிய" முதற்கிரியைகளாகும். பின்பு "சம்பாதஓமத்தாற் சுத்தப்படுத்தப்படுவது" என்பது பின்பு ஆசிரியர் செய்து வைக்கும் தீட்சைமுறையினை உணர்த்தி நிற்கின்றது. இதுவே சமய தீட்சைக்குரிய கிரியையின் ஆரம்ப முறையாகும்.

சமய தீட்சையினை ஆண்கள், பெண்கள் என்னும் இருபாலாரும் பெறலாம். இவர்களின் அடிப்படைத் தகைமைகளாவன ஒழுக்கம், பண்பு, ஆசாரம், குருபக்தி, இறைபக்தி ஆகிய ஐந்தும் கட்டாயம் தீட்சை பெறுவதற்கு இருக்கவேண்டியனவாம். இவர்கள் இம்மை இன்பங்களில் நாட்டம் குறைந்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

சகலரும் செய்யவேண்டிய தீட்சையின் வகைகள்.

## 01) நயனதீட்சை:

நயனதீட்சை இது "சட்சுதீட்சை" என்று கூறப்படும். குரு தனது கிருபாநோக்கத்தால் சீடனது சஞ்சித வினையை அறுத்தலாகும். மீன் தனது சினையைப் பார்த்தால் அதனால் குஞ்சு பொரிக்கும். இது "மீனினாட்சி" "மீன் ஆட்சி" இது "திருநோக்கம்" என்று குருவின் பார்வையால் கிடைக்கும் நயனதீட்சை ஆகும்.

*மற்றவர்களுக்கு நன்மை செய்வதே உயரிய தர்மம்.*

## 02) பரிச தீட்சை:

குரு தனது கரசரணங்களால் தொட்டு சீடனின் ஆணவ மலத்தை நீக்குதல் பரிசித்தல், தீண்டுதல், தொடுதல், பரிசம் பறவை முட்டையை சிறகினால் வரும் சூட்டினால் பரிசத்தால் குஞ்சு பொரித்தல் போன்றது இதுவாகும் குருவின் பரிசம் பட்டு மலம் நீங்குதலாகும் பரிச தீட்சை.

## 03) வாசக தீட்சை:

சொற்களால் உபதேசிப்பது இது வாசக தீட்சை எனப்படும். மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் உபதேசித்தமை வாசக தீட்சையாகும்.

## 04) மானச தீட்சை:

இது பாவனை தீட்சை, குரு சீடனை அருளுருவாகப் பாவித்து மாயாமலத்தை நீக்குதல், ஆமையானது கரையிலிருந்தாலும் முட்டையைத் தனது மனத்தால் நினைக்க அங்கே குஞ்சு பொரிக்கும். இது பாவனை தீட்சையாகும்.

## 05) சாத்திர தீட்சை:

நூல் அறிவால் பதி, பசு, பாசங்களின் இலக்கணங்களை பசு பாசத்திணீங்கி ஞானத்தை உணர்த்தி முத்தியடையும் முறையை நூல் வழியாகப் போதித்தல். இது சாத்திர தீட்சை எனப்படும். சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு பதி, பசு, பாச விளக்கம் வழங்கியமை இதற்கு உதாரணமாகும். இது திருவாசகத்திலே செறிந்து காணப்படுகின்றது.

## 06) யோக தீட்சை:

யோக தீட்சை நிராதர சிவயோகத்தை அப்பியாசம் பண்ணும்படி உபதேசித்தல். இது யோகதீட்சை எனப்படும். குரு மாணாக்கனை "சிவயோகம்" பயிலச் செய்தல் யோக தீட்சையாகும். தட்சணாமூர்த்தியாகிய சிவபெருமான் சனகர், சனந்தரர், சனாதனர், சனத்குமாரராகிய நான்கு பேருக்கும் மெய்மை புரிய வைத்தமை யோக தீட்சையாகும்.

## 07) ஔத்திரி தீட்சை:

மேலே கூறப்பட்டவை ஆறும் ஔத்திரிக்கு அங்கமாகச் செய்யப்படுவனவும் சுதந்திரமாகச் செய்யப்படுவனவுமாம். "ஔத்திரி தீட்சை" "அங்கி தீட்சை" எனவும் கூறப்படும். இதுவே சகலருக்கும் செய்யப்படும் சிவதீட்சை. இதுவே சைவ சமயத்தவனை "சமயி" என்று சொல்லும் சமயதீட்சையாகும். குண்டமண்டலமிட்டு அக்கினி காரியமும் செய்து பாசத்தை நீக்குவதாகிய ஔத்திரி தீட்சை, ஔத்திரி ஓமத்தோடு கூடச் செய்வதாகும். ஔத்திரி தீட்சை ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும்.

ஞானவதி ஞானத்தையுடையது. கிரியாவதி கிரியையையுடையது. எனவே அவுத்திரி தீட்சை ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும். இவற்றில் இரு வகையில் ஒரு வகையாற் செய்யப்படல் வேண்டும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன.

*இளமையில் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும் முதுமையில் சோகத்தைத் துடைக்கும்.*

**ஞானவதி:**

குண்டம்மண்டலாதிகளை மனத்தாற் கற்பித்துக்கொண்டு அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து சீடனது பாசத்தைக் கெடுத்தலாம்.

**கிரியாவதி:**

குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவம் முதலியவற்றோடு கூடவே புறத்தேயிட்டு விதிப்படி புறம்பே ஆகுதி செய்தலாகும். இப்படி கிரியை செய்து சீடனது மலத்தை குன்றும்படி செய்யும் தீட்சை அவுத்திரி ஆகும். மேலும் "நிரப்பீசதீட்சை", "சபீசதீட்சை" என இரண்டாய் விளங்கும். இது அவரவர்க்கும் ஒத்ததாகச் செய்யப்படுவதாகும்.

**அந்தியேட்டிக் கிரியை:**

அந்தியேட்டி என்பது அந்திய- இட்டி. அந்திய என்பது கடைசியாக என்பது பொருள். (இட்டி- யாகம்) கடைசியான யாகம். சமய தீட்சையின் ஞானவதியாக, ஞானதீட்சை பெற்றவர்கள் உயிர்நீத்த பின் அவர்கட்கு "ஞானவதியாகவே" அந்தியேட்டி செய்ய வேண்டும். சமய தீட்சையினை "கிரியாவதியாகப்" பெற்றவர்கள் இறந்த பின்பு அவர்கட்குக் கிரியாவதியாகவே அந்தியேட்டி செய்ய வேண்டும். இவ்வழியிலேயே தான் "அந்தியேட்டிக்" கிரியையினை விசேட தீட்சை பெற்றவர்கட்கும் செய்ய வேண்டியது விதிமுறைமையாகும். (தொடரும்...

## துயர் பகிர்கின்றோம்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமுதாயப் பணிகள் பலவற்றிற்கும் தமது நிதி பங்களிப்பின்மூலம் பூரணமான ஒத்துழைப்பு நல்கிவரும் Dr செந்தில்குமரன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) அவர்களின் அன்புத் தந்தையார் **தங்கராசா அருட்பிரகாசம்** அவர்கள் 07.12.2019இல் காலமானர்.

அன்னாரின் மறைவினால் பெருந் துயருற்றிருக்கும் Dr செந்தில்குமரன், மற்றும் குடும்பத்தார் அனைவரதும் துயரினில் சந்நியான் ஆச்சிரமமும் இணைந்து கொள்கிறது. மறைந்த தங்கராசா அருட்பிரகாசம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சந்நிதி வேற்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

-பேரவையினர்-

## துயர் பகிர்கின்றோம்

நீண்டகாலமாகவே சந்நிதியான் ஆச்சிரமத்தோடு தொடர்புள்ள வில்லிசைக் கலைஞர் திரு க. சத்தியதாஸ் அவர்களின் தாயார் திருமதி **கதிரவேல் இராசமணி** அவர்கள் சிவபதமடைந்தார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் திரு க. சத்தியதாஸ் அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா இறைவன் காலடியில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

-பேரவையினர்-

*உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்.*

# மனிதனும் தெய்வமாகலாம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

மிருகத்தைவிட மனிதன் உயர்ந்தவன் என்பது அவன் வளர்கின்ற பாங்கிலே தெரிகின்றது. அதாவது மிருகங்கள் குறுக்கு வாட்டில் வளர்கின்றன. ஆனால் மனிதனோ உயர்ந்து மேல்நோக்கி வளர்கின்றான். இவ்வாறு உயர, உயர வளரும் மனிதன் தனது நோக்கத்தையும், செயல்களையும் சிந்தனைகளையும்கூட உயர்ந்தனவாகக் கொண்டு செயலாற்ற வேண்டும். அப்போதுதான் மனிதன் மிருகத்திலிருந்து நிஜமாக வேறுபடுகின்றான்.

ஆனால் மனிதன் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வாக்கின்படியா இன்று வாழ்கின்றான்? இல்லையே! பெரும்பாலான மனிதர்களின் செயல்கள், சிந்தனைகள் எல்லாம் அவன் வளர்ச்சிக்கு மாறாக கீழ்நோக்கி அல்லவா போய்க்கொண்டிருக்கின்றன! விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை.

மேலான நோக்கங்களோடு மனிதன் வாழ முற்பட்டால் நிஜமாக அவன் மற்றைய ஜீவராசிகளைவிட அதிக சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால் நடைமுறையில் இன்றைய உலகிலே மனிதன்தான் அதிகமான துன்பத்தை அனுபவித்து வருகின்றான். இதற்குக் காரணமும் அவனேதான் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை.

மனிதனுக்குத்தான் காமம், கவலை, பாவம், அவமானம் இவ்வாறு எத்தனையோ குறைபாடுகள். மிருகங்களுக்கு இத்தனை கவலைகள் இல்லையே!

ஒரு வகையில் பார்த்தால் மிருகங்களுக்கு கொடுத்திருக்கும் சௌகரியங்களை ஆண்டவன் மனிதனுக்கு கொடுக்கவில்லைப் போல தோன்றலாம். உதாரணமாக, எம்மை திடீரென ஒருவர் தாக்கினால் எமக்குத் திருப்பித் தாக்க ஒரு ஆயுதமும் கைவசம் இல்லை.

ஆனால், மாட்டை நாம் அடித்தால் அதற்குக் கொம்பு இருக்கிறது. அதனால் அது எம்மை முட்ட வருகின்றது. கொடிய காட்டு விலங்குகட்கு கூரிய நகங்களைக் கொடுத்திருக்கின்றார் இறைவன். அவற்றால் அவை தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன.

குளிரிலிருந்து காப்பாற்ற அவற்றிற்கு உரோமத்தைப் போர்வையாக இறைவன் கொடுத்துள்ளார். ஆனால் மனிதனை வழித்து விட்டிருக்கின்றார் இறைவன்.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! குதிரைக்குக் கொம்பில்லை. ஆனால் அதற்கு ஓடித் தப்ப வேகத்தைக் கொடுத்திருக்கின்றார் இறைவன். மனிதனால் அத்தனை வேகத்தில் ஓட முடியுமா?

இல்லையே! ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் ஒன்றை மனிதனுக்கு அதிகமாகக் கொடுத்திருக்கின்றார். அதுதான் புத்தி- பகுத்தறிவு. அதனால் மனிதன் மற்றைய ஜீவராசிகளிடமிருந்து தனித்துவம் பெற்றுள்ளான்.

இதனால் அவன், பிராணிகளின் போர்வையைப் பறித்துக் கம்பளியாக்கித் தான் போர்த்துக்கொள்கின்றான். வேகமாக ஓடும் குதிரையைப் பிடித்து வண்டியில் பூட்டி தான் வேகமாக ஓடக் கற்றுக்கொண்டுவிட்டான்.

இதற்கெல்லாம் அவன் பயன்படுத்துவது ஆண்டவன் அவனுக்கு அளித்த பகுத்தறிவே. இதனை இவ்வாறா பயன்படுத்துவது?

*இன்றே செய்ய வேண்டியதை நாளைவரை தள்ளிப்போடாதே.*

இந்தப் புத்தியை, அறிவை, பகுத்தறிவை வைத்துக்கொண்டு மனிதன் மற்றைய ஜீவராசிகள், ஜட பிரபஞ்சம் அனைத்தையும் தானே ஆளுகிறான். இதே புத்தியை வைத்துக்கொண்டு மனிதன் சிரமப்பட்டு கவலை கொள்ளவும் செய்கின்றான். பிறவி எடுத்ததால்த்தானே இத்தகைய கஷ்டங்கள், துன்பங்கள் இனிப்பிறவாதிருக்க என்ன செய்யலாம் என சில சந்தர்ப்பங்களில் சிந்திக்கவும் செய்கின்றான்.

பாவங்களைச் செய்வதால் ஜனனம் ஏற்படுகின்றது. காரியங்கள் செய்யக் காரணம் ஆசை. ஆசையால் கோபமும் ஏற்படுகின்றது. காமமும் எழுகின்றது. பாவம் செய்ய நேரிடுகின்றது. எனவே மீண்டும் பிறப்பு.

எல்லாம் ஒன்று என்ற ஞானம் எமக்கு ஏற்பட்டுவிட்டால் ஆசை எமக்கு ஏற்படாது. ஆசை இல்லையேல் கோபம் இல்லை, பாவம் இல்லை, காரியம் இல்லை, ஜனனமும் இல்லை, துன்பமும் இல்லை.

நிலையாக எல்லாமே ஒன்றாக இருப்பது "சிவம்" ஒன்றுதான். பகவானும், பக்தனும் ஆரம்பத்தில் இரண்டாகத் தோன்றினாலும் பக்குவம் வரும்போது இருவரும் ஒன்றாகி விடுகின்றனர். இதையே இரண்டறக்கலத்தல் என்கின்றோம்.

இந்துமதம், ஒருவரான கடவுளுக்கு அவரவர் மனோபாவங்களுக்கு ஏற்றவகையில் வழிபடுவதற்காக பல ரூபங்களில் பல தெய்வங்களைக் காட்டியுள்ளது. இவ்வடிவங்கள் வெறும் கற்பனையில் எழுந்தவை அல்ல. ஒன்றாக இருக்கும் பரமாத்மாதான் பல்வேறு மகான்களுக்கும் பல வடிவங்களில் தரிசனம் தந்துள்ளார். அந்த மகான்களும் அந்தந்த மூர்த்திகளுடன் பிரத்தியட்சமாகப் பழகி பக்தி செய்துள்ளதை நாம் படித்துள்ளோம். அதே போன்று நாமும், தரிசிப்பதற்காக இன்ன மந்திரத்தை இன்ன உபாசனையுடன் மேற்கொண்டால் குறிப்பிட்ட மூர்த்தியின் அருளைப் பெறலாம் என முன்னோர்கள் எமக்கு வழிவகுத்துத் தந்துள்ளார்கள்.

எனவே வழிபாட்டு முறை எதுவானாலும் பக்தி ஒன்றுதான். எந்த மதமானாலும் பக்தி அங்கு மத்தியஸ்தானம் வகிக்கின்றது.

எனவே, நாமும் எமக்கு எந்தத் தெய்வ முகூர்த்தம் உகந்ததோ அதைப் பின்பற்றி நாள்தோறும் தியானித்து வழிபட்டு நல்லன செய்து நலம் பெறுவோம்.

## தெய்வத்தன்மை

நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு வண்டி மலையிலிருந்து கட்டுப்பாடற்று கீழே பாய்ந்து வரலாம். அல்லது பாய்ந்து செல்லும். அந்தக் குதிரைகளை வண்டிக்காரன் கட்டுப்படுத்தலாம். இந்த இரண்டில் எதில் மிகப்பெரிய ஆற்றல் வெளிப்படும். குதிரைகளைத் தன் போக்கில் ஓடவிடுவதிலா? அல்லது அவற்றைக் கட்டுப்படுத்துவதிலா? பீரங்கியிலிருந்து புறப்படுகின்ற ஒரு குண்டு வான் வழியாகப் பாய்ந்து தொலைதூரம் சென்று கீழே விழுகிறது. மற்றொன்று அருகில் உள்ள சுவரின்மீது மோதுகிறது. அப்படித் தடுக்கப்படும் போது பயங்கரமான வெப்பத்தைக் கக்குகிறது.

சுயநல நோக்கத்துடன் வெளியே சொல்கின்ற ஆற்றல்கள் எல்லாம் சிதறி வீணாகின்றன. அந்த ஆற்றல் உங்களிடம் திரும்பி வருவதற்கான வழியில்லை.

ஆனால் அவற்றின் ஆற்றல் கட்டுப்படுத்தப்படுமானால் அது ஆற்றல் வளர வழி வகுக்கும். இந்த சுயகட்டுப்பாடு மகத்தான சுயேட்சையை உருவாக்குவதற்கு ஏதுவாகும். தெய்வத்தன்மையை உருவாக்குகின்ற குணநலனைத் தரும்.

*பொய் சொல்வது இரண்டாவது தீமைதான். கடன் வாங்குவதே முதலாவது தீமை.*

(தொடர் -26)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இறைவனை வழிபடுவதில் இந்துக்கள் ஏற்படுத்தியுள்ள சமுதாய ஒழுங்கு வியந்து பாராட்டவேண்டியது ஒன்றாகும்.

இறைவனை வழிபடுதல் பூசை எனப்படுகிறது. இதைக்கூட இந்துக்கள் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று, ஒருவன் தன்னுடைய நலனுக்காகவும் குடும்பத்தினரின் நலனுக்காகவும் செய்வது. இதனை அவன் தன் வீட்டில் இருந்தபடி செய்கிறான்.

மற்றொன்று தன் நலனுக்காக மட்டுமன்றி சமுதாய நலனுக்காகவும் ஆலயத்தில் செய்யப்படுகிறது. இதில் அவனுடைய கோரிக்கை இருக்கிறது என்றாலும்; அதையும் தாண்டி சமூகம் நலமாக இருக்கவேண்டும் என்பதற்காக, அனைவரின் சார்பாகவும் அந்தணர் கோவிலில் பூசை செய்கிறார்.

வீட்டில் செய்யப்படுகின்ற பூசை ஆத்மார்த்தம் எனவும், கோவிலில் செய்யப்படுவது பரார்த்தம் எனவும் அழைக்கப்படுகிறது.

வீட்டில் பூசை செய்யும்போது அதைச் செய்பவன் உடல் சுத்தமும் மனச் சுத்தமும் உடையவனாக இருத்தல் அவசியம். மனச்சுத்தம் பெறுவதைப் பஞ்சசுத்தி என்பார்கள். உடல் சுத்தம் நீராடுவதன் மூலமாகவும், தூய ஆடைகளை அணிவதன்மூலமாகவும் அமைகிறது. இதையே வள்ளுவப் பேராசான்,

> புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
> வாய்மையால் காணப்படும்.

என்கிறார்.

வாய்மை என்பது எதிலும் உண்மையுடன் இருத்தலாகும். அப்போதுதான் மனம் தூய்மையாக இருக்கும். "மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்" எனவும் குறிப்பிடுகின்றார். மனதில் மாசு இல்லாமல் இருப்பதே அறம் எனச் சொல்லுகிறார்.

ஆகவே பூசை செய்கின்றவனின் மனம் சுத்தமாக இருக்கவேண்டும். மனதில் ஆயிரம் தீய எண்ணங்களை வைத்துக்கொண்டு ஆறுமணிநேரம் பூசை செய்தாலும் எந்த எந்தப் பலனும் இருக்காது.

சிலர் மணிக்கணக்கில் பூசை செய்வார்கள். அவருடைய மனம் எல்லாம் தன்னிடமுள்ள கறுப்புப் பணத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது என்பதிலேயே இருக்கும்.

நெற்றியில் இடப்படும் திருநீறும் கழுத்தில் உருத்திராட்சமும் இருந்து பயனில்லை. இது வெறும் புறத்தோற்றமே. இந்து சமயத்தவன் என்பதற்கு அடையாளம் மனதைத் தூய்மைப்படுத்தும் நல்ல எண்ணங்களே.

பூசை அறையில் வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்துகிறோம் எதற்காக? மனம் மகிழ்வாக இருக்க வேண்டும். நல்லதையே நாடவேண்டும் என்பதற்காக. ஒன்றை நீங்கள் கவனிக்கலாம். பூசை அறையில் பயன்படுத்துகின்ற ஊதுவத்தி, சாம்பிராணி, கற்பூரம் ஆகிய எதுவாயினும் அவற்றின் குணம் ஒன்றே. எல்லாமே தங்களை எரித்து, மணம் பரப்பி சாம்பலாகிப் போகின்றன.

இதன் தாற்பரியம் என்ன? ஒவ்வொரு மனிதனும் தன்னை அழித்துக்கொண்டாவது மற்றவர்கள் மகிழும்படியான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான். ஆகவே பூசை என்பது நல்ல காரியங்களுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ளுகின்ற நிகழ்ச்சியாகும். இறைவனோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமானால் மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என இந்துமதம் வற்புறுத்துகிறது.

விக்கிரகங்களுக்கு பூசை செய்வதன்மூலம் மனதை ஒரு நிலைப்படுத்தி பரம்பொருள் இன்பத்தை அனுபவிக்க முடியும் என்று கண்டவர்கள் இந்துக்கள். தெய்வ பக்தியில் மூழ்கியவர்கள் தாங்கள் விரும்பிய வண்ணமே இறைவனைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். பரப்பிரம்ம சொருபியாகிய இறைவன், அடியவர்கள் வேண்டும் கோலத்தில் அவர்களுக்கு காட்சி தந்து அருளை வழங்கியிருக்கிறார்.

திருநாவுக்கரசர் ஒரு பாடலில் தான் கண்ட இந்தக் காட்சியை, நெஞ்சம் நெக்குருக தீந்தமிழ்ச் சொற்களால் எடுத்துச் சொல்லுகிறார்.

பாலின் மொழியான் ஓர் பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றி நுதல் கண்டேன் பெற்றங் கண்டேன்
காலைக் கதிர் செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே!

திருநாவுக்கரசர் தான் கண்ட சிவபெருமானின் தோற்றத்தை இப்படிப் பாடுகின்றார் என்றால், பேயாழ்வார் தான் தரிசித்த திருமாலின் தோற்றத்தை பின்வருமாறு வர்ணிக்கிறார்.

திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக் கண் அணி நிறமுங் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக் கண்டேன்
என் ஆழிவண்ணன் பால் இன்று.

உண்மையிலே அடியார்கள் இறைவனை இந்தத் திருக்கோலத்தில் தரிசித்திருப்பார்களா என்று சிலர் ஐயப்படக்கூடும். நம்மால் முடியாதது மற்றவர்களாலும் முடியாது என்கிற எண்ணத்தில் ஏற்படுகின்ற சந்தேகம் இது.

நம்முடைய காலத்தில் வாழ்ந்த ராமகிருஷ்ண பரமஹம்சர், கடவுளைக் காண விரும்பிய விவேகானந்தருக்கு கடவுளைக் காட்டி இருக்கிறார். இந்த அனுபவத்தை சுவாமி விவேகானந்தரே விவரித்துச் சொல்லி இருக்கிறார்.

*உற்சாகமுள்ளவனுக்கு எந்த எதிர்பார்ப்பும் தடையாக இருப்பதில்லை.*

கேதார்நாத்துக்குச் சென்றபோது எதிரில் பரமசிவன் வருவதை தான் பார்த்து தரிசித்ததாக சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார்.

பரப்பிரமத்தை உணர்ந்தவர்கள், அதை எந்த வடிவில் தாங்கள் தரிசிக்க விரும்புகிறார்களோ, அந்த வடிவில் தரிசிக்க முடியும் என்பதை இந்து சாஸ்திரங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. மூர்த்தி வடிவங்கள் கற்பனையில் விளைந்த தத்துவ வடிவங்களாக இருந்தாலும், ஒரு பக்தன் எந்த வடிவத்தில் பரப்பிரமத்தை தரிசிக்க விரும்புகிறானோ, அந்த வடிவத்தில் அதன் காட்சியைப் பெறுகின்றான்.

இந்து மதத்தில் சொல்லப்பட்டுள்ள சில விடயங்கள் முரண்பாடுகள் போலத் தோற்றமளிப்பது உண்டு. இதற்குக் காரணம், இந்த மத ஞானிகள் பலரும் தங்கள் தங்கள் நிலையிலிருந்து, தாங்கள் கண்ட உண்மைகளைச் சொல்லுகின்றபோது, இரண்டு நிலைகளையும் உணராதவர்களின் பார்வைக்கு அது முரண்பாடுபோலத் தோன்றும். உதாரணமாக சித்தர் ஒருவர் பாடிய பாடலைப் பாருங்கள்.

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுனென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

இவர் இப்படிக் கேட்கக் காரணம் என்ன? நட்ட கல்லுக்கு பூக்கள் சாத்தி பூசை செய்வதை இவர் கேலி செய்கிறாரா? மேல் எழுந்தவாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். நமக்குள்ளேயே தெய்வம் இருப்பதை உணராமல், வெறும் பூசையில் ஈடுபடுவதைத்தான் அவர் கேலி செய்கிறார். இறைவன் நம் இதயத்தில் வாசம் செய்வதைப் புரிந்து கொண்டால், நமக்கு வெளியில் போய் இறைவனைத் தேட வேண்டிய அவசியமே இல்லை.

"சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?" எனவும் கேட்கிறார். பானையில் சமைக்கிறோம். அந்தப் பானை சமையலின் சுவையை அறிய முடியாது. சமைத்த உணவை உண்ணுகின்ற நாம்தான் அறியமுடியும். அதைப்போல் நாம் வழிபடுகின்ற விக்கிரகம் தெய்வத்தன்மையை நமக்கு ஏற்படுத்துகின்ற ஒன்றே தவிர, பக்திச் சுவையை நாம்தான் உணரவேண்டும்.

விக்கிரகத்துக்குப் பூசை செய்துவிட்டு, மனதால் இறைவனை உணராதபோக்கு, சமையலுக்குப் பயன்பட்ட பானையையே, சமையலின் சுவையை உணரவேண்டும் என எதிர்பார்ப்பதைப் போன்றதாகும்.

சித்தர்கள் பரம்பொருள் பற்றி ஆழமான கருத்துக்களைச் சொன்னார்கள். தாயுமானவர் ஒரு பாடலில்,

பஞ்ச சுத்தி செய்து நின்னை
பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பரபரமே.

எனக் கூறுகிறார்.

இதய சுத்தியோடு இறைவனைப் பூசை செய்தால், ஆன்ம ஞானத்தின் பொருளை உணரமுடியும் என தாயுமானவர் போன்ற மகான்கள் கூறியிருக்கிறார்கள்.

*சுறுசுறுப்பே மனிதனின் அரும் பொருள்.*

ஒரு சித்தர் தெளிவாகவே சொல்லுகிறார்.

தீர்த்த லிங்கம் உம்முளே
தெளிந்து காண வல்லிரேல்
தீர்த்த லிங்கம் தான தாய்த்
தெளிந்ததே சிவாயமே!

ஆக கருத்தில் முரண்பாடு இல்லை. தோற்றத்தில்தான் முரண்பாடு. நாம் செய்கின்ற வழிபாடு இதய சுத்தியுடன் அமைய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தத்துவ விளக்கங்களைச் சொன்ன இந்துமத ஞானிகள் பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள். அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களின் மனப்போக்கை மாற்றுகின்ற தன்மையில் அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

இந்துக்கள் கண்ட தத்துவங்களை ஆழமாக அறிந்தால், வாழ்க்கைப் போக்குகளை அவர்கள் எவ்வளவு தெளிவாக உணர்ந்து, மனிதகுலம் உய்வதற்கான வழிகளைச் சொல்லி இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இறைவன் மூன்று நிலைகளில் மக்களுக்கு அருள்பாலிக்கின்றான் என இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன.

போகியாக இருந்து உயிர்கள் போகத்தை அனுபவிக்க உதவுகின்றான்.
யோகியாக இருந்து யோக முக்தியை மக்களுக்கு அருளுகின்றான்.
வேகியாக இருந்து மக்களின் வினைகளை அறுத்து அவர்களை உய்விக்கின்றான்.

இதனைச் சிவஞான சித்தியார்-

போகியா யிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியானாற் போற் செய்த வினையினை விட்டல் ஓரார்
ஊகியா மூடரெல்லாம் உடம்பரில் ஒருவன் என்பர்! (தொடரும்...

## கடவுள் பேரொளியாக இருக்கிறார்

உங்கள் இதயத்தில் ஒரு வெளி இருப்பதாக நினையுங்கள். அதில் சுடர் ஒன்று ஒளி விடுகிறது. அது உங்கள் ஆன்மா. அதனுள் உங்கள் ஆன்மாவிற்கு ஆன்மாவாகிய கடவுள் பேரொளியாக இருப்பதாக எண்ணுங்கள். அதனை உங்கள் இதயத்தில் தியானம் செய்யுங்கள். பிரம்மச்சரியம், அகிம்சை, மிகக்கொடிய எதிரியிடமும் இரக்கம், உண்மை, இறை நம்பிக்கை- இவையெல்லாம் வெவ்வேறான விருத்திகள்.

இவற்றில் நீங்கள் நிறைநிலை அடையவில்லை என்று பயப்பட வேண்டாம். முயற்சி செய்யுங்கள். அனைத்தும் கைகூடும். எல்லாப் பற்றும் எல்லாப் பயமும் எல்லாக் கோபமும் விட்டவன் தன்னை முழுவதுமாக இறைவனுக்கே அர்ப்பணம் செய்து அவரிடமே சரணபுகுந்தவன். மனம் தூய்மை அடையப் பெற்றவன்- இவர்கள் எந்த ஆசையுடன் இறைவனை அணுகினாலும் அதை அவர்களுக்கு அவர் அருள்கிறார். எனவே ஞானம், பக்தி அல்லது தியாகம் இவற்றால் அவரை வழிபடுங்கள்.

*கீழ்ப்பணிவதற்குக் கற்றுக்கொண்டால் பதவி உயர்வு தானாக வரும்.*



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...





ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...



# ஆருத்திரா தரிசனம்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

சிவபெருமான் தோன்றிய நட்சத்திரம் திருவாதிரை ஆகும். சிவபெருமானை "ஆதிரையின் முதல்வன்" என்றும், "ஆதிரையான்" என்றும் கூறப்படுகின்றது. பகவான் கிருஷ்ணர் கீதையில் "மாதங்களில் நான் மார்கழி, நட்சத்திரத்தில் நான் திருவாதிரை, கிரகங்களில் நான் சுக்கிரன்" என்றார். மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரை நட்சத்திரத்தில் ஆருத்திரா தரிசனம் எல்லா ஆலயங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அவற்றுள், தில்லையில் நடப்பது மிகவும் சிறப்புடையது. ஏராளமான பக்தர்கள் ஆருத்திரா தரிசனம் செய்வதற்காகத் தில்லைக்குச் செல்வர்.

நடராஜரது இந்த ஆருத்திரா தரிசன ஆட்டம் உலகம் இயங்குவதையே குறிக்கின்றது. அணுக்கள் முதல் அண்டங்கள் வரை எல்லாம் ஒழுங்கு முறை தவறாது ஆடுகின்றன. நடராஜரது இந்த ஆருத்திரா தரிசனம் அவரது ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களை உணர்த்தும் பொருட்டே ஆலயங்கள்தோறும் பஞ்ச கிருத்திய உற்சவம் நடந்து வருகின்றது.



நம்மை எல்லாம் ஆட்டிவைக்கும் இறைவன் தானும் ஆடிக்கொண்டே இருக்கின்றான். அவன் ஆடுவதால்த்தான் உலகம் ஆடிக் கொண்டே இருக்கின்றது. இந்த அற்புதமான நடனக் கோலத்தைப் பல பக்திமான்கள் பலவிதமாகக் கண்டு ஆனந்தம் அடைந்துள்ளனர்.

நடராசப் பெருமானின் திருநடனத்தை காரைக்காலம்மையார், கல்லாடர், கபிலர், வியாக்கிரபாதர், திருமூலர், பதஞ்சலி ஆகிய அடியார்கள் பல கோணங்களில் கண்டு பரவசமடைந்திருக்கின்றனர். திருநாவுக்கரசு நாயனார் கண்ட கோலத்தைக் கீழ்வரும் பதிகம் விளக்குகின்றது.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

மகாவிஷ்ணு பாற்கடலில் ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டிருந்தார். திடீரென்று அவர் "அற்புதம்! பிரமாதம்" என்று சத்தம் போட்டார். அவர் சத்தம் போட்டதற்கான காரணம் என்ன

*இன்றைய தினத்தைச் சவாலாக எடுத்துக்கொள்ளும்போது நாளைய தினம் எளிதாகிறது.*

என்று மகாலட்சுமிக்கும், ஆதிசேஷனுக்கும் புரியவில்லை. எனவே அவர்கள் தங்கள் சந்தேகத்தை மகாவிஷ்ணுவிடமே கேட்டார்கள். திருவாதிரை நாளான இன்று சிவன் ஆடிய ஆனந்த தாண்டவத்தை ஞானக்கண்ணால் பார்த்தேன் என்றார் மகாவிஷ்ணு. அந்தத் தாண்டவத்தைப் பற்றிச் சொல்லச் சொல்ல ஆதிஷேசனுக்கு உடல் சிலிர்த்தது. ஆதிஷேசனின் உடல் சிலிர்த்ததற்கான காரணத்தைப் புரிந்துகொண்ட மகா விஷ்ணு "ஆதிசேஷா! உனது ஆசை எனக்குப் புரிகின்றது; அதை நீ பார்க்கவேண்டும் என்றால் பூவுலகில் பிறந்து தவம் செய்வாயானால் அந்த ஆனந்த தாண்டவத்தை நீயும் பார்க்கலாம்; சென்று வா" என்று அனுப்பி வைத்தார். ஆதிசேஷன் புவியில் பதஞ்சலி முனிவராக அவதரித்தார். அவரின் உடல் அமைப்பு இடுப்புவரைக்கும் மனித உடலும் இடுப்புக்குக் கீழ் பாம்புத் தோற்றமுமாக அமைந்திருந்தது. இவர் பல காலம் தவம் இருந்து வரும்போது திருவாதிரை நாள் அன்று சிதம்பரத்தில் தம் திருநடனத்தைச் சிவபெருமான் அவருக்குக் காட்டி அருளினார்.

திருவாதிரை நன்னாளில் நடராஜருக்கு நிவேதனமாகக் களி செய்து வைப்பார்கள். களி என்றால் ஆனந்தம் எனப் பொருள்படும். அதாவது அஞ்ஞானம் அகன்று மெய்ஞானம் தோன்றிய நிலையில் ஆன்மா ஆனந்த நிலையில் இருக்கும் சத், சித், ஆனந்தம் கிட்டும் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே திருவாதிரைக் களி நிவேதனம் ஆகும்.

அரிசிமா, பயற்றம் பருப்புமா, சீனி அல்லது சர்க்கரை, தண்ணீர், ஏலக்காய், தேங்காய்த் துருவல், முந்திரிப்பருப்பு ஆகியவற்றைச் சேர்த்தே திருவாதிரைக் களி செய்யப்படும். திருவாதிரைக் களி இறைவனுக்கு எப்படி வந்தது என்பதற்கு ஒரு கதை உள்ளது. சேந்தன் என்ற சிவபக்தன் விறகு வெட்டி விற்று அதன்மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தான். தினமும் அவன் சிவனடியார் ஒருவருக்கு உணவு அளித்த பின்புதான் சாப்பிடுவான். ஒருநாள் மழை பெய்யவே விறகெல்லாம் ஈரமாகிப் போனதால் அவ் விறகுகளை விற்கமுடியாமல் போனது. அன்று அவனது வீட்டுக்கு ஒரு சிவனடியார் வந்தார். அவருக்கு உணவு கொடுக்க வேண்டுமே? கையில் பொருள் இல்லாமல் எப்படி அவருக்கு உணவு கொடுப்பது என மனைவியிடம் கூறிக் கவலைப்பட்டான். "வீட்டில் கொஞ்சம் அரிசிமா இருக்கின்றது. அத்துடன் வெல்லத்தையும் கலந்து களி செய்து கொடுப்போம்" என்று சொல்லி அவருக்குக் களி செய்து கொடுத்தார்கள். அதைச் சாப்பிட்ட சிவனடியார் சந்தோஷமாகப் புறப்பட்டுப் போனார்.

அடுத்தநாள் திருவாதிரை நாள் என்பதால் சேந்தனும் அவன் மனைவியும் தில்லையம்பதிக்குச் சென்றார்கள். அங்கு சிவனுடைய வாயில் களி உண்டதற்கான அடையாளமாகக் களி வாயில் ஒட்டிக்கிடக்க, சேந்தன் வீட்டிற்கு வந்து களி உண்டது சிவன்தான் என்று அறிந்து, மக்கள் பெரும் திரளாகக் கூடி சேந்தனையும் மனைவியையும் வாழ்த்தினார்கள். அன்றில் இருந்துதான் திருவாதிரை அன்று களி நிவேதனம் செய்யும் பழக்கம் வந்தது.

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நன்னாளில் மேற்கொள்ளப்படும் இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. இவ்விரதத்தை அனுட்டிப்பதால் நல்ல மணவாளன் கிடைப்பார். தாலி பலம் பெருகும். பாவங்கள் நீங்கும். அறிவும் ஆற்றலும் பெருகும். இவை போன்ற எண்ணற்ற பலன்களைக் கொடுக்கும்.

*கடுமையான போராட்டத்தின் பலனாகக் கிடைக்கும் வெற்றிகளே மதிப்புடையவை.*

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்- (தொடர்ச்சி...)

**– செல்வி சி. நிலா** அவர்கள் –

அன்று இரவு வெருகலம் பதியின் ஆலய மண்டபத்தில் கண்ணயர்ந்தோம். பிரயாணச் சோர்வும்- இரவு உணவு உண்ட களைப்பும் ஒருங்குசேர, மறுநாள் விடிந்தது கூடத் தெரியாத அளவிற்கு ஆழமான தூக்கம் எம்மைப் பற்றிக்கொண்டது. எம்முடன் வந்த பெரியவர்கள் எழுந்து தமது காலைக்கடன்களை முடித்து ஆலய முன்றலில் பல விடயங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். நாம் எழுந்ததும் ஆலயத்திற்கு சமீபமாக மகாவலி கங்கையின் ஒரு கிளையாகப் பாய்ந்துகொண்டிருந்த ஆற்றில் குளித்து எமது காலைக் கடன்களை முடித்தோம். ஆற்றில் முதலை இருக்கும் காரணமாக பாதுகாப்பு கருதி நாம் குளிக்கும் இடத்திற்கு பாதுகாப்பாக வலை கட்டியிருந்தார்கள். ஆற்றில் இறங்குவதற்கு முன்பே எமக்கு இவ்விடயம் சம்பந்தமாக முன் அறிவித்தலும் இருந்ததைக் கருத்தில் எடுத்து நாம் அனைவரும் குளித்து ஆலயத்தில் ஏழு மணிக்கு ஆரம்பமாக இருந்த பூசையில் கலந்துகொண்டோம்.

எல்லோருக்கும் தேனீர தயாரிக்குமாறு எங்களோடு வருகைபுரிந்த புத்தூரைச் சேர்ந்த தெய்வேந்திரம் அண்ணனுக்கும் எனக்கும் ஐயா கூறியதன் பிரகாரம் தேனீர தயாரித்து அனை வருக்கும் காலையில் முதல்வேலையாக வழங்கினேன். அதன்பின் ஆலயத்தில் நடைபெற்ற காலைப்பூசையில் பங்குபற்றி பூசை முடிந்தபின் எம்மோடு வருகைபுரிந்த திரு ஆனந்தராஜா



(அன்னைதாசன்) அவர்களது பஜனை நிகழ்வு ஆரம்பமாயிற்று. ஐயா முதற்கொண்டு நாம் அனைவரும் பஜனை வழிபாட்டில் ஈடுபட்டு வெருகல் கதிர்வேலாயுத சுவாமியின் அருளைப்

*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தியைப் படைத்தது.*

பெற்றோம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் பஜனை நிகழ்வானது பக்திபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் நடைபெற்றது. இவ் வழிபாட்டில் ஆலய பரிபாலன அங்கத்தவர்களும் இணைந்து கொண்டிருந்தனர்.



பூசை வழிபாடு முடிந்ததும் எமக்குரிய காலை உணவாக பாணும் பருப்பும், அவித்த கடலையும் ஆலய நிர்வாகத்தினரால் எம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. வயிறார உண்டபின் திரு குகராஜா அவர்கட்கும் அவரோடு சேர்ந்த குழுவினருக்கும் நன்றி கூறியபின் எமது யாத்திரை மட்டக்களப்பினூடாக ஆரம்பமாயிற்று. அப்பாதையினூடாக முதன்முறை நாம் போகும் காரணத்தினால் ஐயா அங்கே நீண்டகாலமாக வதியும் உறவினராகிய உதயண்ணாவையும் அவரது மகனையும் எமக்கு வழிகாட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவ்வகையில் அவர்கள் இருவரும் சித்தாண்டியில் எம்மோடு இணைந்திருந்தனர். அவர்களது



வழிகாட்டலில் செங்கலடி சிவதொண்டன் நிலையம், சித்தாண்டி, மண்டூர், காமாட்சி அம்மன் ஆலயம் போன்ற பிரசித்திபெற்ற ஆலயங்களைத் தரிசித்தவண்ணம் மாமாங்கப் பிள்ளையார்

*அழகான உருவத்தைவிட அழகான நடத்தையே மிக நல்லது.*

ஆலயத்தை அடைந்தோம். அன்றைய எமக்குரிய மதிய உணவினை ஐயா அவர்கள் ஏற்கனவே மாமாங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையோடு தொடர்பினை ஏற்படுத்தி ஒழுங்கு செய்திருந்தார். ஆனாலும் நாம் போன சமயம் ஆலயத்தில் கொடியேற்ற நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நேரமோ 1 மணியை அண்மித்து விட்டது. உற்சவமோ முடிந்தபாடில்லை. நேரம் பிந்தப் பிந்த ஐயாவின் பொறுமையைச் சோதிக்கும்படியாக இருந்தது. எமது குழுவினரும் ஆலய வழிபாட்டை முடித்து மதிய உணவிற்காக காத்திருந்தோம். ஆனாலும் ஆலய பூசை வழிபாடு முடிந்தபாடில்லை. இவ்விடயம் சம்பந்தமாக பரிபாலன சபையோடும் தொடர்புகொள்ள முடியவில்லை.

நேரமோ 1.30 மணியைத் தாண்டி விட்டது. ஐயா உடனடியாக வழிகாட்டியாக வந்திருந்த உதயன் அண்ணாவை அழைத்து நாம் அனைவரும் உணவு உண்ணத்தகுந்த ஒரு கடைக்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்தார். ஆனாலும் அவரும் நேரம் பிந்திவிட்டது. கடையில் சாப்பாடு கிடைக்குமோ என்று தெரியவில்லை. சரி போய்ப் பார்ப்போம் என்று கூறி வாவிக்கு சமீபமாக உள்ள ஒரு கடைக்கு எம்மை அழைத்துச் சென்றார். அசைவ உணவு எங்கும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சைவ உணவு எடுப்பதென்பது மிகவும் கடினம் என்று கூறியதன் பிரகாரம் அக்கடையினுள் நுழைந்து ஐயா அவர்கள் உரிமையாளரிடம் பேருந்தில் வந்த சுமார் நாற்பது பேருக்கு உரிய மரக்கறிச் சாப்பாடு இருக்கின்றதா? என்று வினவியபொழுது அக் கடை உரிமையாளர் ஐயாவைப் பார்த்து ஏதோ ஒரு எண்ணத்தில் மதிய உணவினை வழமையிலும் பார்க்கக் கூடச் செய்துவிட்டோம். அவற்றை என்ன செய்யப்போகிறேன் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இறைவன் காப்பாற்றி விட்டார். எல்லோரையும் அழைத்து வாருங்கள் என்று கூறியதன்பிரகாரம் நாம் அனைவரும் கடையினுள் நுழைந்தோம். அப்போதுதான் கவனித்தேன் எமக்குரிய உணவு வகைகள் அனைத்தும் பாத்திரங்களில் இப்போது திருமண மண்டபங்களில் இடம்பெறுவதுபோல ஒரு பெரிய மேசையில் வைக்கப்பட்டிருந்தது. ஆர்வ மிகுதியால் நான் அப்பாத்திரங்களைத் திறந்து பார்த்தபொழுது நாலைந்து கறிகளும், வடை, பாயாசம், பீா உட்பட அனைத்தும் எமக்காக செய்யப்பட்டிருந்ததுபோல இருந்தன.



கடை உரிமையாளர் எம்மைப் பார்த்து உங்களுக்குத் தேவையானவற்றைப் போட்டுச் சாப்பிடுங்கள் என்று கூறியதன்பிரகாரம் அனைவரும் தத்தமக்கு விருப்பமானவற்றை தேர்ந்தெடுத்து தமது மதிய உணவினை நிறைவு செய்தனர். நானும் அவர்களோடு உணவினை அருந்தினாலும் எனது மனமோ சந்நிதி வேலவனது

*அகங்காரம் வரும்போது அதன்பின்னே அவமானமும் வந்துசேரும்.*

அருளையும், ஐயாவின் எண்ணப்படி சந்நிதி வேலவன் உடன் நின்று அருள்புரிவதையும் கண்ணால் காணக்கூடியதாகவும் அனுபவவாயிலாகவும் உணரக்கூடியதாகவும் இருந்தது. அதற்கமைவாக எமக்குரிய உணவுச் செயற்பாட்டை முடித்த ஐயா கடை உரிமையாளரை அணுகி நாம் யாழ்ப்பாணத்தில் செல்வச்சந்நிதியிலிருந்து வந்திருக்கிறோம். நிறைவான உணவை எமக்குக் கிடைக்கச் செய்த சந்நிதி வேலவனுக்கும் உங்களுக்கும் நன்றி என்று கூறி எமது உணவுக்குரிய நிதியினை செலுத்தியபோது அவரும் சந்நிதியான்தான் உங்களுக்காகிய உணவினை ஏதோ ஒரு எண்ணத்தின்மூலம் என்னைக் கொண்டு செய்வித்திருக்கிறான் என்று கூறி உணவுக்குரிய பெறுமதியில் ஒருபகுதியினை விட்டுக்கொடுத்து மிகுதிப் பணத்தைப் பெற்றுக்கொண்டார். கடையினுள் இருந்து வெளியே வந்து எமது குழுவினரைப் பார்த்தபொழுது அனைவரும் பீடாவை மென்றபடி உணவின் தராதரத்தை மெச்சியபடி பேருந்தினுள் அமர்ந்திருந்தார்கள். நானும் என் பங்கிற்கு ஒரு பீடாவுக்குப் பதில் இரு பீடாவை எடுத்துக்கொண்டு பேருந்தில் ஏறி எனக்குரிய இருக்கையில் அமர்ந்திருந்தாலும் எனது மனமோ ஐயாவின் செயலாற்றலை நினைத்ததோடு, ஐயா ஆற்றும் இச்செயற்பாடுகள் காரணமாக அவரது முன்யோசனையுடனான செயற்பாடுகள் வளர்ந்துகொண்டு போவதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது என்று கூறி இத் தொடரின் இப்பாகத்தை நிறைவு செய்கின்றேன். (தொடரும்...

## ஆற்றங்கரை வாழும் ஆறுமுகனே

கடலிலே மீன்பிடித்த கதிர்காமரை அழைத்து
கதைகள் பல விரித்து நின்றாய்
கணப்பொழுது வேளை தன்னில் கதிர்காமம் கூட்டிச்சென்று
கனபூசை வழிமுறைகள் காட்டி நின்றாய்
பூர்வீகக் கதை கூறும் பூவரச மரத்தடியில்
பொற்கோயில் கொண்டெழுந்த முருகா - மனம்
புண்பட்டு வருவோரின் துன்பங்கள் தீரவே
புதுவேகம் கூட்டி நின்றாய்
நோய் என்றும் நொடி என்றும் நெட்டூரம் விலக
போட்டிகள் பொறாமைகள் பொல்லாமைகள் அகல
நீக்கமற வாழ்வில் நிம்மதி தளைத் தோங்க
ஆக்கமுறு அடியவரின் வழிபாடுகள் நேர்த்திகள் எத்தனையோ
தீராத நோய் தீர்க்கும் உன் தேனாற்றில் நீராடி
தெண்டனிட்டு வலம் வந்து திருநீறும் நூலும் பெறுவோரும்
வான் பறவை வடிவம் பூண்டு வண்ணமயில் வாகனனே
உன்னை வந்தடையும் காவடிகளும் தான் எத்தனையோ
அத்தனைக்கும் அருமருந்தாய் அபயக்கரம் கொடுப்பாய்
ஆறுபடை வீடுதனில் அமர்ந்திருக்கும் சோதியே
குன்று தோறாடி வந்து குறைகள் எல்லாம் தீர்த்தருள்வாய்
தொண்டைமான் ஆற்றங்கரை வாழும் ஆறுமுகனே.

-முருகுப்பிள்ளை செல்லத்தம்பி-

*கட்டுப்பாடான சீரான வழியில் நம்மை நடத்திக்கொண்டால் பண்பு வளரும்.*

# கதிர்காமம் நல்லூர் நந்தவனம்

– வல்வையூர் அப்பாண்ணா –

**பொது:**

உலகத்திலே மக்கள் முதன்முதலில் தோன்றிய இடம் குறிஞ்சி நிலமென்பது ஆராய்ச்சியாளர் துணிவு. குறிஞ்சி நில மக்கள் சூரியனையே கடவுளாக வழிபட்டனர். அறிவு முதிர முதிர மக்களை இயக்குவதற்கு வேறொன்றின் சக்தி இருக்க வேண்டுமென ஆராய்ந்து அதன் இயல்பினைக் கண்டுகொண்டனர். ஞாயிற்றினூடாகத் தெரியவந்த சக்தியோடு கூடிய உயிர்ப் பொருளாகிய பரமசிவத்தினிடம் என்றும் இளமையும் அழகும் காணப்பெற்று வியந்து மகிழ்ந்து, அப்பொருள் படும்படியாக "முருகன்" எனப் பெயரிட்டு வழிபட்டு வந்தனர். முருக வழிபாட்டிற்கும் சிவ வழிபாட்டிற்கும் பேதம் ஒன்றுமில்லை- இரண்டும் ஒன்றேதான் என்பதைக் கீழ்க்காணும் கந்தபுராணப் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

"..... ஆதலின் நமது சத்தி யறுமுக னவனும்
யாமும் பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு
நின்றான். ஏதமில் குழவி போல்வான் யாவையு
முணர்ந்தான் சீரும் போதமு மழிவில் வீடும்
போற்றினர்க் கருள வல்லான்"

முருகன் எனும் சொல்லுக்கு என்றும் இளமை அழகுடையவன் என்பது பொருள். இதனால் பழங்காலத் தமிழ் மக்கள் ஒவ்வொரு பொருளிடத்தும் அழகினை ஊடுருவிப் பார்த்து வந்தனரென்பதும், அவ்வழகின் கவர்ச்சியால் அதனையே கடவுளாகப் போற்றி வந்தனர் என்பதும் தெரியப்படும்.

முருகனுடைய மூன்று முகங்களும் பொழியும் கருணையைப் போற்றாதார் இல்லை. "மூவிரு முகங்கள் போற்றி... முகம் பொழி கருணை போற்றி..." என்றும்,

"அருவமு முருவு மாகி
யநாதி யாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன னுலக முய்ய"

என உள்ளங் குளிரக் கூறியிருப்பதுவும் நாம் சிந்தையில் நிறுத்தவேண்டியது. முருகக் கடவுள் தமிழ்ச் சங்கத்தே வீற்றிருந்து தமிழாய்ந்தார் எனக் குறிக்கப்படுவதால், தமிழர்கள் பழங்காலந்தொட்டு வழிபட்டு வந்த கடவுள் "முருகக் கடவுளே" என்பது பெறப்படும். அருண கிரிநாதரின் "பொதுத் திருப்புகழ்" 16ம் பாடலில் "மதனேவிய கணையாலிரு...." எனத் தொடங்கும் திருப்புகழின் இறுதிவரி "... வெயில் வீசிய அழகா*தமிழ் பெருமாளே*" எனக் குறிப்பிடப்படுவதும் முருகன் தமிழ்க்கடவுள்தான் என்பதையும் உறுதிபடக் கூறுகிறது.

இன்னும் தமிழ் நூல்கள் பல முருகன் பெருமையை எடுத்துரைத்தாலும் அவன் எழுந்தருளியிருக்கின்ற ஆறுபடை வீடுகளும் தமிழகத்திலேயே அமைந்திருத்தலும், மறுக்க முடியாத பெருஞ்சான்றுகள். மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலும் "சேயோன் மேய மைவரை யுலக" எனக் குறிஞ்சி நிலக் கடவுளாக முருகன் கூறப்படுவதால், அவன் தமிழர்க்கேயுரிய கடவுள் என்பதில் ஐயமில்லை. முருகனது கமலத்தாளினையும் தோளினையும் சிந்திப்போமாயின் நம் பழவினைகளெல்லாம் பறந்தோடிவிடும்.

தமிழகத்தில் முருகன் எழுந்தருளியிருக்கும் அறுபடை வீடுகளிலும்- ஏனைய முருக ஸ்தலங்களிலும், ஈழத்தில் கதிர்காமம், கந்தவனம், நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி முதலான முருகன் ஸ்தலங்களிலும் மக்கள் பக்திப் பரவசத்துடன் அலை அலையாகச் சென்று வழிபாடியற்றுவதையும் இன்று நாம் பார்த்து வருகிறோம்.

அருணகிரிநாதர் தனி முருகன் கோவில்களையும், முருகன் வீற்றிருக்கும் ஏனைய பல ஸ்தலங்களையும் தரிசித்துத் திருப்புகழ் பாடியுள்ளார். அருணகிரிநாதர் பாடிய அத்தனை திருப்புகழையும் 12 தொகுதிகளாக வகுத்து திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வழங்கியுள்ள பதவுரையும் - விளக்கவுரையும் அற்புதமானவை. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் வரிசையில் ஈழத்திருமணி நாட்டின் கதிர்காமம்மீது 13 திருப்புகழும், கந்தவனம்மீது 1 திருப்புகழும், நல்லூர்மீது 1 திருப்புகழும் காணப்படுகிறது. இத் திருப்புகழ் ஒவ்வொன்றிலும் அந்தந்த ஸ்தலத்தின் அன்றைய சூழல் அற்புதமாக வர்ணிக்கப்பட்டிருப்பது ஆச்சரியமானது.

## கதிர்காமம்:

முருக வழிபாட்டுத் திருப்பதிகளுள் மூர்த்தி- தலம்- தீர்த்தம் எனும் மூன்றாலும் புகழ்பெற்றுத் திகழ்வது ஈழநாட்டின் தென்பாலுள்ள திருக்கதிர்காமமாகும். "கதிர்காமம்" எனும் பெயருக்குப் பலவிதமான காரணங்கள் கூறப்பட்டு வந்தாலும், தமிழ்ச் சொல் எனக்கொண்டு கதிர்காமம் என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் (கதிர்- ஒளி; காமம்- அன்பு) கலந்து விளங்குமிடம் எனப் பலராலும் கூறப்படுவது பொருத்தமாகவே உள்ளது.

ஈழநாட்டின் தென்பாகத்தில், ஊவா மாகாணத்தில் மாணிக்க கங்கையின் இடது கரையருகே கதிர்காமக் கடவுள் கோயில் கொண்டிருக்கிறார். கதிர்காம சுவாமி, கதிரை நாயகன், கதிரைவேலன், மாணிக்கசுவாமி, கந்தக்கடவுள் எனும் பல்வேறு திருநாமங்களும் கதிர்காம முருகனுக்கு வழங்கப்பட்டு வருவன. கதிர்காம முருகன்மீது அருணகிரிநாதர் 13 திருப்புகழ் பாடியிருக்கிறார் என்றும், வேறு சிலர் 25க்கும் மேற்பட்ட திருப்புகழ் மாலைகள் சாற்றியுள்ளார் என்றும் வித்தியாசமான தகவல்கள் உண்டு. 2019 புரட்டாதி மாத "ஞானச்சுடர்" சஞ்சிகையில் கதிர்காமத்தின்மீது 31 திருப்புகழ் பாடப்பட்டிருப்பதாக ஒரு கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பதுவும் நமது கவனத்திற்கு உரியது.

*வாழ்க்கையில் மகிழ்ச்சி பிறரை மகிழ்விப்பதில்த்தான் இருக்கிறது.*

கதிர்காமத்திற்கு கதிருகாம, கதிர்காம, கதிரகாம, கதிரை எனப் பல பெயர்கள் வழங்கியிருப்பது அருணகிரி வாக்கால் அறியக் கிடக்கிறது.

"மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர் காமப் பெருமாள் காண்..."

என்றும்

"கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே..."

என்றும்,

"வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே..."

என்றும்,

"கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத் தமிழ் நாடா..."

என்றும் பலவாறாகத் திருப்புகழின் இடை வரிகளிலும்,

.... அரியகதிர் காமத்தில் உரியா பிராமனே
.... கதிர்கா மக்கிரிப் பெருமாளே
.... தோமில் கதிர்காமப் பெருமாளே

என்று திருப்புகழின் கடைசி வரியிலுமாக கதிர்காம முருகனைப் போற்றிப் பாடியுள்ளமையும் பார்க்கிறோம்.

".... ஈழத்தினிற் கதிர்காமக்கிரிப் பெருமாளே" என முடிவுறும் திருப்புகழை முழுமையாகப் பார்ப்போம்.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்
டருபரா சக்தியுட் சிவமாகித்
துரியமே லற்புதப் பரமஞா னத்தினிற்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்தியப்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூழ் தெற்றிசைப் பயிலு*மீ ழத்தினிற்*
*கதிரகா மக்கிரிப்* பெருமாளே.

**கந்தவனம்:**

கந்தவனம் அருள்மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம் எனப்படுவது பொதுவாக "கந்தவனம்" எனும் திருநாமத்துடன் அழைக்கப்பட்டு வருகிறது. இம் முருகஸ்தலம் வடமராட்சி யின் பருத்தித்துறை- வல்வெட்டித்துறை ஆகிய நகரங்களுக்கிடையே கரையோர பொலிகண்டி கிராமத்தில் அமைந்துள்ள பழம் பெருமை வாய்ந்த முருகன் ஸ்தலமாகும்.

அருணகிரிநாதர் கந்தவனம் முருகன்மீது ஒரு திருப்புகழ் பாடியருளியமையால் இக் கோவில் அருணகிரிநாதர் காலத்திற்கும் முற்பட்டது என அறுதியிட்டுக் கூறிடமுடியும். தெட்சண கைலாச புராணத்தின் 9ம் அத்தியாயத்தில் கந்தவனம் கோவில்பற்றி குறிக்கப்பட்டிருப்பது கோவிலின் பழமையைப் பறைசாற்றுவதாக உள்ளது. அண்மைக் காலம்வரை உடுப்பிட்டி அ.மி. பாடசாலையில் கற்பித்து வந்த மறைந்த நீலகண்டன் ஆசிரியரின் பூட்டனாரான உடுப்பிட்டியூர் அ. சிவசம்புப்புலவர் இயற்றிய நான்மணிமாலை பதிப்பினில் உள்ள பாடல்களும் கந்தவனம் பற்றிக் கூறுகிறது.

கந்தவனம் முருகன் ஆலயம் திக்கம் செல்லையாபிள்ளையின் பரம்பரையினரால் தனியுரிமையுடன் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குமரகுரு மணி சிவப்பிரம்மஸ்ரீ சந்தானராம சர்மா வைத்தியநாதக் குருக்கள் அவர்கள் கோவிலின் பிரதம குருக்களாக 1974 முதல் முருக பணி செய்து வருகிறார்.

மிகப்பெரிய தூண்களும் தடித்த சுண்ணாம்புச் சுவர் அமைப்புடனான பழைய கோவில் அமைப்பினை முற்றாகத் திருத்தி அமைத்திடத் திட்டமிடப்பட்டு 21.01.2019 திங்கள் தைப்பூசத் தினத்தன்று கல்யாண வேலவ சுவாமி கோவில் மூலாலய அடிக்கல் நாட்டு விழா வெகு சிறப்பாக நடந்தேறியது. திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பிரதமகுரு உட்பட தமிழ்நாட்டின் பிரபல முருகன் ஆலய பிரதம குருக்கள்மார் பலபேரும் இந்த மூலா லய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

98 கோடி உத்தேச செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இக் கோவிலின் புனர் நிர்மாணப் பணியானது- முழுமையான கருங்கற் கோவிலாக- 3 வருட காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டு வேலைகளும் நடைபெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகளுக்காக கோவிற் புறவீதியின் தென்மேற்கு மூலையில் பாரிய கருங்கற் பாளங்கள் இறக்கப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம்.

பொதுவாக கோவில்களின் மகோற்சவ விளம்பரம் போன்ற வெளியீடுகளின் தலைப்பினில் "ஸ்தோத்திரங்கள்" இருப்பதைப் போன்று, கந்தவனம் கோவில் சார்பான சகல வெளியீடுகளிலும் அருணகிரிநாதரின் கந்தவனம் திருப்புகழ் தலைப்பினில் மிளிர்வதை நாம் பார்க்கிறோம்.

"உறவு சிங்கிகள்..." எனத் தொடங்கும் கந்தவனம் திருப்புகழ் முழுமையாகக் கீழே தரப்பட்டுள்ளது.

கந்தவனநாதர்மீது அருணகிரிநாதர் பாடியது.

உறவு சிங்கிகள் காமாகாரிகள் முறைமசங்கிக
ளாசா வேசிகள் உதடுகன்றிகள் நாணாவீணிகள் நகரேகை
உடைய கொங்கையின் மீதேதாசிகள் பிணமெனும்படி
பேய் நீராகிய உணவையுண்டுடை சோர்கோமாளிகள் கடல்ஞாலத்

*தைரியமுள்ளவனால் மட்டுமே நேர்மையாக நடக்க முடியும்.*

தறவு நெஞ்சுபொ லாமாபாவிகள் வறுமைதந்திடு
பாழ்மூதேவிகள் அணிநெருங்கிக ளாசாபாசன மடமாதர்
அழகுயர்ந்த பொய் மாயாரூபிகள் கலவியின்பமே
னாவேசோருதல் அலமலந்தடு மாறாதோர்கதி அருள்வாயே
பறவையென்கிற கூடார்மூவரண் முறையிடுந்தமர்
வானோர் தேரரி பகழிகுன்றவி லாலேநீறெழ ஒருமூவர்
பதநினைந்து விடாதேதாள்பெற அருள்புரிந்த
பிரானார் மாபதி பரவு *கந்தசுவாமீ கானகம்* அதின்மேவும்
குறவர் தங்கள் பிரானேமாமரம் நெறுநெறென்றடி
வேரோடே நிலை குலையவெற்றிகொள் வேலேவிய புயவீரா
குயில்கள் அன்றில்கள் கூகூகூவென மலர்கள் பொங்கிய
தேன் வீழ் காமிசை குறவர் சுந்தரி யோடேகூடிய பெருமாளே.
(கந்தசுவாமீ கானகம்- கந்தவனம்)

## நல்லூர்:

பண்டைய நல்லூர் எவ்வாறு அமைந்திருந்தது என்று அறிய பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. சிங்கை ஆரியர்கள் காலத்தில் எழுதப்பட்ட கைலாயமாலை, வையாபாடல் போன்ற நூல்களும், ஒல்லாந்தர் காலத்தில் (1658-1796) எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை நூலும் நல்லூரின் பழைய வரலாற்றை அறிய உதவியாக உள்ளன. அன்றைய நகர் முத்திரைச் சந்தையை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது. அதன் அண்மையில் பண்டைய நல்லூர் கந்தசாமி ஆலயம் இருந்தது. நகரைச் சுற்றி மதில்கள் கட்டப்பட்டதுடன் நான்கு திசைகளிலும் நான்கு நுழைவாயில்களுடன் அங்கு காவற் தெய்வங்களுக்கான கோவில்களும் அமைந்திருந்தன. இந்தத் தகவல்கள் 1519- 1619க்கு இடையில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் "கைலாய மாலை" நூலில் காணப்படுகிது.

நல்லூர் யாழ்ப்பாண அரசின் தலைநகரமாக இருந்ததற்கு ஆதாரமாக இன்று இருப்பவை, அக்கால அரண்மனை இருந்ததாகக் கருதப்படும் "சங்கிலித் தோப்பு" எனப்படும் நிலமும்- அதிலுள்ள ஒரு நுழைவாசல் வளைவும், அதற்கு அண்மையிலுள்ள "மந்திரிமனை" எனப்படுகின்ற ஒரு வீடுமாகும். இத்தகைய பழம் பெருமை வாய்ந்த நல்லூர் முருகன் திருத்தலத்தின்மீது அருணகிரிநாதர் 1 திருப்புகழ் பாடியுள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2018 நான்காவது அனைத்துலக முருகபக்தி மாநாட்டுச் சிறப்பு மலரில் வெளியான யாழ்ப்பாண நல்லூர் மீதான அருணகிரிநாதரின் "பூத்தார் சூடுங் கொத்தலர் சூழலியர்" எனத் தொடங்கும் திருப்புகழை முழுமையாகக் கீழே பார்க்கலாம்.

பூத்தார் சூடுங் கொத்தலர் சூழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்

போற்றார் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ரமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்பூர மருகமத மகிலாரம்

மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கான் ஞானம் பெற்றினி வழிபட வருள்வாயே

ஆத்தாண் மாறங் கச்சிக நிமையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி திரிலோகம்

ஆக்கா யாவும் பற்றிய பரிபுரை
நோக்கா டேதுஞ் செற்றவ டிருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவன் பெருசேயே

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழுருடரு முருகோனே

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வாழும் பொற்பரவை நெடுமதில்
***யாழ்ப்பா ணாயன் பட்டின*** மருவிய பெருமாளே.

## கோபம்

கோபக்கார மகனிடம் ஒருநாள் அவனுடைய அப்பா சுத்தியலையும் நிறைய ஆணிகளையும் கொடுத்து "இனி உனக்கு கோபம் வருகையில் வீட்டின் பின் சுவரில் ஆணி அடி!" என்றார்.

முதல்நாள் 10, மறுநாள் 07, பின்பு 05,02 ஆணிகள் என குறைந்துகொண்டே வந்தது. மொத்தமாக 45 ஆணிகளை அடித்துவிட்டு இனி கோபம் வராது என்றான். அதற்கு அப்பா, "இனி கோபம் வராத நாளில் ஒவ்வொரு ஆணியாகப் பிடுங்கிவிடு" என்றார். 45 நாளில் அடித்த ஆணிகளைப் பிடுங்கி விட்டான். அதற்கு அப்பா, "ஆணிகளை பிடுங்கிவிட்டாய். ஆனால், அந்த ஓட்டைகளை என்ன செய்வாய்? உன் கோபமும் இதுபோலவே பலரைக் காயப்படுத்தியிருக்கும் அல்லவா?" என்றார். இளைஞன் வெட்கித் தலைகுனிந்தான்.

*தன்மானமே ஒழுக்கத்தின் அடிப்படை.*

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

03.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- "மங்கள இசை"
வழங்குபவர்கள்:- மறவனூர் T.M. வாசகர் குழுவினர்
வருடாந்த திருவாசக விழா

---

10.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
"இன்னிசை"
(பக்கவாத்திய சகிதம்)

---

17.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "முருகன் பெருமை"
வழங்குபவர் :- திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்
[சைவப்புலவர்]

---

24.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "கந்தபுராணம்" **(தொடர்)**
வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

31.01.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ஆறு. திருமுருகன் அவர்கள்
[தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்]
மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்
[இளை. அதிபர்]

265ஆவது மலர்

பதிவு இல: QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

